பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2035 மார்கழி 23 வெள்ளிக்கிழமை (07.01.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :42

## நிவாரணப் பொருள்களைக் கட்டணமின்றி அனுப்ப 'எக்ஸ்போ'வின் சரக்கு விமான சேவை

யாழ்ப்பாணம்,ஜன.7

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பொருள்களை ஏற்றி இறக்கும் பணிக்காக இலவச விசேட விமான சேவை ஒன்றை 'எக்ஸ்போ' நிறுவனம் இன்றுமுதல் ஆரம் பிக்கின்றது.

அனர்த்தம் பாதித்த கிழக்கு, வடக்கு மற்றும் தென் பகுதிகளுக்குக் கட்டணமற்ற சேவைகள் இடம்பெறும்.

மட்டக்களப்பு, அம்பாறை, வீரவில மற்றும் பலாலி ஆகிய விமான நிலையங்களுக்கு நிவாரணப் பொருள்கள் எடுத்துச்செல்லப்படும்.

நாட்டின் எந்தப் பகுதியில் இருந்தும் நிவாரணப் பொருள்களை அனுப்பவிரும்புவோர் இந்தச் சரக்கு விமான சேவையைப் பயன்படுத்த முடியும் என்று 'எக்ஸ்போ' நிறுவனம் அறிவித்திருக்கின்றது.

விமானம் தரையிறங்கக்கூடிய வசதியுள்ள விமானநிலையம் அல்லது விமானத் தளத்துக்கு நிவாரணப் பொருள்களை எடுத்துச்செல்ல வசதி செய்யப்படும் என்று 'எக்ஸ்போ' விமான சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு மிகவும் அத்தியாவசியமாகத் தேவைப்படும் பொருள்களை மாத்திரம் இந்த விமான சேவையில் கட்டணமின்றி அனுப்பி வைக்கமுடியும்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## உயிரிழந்தோருக்கு 15 ஆயிரம் ரூபா!

யாழ்ப்பாணம்,ஜன.7

இலங்கையில் ஏற்பட்ட சுனாமி அலையினால் உயிரிழந்த மக்களின் மரணச் சடங்கு கொடுப்பனவாக 15 ஆயிரம் ரூபாவை வழங்குமாறு சமூக சேவை ஆணையாளர் சுற்றுநிருபம் ஒன்றை மாவட்டச் செயலகங்களுக்கு அனுப்பியுள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு ஒவ்வொரு குடும்பத்துக்கும் சமையல் உபகரணம் வாங்குவதற்காக 2500 ரூபா வழங்கவேண்டும் என்றும் அரசு தீர்மானித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் - படையினர் திருமலையில் சந்திப்பு

திருகோணமலை,ஜன.7

திருகோணமலை மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினருக்கும் இராணுவப் பொலீஸ் அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பு காலை 10.35 மணி தொடக்கம் 11.50 மணி வரை நடந்தது.

விடுதலைப் புலிகளின் தரப்பில் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன், திருகோணமலை மாவட்ட சமாதானச் செயலகப் பொறுப்பாளர் நெடுமாறன் ஆகியோரும் இராணுவத்தினரின் தரப்பில் திருகோணமலை மாவட்ட கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜனரல் சுமித்பாலசூரிய, பிரிகேடியர் உடுமலகெல, மேஜர் என்.குணநாயக்கா ஆகியோரும் திருகோணமலை மாவட்ட பொலீஸ்

(16 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்த முனைப்பு வேண்டாம்!

## ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை

கொழும்பு,ஜனவரி7

**நாடு ஒரு மோசமான சூழ்நிலைக்குள் அகப்பட்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில் யுத்த முனைப்புகளுடன் காய் நகர்த்தலில் ஈடுபட முயன்றால் அது பாரிய - மோசமான - விளைவுகளை ஏற்படுத்தும். எனவே, அத்தகைய முயற்சிகளில் ஈடுபடாதீர்கள்!**

**- இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவரும், ஐ.தே.கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க.**

நேற்று மாலை நாட்டு மக்களுக்குத் தொலைக்காட்சி மூலம் தாம் ஆற்றிய உரையிலேயே இவ்வாறு கோரிக்கை விடுத்தார் அவர். அந்த உரையில் அவர் மேலும் கூறியதாவது:-

டோக்கியோ மாநாட்டில் எமக்கு உதவுவதற்கு முன்வந்த நாடுகளே இப்போதும் இந்த அனர்த்த சமயத்திலும் அதன் பாதிப்புகளிலிருந்து மீள்வதற்கு எமக்கு உதவமுன்வந்திருக்கின்றன.

நாடு இப்போது இக்கட்டான சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது. இந்தச் சமயத்தில் யாராவது யுத்த மனோநிலை கொண்டு செயற்படுவார்களேயானால் அது நாட்டுக்கும், சமூகத்துக்கும் செய்யும் பெரும் துரோகமாகும்.

நாங்கள் முதலில் புலிகளுடன் பேச்ச நடத்தவேண்டும்.

நாம் சமாதானத்தில் நாட்டம் கொண்டு செயற்பட்டால் சர்வதேச சமூகம் எம்முடன் இருக்கும்.

மாறாக, நாம் யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீறி, சமாதான நடவடிக்கைகளைக் கைவிட முயற்சிப்போமானால் நிவாரணம் வழங்க - உதவி வழங்க - முன்வந்த இந்த நாடுகளின் கூட்டமும் எம்மைவிட்டு விலகிப் போய்விடும்.

எனவே, சமாதான முயற்சிகளில் நாம் அக்கறை செலுத்தினால் மட்டுமே அவை தொடர்ந்தும் எமக்கு உதவும். நாடு, கடந்த இருபது வருடங்களாகப் பாரிய யுத்தமொன்றுக்கு முகம்கொடுத்தது. அந்த யுத்தம் காரணமாக மிகவும் மோசமான பொருளாதாரச் சீரழிவுக்கும் நாம் முகம்கொடுக்க வேண்டிய நிலையேற்பட்டது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

# நலன்புரி நிலையங்களை இராணுவம் வசம் ஒப்படைக்கும் உத்தரவை ரத்துச் செய்யுங்கள்!

## ஜனாதிபதிக்குத் தமிழ்க் கூட்டமைப்பு அவசர கடிதம்

திருகோணமலை,ஜன.7

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் வடக்கு - கிழக்கில் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களை இராணுவத்தினரைப் பொறுப்பெடுக்குமாறு ஜனாதிபதி விடுத்த உத்தரவை உடன் நீக்கும்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவசர கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் ஜனாதிபதிக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை அனுப்பிவைத்துள்ள கடிதத்தின் விவரம் வருமாறு:-

நலன்புரி நிலையங்களை இராணுவம் பொறுப்பேற்று நிர்வகிக்கவேண்டும் என்று நீங்கள் உத்தரவிட்டீர்கள் என அறிகின்றோம். இந்த உத்தரவு வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் உள்ள நலன்புரி முகாம்களுக்குப் பொருந்தும் என்பது தெளிவாகிறது.

வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளில் உள்ள நலன்புரி முகாம்களில் 95 சதவீதமானவற்றில் தங்கியிருப்போரில் பெரும்பாலானவர்கள் தமிழ்பேசும் மக்கள். அவர்களிலும் பெரும்பாலானவர்கள் தமிழ்மக்கள்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் அமெ.படையினர் நிவாரண நடவடிக்கை

### இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் வாஷிங்ரனில் தெரிவிப்பு

வாஷிங்ரன்,ஜன.7

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக இலங்கை வந்துள்ள அமெரிக்கப் படையினர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் மனிதாபிமான ரீதியில் செயற்படுவர் என்று வெள்ளைமாளிகை தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள பிரதிப் பேச்சாளர் அடம் எர்லி நேற்றுமுன்தினம் வாஷிங்ரனில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார் என யு.பி.ஐ. செய்தி நிறுவனம் அறி

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கைகள் எவற்றிலும் வெளிநாட்டுப் படைகள் ஈடுபடமாட்டா!

### இராணுவப் பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு,ஜன.7

அமெரிக்க இராணுவம் உட்பட எந்தவொரு வெளிநாட்டு இராணுவமும் இங்கு இராணுவ நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படமாட்டா. சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அத்தியாவசிய மீட்புப் பணிகளிலும், மீள்கட்டுமானப் பணிகளிலும் மட்டுமே அவர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்னாயக்க கூறினார்.

நேற்றுக்காலை அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சுனாமிப் பேரலை அனர்த்தத்தின் பின் பல்வேறு வெளிநாட்டு இராணுவங்கள் இங்கு

(16 ஆம் பக்கம் பார்க்க)

# வடமராட்சி கிழக்கில் முதற்கட்ட மீள்குடியமர்வு கரையிலிருந்து 150 மீற்றருக்கு அப்பால்!

பரந்தன்,ஜன.7

கடல் பெருக்கால் வடமராட்சி கிழக்கில் இடம்பெயர்ந்தோர் கடற்கரையில் இருந்து 150 மீற்றருக்கு அப்பால் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்.

செம்பியன்பற்று, மருதங்கேணி, வத்திராயன், கட்டைக்காடு, ஆழியவளை, வெற்றிலைக்கேணி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களே இவ்வாறு மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதி மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பான கூட்டம் நேற்று பளை, புதுக்காட்டுச் சந்தியில் இதற்கென நிறுவப்பட்ட செயலகத்தில் நடைபெற்றது.

கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ (16 ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய கலந்துரையாடலில் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை உரையாற்றுகிறார் (படம்:மு.கந்தசாமி - பரந்தன் செய்தியாளர்)

## ஐ.நா. செயலர் இன்று வருகிறார்

சுனாமியால் இலங்கையில் ஏற்பட்ட பேரழிவுகளைப் பார்வையிடுவதற்காக ஐ.நா.செயலர் கோபி அனான் இன்று கொழும்பு வருகின்றார்.

தனது பாரியாருடன் இன்றுமாலை கொழும்பை வந்தடையும் அவர், சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் சென்று பார்வையிடுவார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் பெரிதும் பாதிப்புக்குள்ளான முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் அவர் நேரில் செல்லவுள்ளார்.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர்

(16 ஆம் பக்கம் பார்க்க)




சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து பளை மத்திய கல்லூரியில் தங்கயிருந்த மக்களில் ஒரு தொகுதியினர் நேற்று முதற்கட்டமாக தத்தமது இடங்களுக்கு மீளக்குடியமரச் சென்றார்கள். அப்போது எடுக்கப்பட்ட படம். *(படங்கள்: மு.கந்தசாமி - பரந்தன் செய்தியாளர்)*

# முல்லைத்தீவில் இடம்பெயர்ந்தோர் மீளக்குடியமர மாதிரிக்கிராமங்கள்

## புனர்வாழ்வு செயலணிக் கூட்டத்தில் தீர்மானம்

திருவையாறு,ஜன.7

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமி அனர்த்தம் காரணமாக இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தங்கியிருக்கும் ஆயிரத்து 815 குடும்பங்கள் தற்காலிகக் கொட்டகைகள் அமைத்து மீளக்குடியமர்த்தப்படவுள்ளன.

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் புனர்வாழ்வு கூட்டுச் செயலணி, அரசு, அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் இயங்கும் செயலகத்தில் நேற்று நடந்த கூட்டத்தில் இது தொடர்பான ஏற்பாடுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

மலசலகூடங்கள், சுகாதார நிலையங்கள், வர்த்தக நிறுவனங்கள், முன்பள்ளிகள், பொது மண்டபங்கள் ஆகியன அமையப்பெற்று மாதிரிக் கிராமங்களாக இந்தக் குடியமர்வு இடம் பெறவுள்ளது.

மூன்று மாதங்கள் முதல் ஒருவருடம் வரை தங்கக்கூடிய வசதியுடன் வீடுகள் அமைக்கப் படவிருக்கின்றன.

கிராம சேவையாளர் பிரிவு, மீளக்குடியமரும் இடங்கள், குடியமரும் குடும்பங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம் வருமாறு:-

★ பள்ளமடு - உண்ணாப்பளவு மயானத்துக்கு அருகில் உள்ள அரச, தனியார் காணிகள் - 360 குடும்பங்கள்.

★ மணற்குடியிருப்பு - கரைச்சி குடியிருப்பு - 100 குடும்பங்கள்.

★ செல்வபுரம் - செல்வபுரம் வட்டுவாகல் - 225 குடும்பங்கள்.

★ கோயில் குடியிருப்பு, முல்லைப்பட்டினம் - முல்லைத்தீவு நகர் - நூறு குடும்பங்கள்.

★ வண்ணாங்குளம் - ஐஸ் தொழிற்சாலைக்கு அருகில், ஆஸ்பத்திரிக்கு அருகில் - 200 குடும்பங்கள்.

★ சிலாவத்தை, தீர்த்தக்கரை - அண்ணமார் கோயில் அருகில் - 100 குடும்பங்கள்.

★ சிலாவத்தை தெற்கு, தியோகுநகர் - சுவாமி கோட்டம் - 80 குடும்பங்கள்.

★ உப்புமாவெளி - உப்புமாவெளி பொது நோக்கு மண்டபம் அருகில் - 25 குடும்பங்கள்.

★ அலம்பில் வடக்கு, அலம்பில் தெற்கு - அலம்பில் பெருந்தோட்டம், செல்லத்தம்மையா தோட்டம், இராமசாமி தோட்டம் - 100 குடும்பங்கள்.

★ செம்மலை, நாயாறு - சபாரத்தினம் கோட்டம் - 100 குடும்பங்கள்.

★ அம்பலவனபொக்கனை, மாத்தளன் - மாத தளன் பிள்ளையார் கோயில், இடைக்காடு அம்பலவன்பொக்கனை - 170 குடும்பங்கள்.

★ முள்ளிவாய்க்கால், மேற்கு பளையடி, வலைஞன் மடம் - முருகன் கோயிலடி, வலைஞன் தேவாலயம் - 125 குடும்பங்கள்.

★ வட்டுவாகல் - வட்டுவாகல் காவற்றுறை நிலையத்துக்கு அருகில் - 30 குடும்பங்கள். (எ-3-393)

# டிப்ளோமா கற்கைநெறி மீண்டும் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம்,ஜன.7

யாழ்.பல்கலைக்கழகத்தின் ஆங்கில மொழியியல் துறையில் இடைநிறுத்தப்பட்டிருக்கும் ஆங்கில ஆசிரியர்களுக்கான ஆங்கில டிப்ளோமா கற்கைநெறி எதிர்வரும் 28 ஆம் திகதி மீள ஆரம்பிக்கப்படும் என ஆங்கில மொழித்துறைத் தலைவர் திருமதி எஸ். ரவீந்திரன் தெரிவித்தார். (எ-3)

## முகாமைத்துவ மாணவர் அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.7

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 2ஆம் வருட முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட மாணவர்களின் பரீட்சை தொடர்பான அவசர கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 10 மணியளவில் முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எனவே, சம்பந்தப்பட்ட மாணவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (4-190)

# பேரலையில் காயமுற்ற மற்றொரு யுவதி மரணம்!

கடல் பேரனர்த்தத்தில் சிக்கிக் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வந்த யுவதி ஒருவர் 10 நாள்களின் பின்னர் நேற்று உயிரிழந்தார்.

தாளையடிப் பகுதியைச் சேர்ந்த ஜே.ஜெயப்பிரியா (வயது 19) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். உயிரிழந்தவரின் சடலம் நேற்று இரவு 8.30 மணியளவில் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. தாளையடி கரையோர பிரதேசத்தில் இடம்பெற்ற சுனாமி கடற்கொந்தளிப்பில் சிக்கிக் காயமடைந்த இவர், கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டிருந்தார். (4-190)

# ஊர்காவற்றுறைக்கான மினிபஸ்சேவை திங்கட்கிழமை முதல் இடைநிறுத்தப்படும்

## வீதிகள் புனரமைக்கப்படாமை காரணம் என அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.7

வீதிகள் புனரமைக்கப்படாததையடுத்து ஊர்காவற்றுறைப் பகுதிக்கான மினிபஸ் சேவைகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இடைநிறுத்தப்படவுள்ளன.

ஊர்காவற்றுறை தனியார் சிற்றூர்தி சேவைச் சங்கம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

இது விடயமாக, மேற்படி சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

யாழ். ஊர்காவற்றுறை பிரதான வீதி பலத்த சேதமடைந்துள்ளது. அதேபோல் யாழ்ப்பாணத்தில் இருந்து வேலணைத் துறையூர் ஊடாக ஊர்காவற்றுறைக்குச் செல்லும் பிரதான வீதியும் பலத்த சேதமடைந்துள்ளது.

இதுவரை காலமும், மேற்படி வீதிகளூடாகச் சேவையை நடத்திவந்த மினிபஸ்களின் உரிமையாளர்கள் வீதிகள் பலத்த சேதமடைந்துள்ளதையடுத்து தொடர்ந்தும் பஸ்சேவைகளை நடத்த முடியாமல் உள்ளது என்றும்-

இதனால், எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 777, 780 ஆகிய பாதைகளூடான மினிபஸ்சேவைகளை இடைநிறுத்தவுள்ளதாகவும் - மின்பஸ் சேவைச்சங்கத்துக்கு அறிவித்துள்ளனர்.

இது குறித்து, மினிபஸ் உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துநர்கள் கையொப்பமிட்ட மகஜர் ஒன்றும் சங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது - என்று அதில் உள்ளது.

மேற்படி வீதிகளின் மோசமான நிலை குறித்து ஊர்காவற்றுறை சிற்றூர்திச் சேவைச் சங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களிடம் பல தடவைகள் மகஜர்கள் மூலம் முறையிட்டிருந்தது என்றும் -

எனினும், இதுவரை ஆக்கபூர்வமான பதில் எதுவும் கிடைக்கவில்லை என்றும் -

சங்கத்தின் செயலாளர் சி.ஜெயரத்தினம் அறிவித்துள்ளார். (எ)

## நீண்டகால மீள்கட்டுமானத்தை முன்னெடுக்க

# மனித பாதுகாப்புக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை செய்துகொள்க!

## அரசு - புலிகளுக்கு சமாதானத்துக்கான அமைப்பு வலியுறுத்து

கொழும்பு,ஜன.7

அரசும் விடுதலைப் புலிகள் இயக்கமும் எந்தவொரு சமூகமோ, பகுதியினரோ பாரபட்சத்துக்குட்படாதவிதத்தில் நடத்தப்படுவதை உறுதிசெய்யவேண்டுமென்று நாம் கேட்டுக் கொள்கின்றோம். காணி வழங்கல் முதல் கொண்டு வீடுகள் நிர்மாணித்தல் மற்றும் வாழ்க்கை புனரமைப்பு வரைக்கும் இந்த விடயம் கவனிக்கப்படல் வேண்டும். காணி உறுதிகள் உதவிகள் சமமாகக் கிடைத்தல் வாழ்க்கையைச் சீரமைத்துக்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் போன்றவை உறுதிப்படுததப்பட வேண்டும்.

- இவ்வாறு அமைதியை 'ஆதரிக்கும் குழு' என்ற அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் 26ஆம் திகதி சுனாமி கடல் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளுக்கு உதவுவது தொடர்பான சர்வதேச மாநாடு ஒன்று ஜகார்த்தாவில் நடைபெறுவதையொட்டி மேற்படி அமைப்பு இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தாராளமாக உதவிபுரிய முன்வந்துள்ள இலங்கை மக்களையும் சர்வதேச சமூகத்தையும் பாராட்டியுள்ள சமாதானத்தை ஆதரிக்கும் குழு தனது அறிக்கையில் -

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் போர்நிறுத்த ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டதன் பின்னர், பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டதையடுத்து பிணக்குக்குட்பட்ட தரப்பினரைப் பேச்சு மேசைக்குத் திரும்பும்படியும் மனித நேய நியமங்களையும் மனித உரிமைகளையும் மதித்துச் செயற்படும்படியும் வற்புறுத்தி வந்துள்ளோம்.

கரையோரப் பகுதிகளைத் தாக்கியுள்ள சுனாமிப் பேரலைகள் அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளை மட்டுமன்றி புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளையும் நாசப்படுத்தியுள்ளது. ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டும், காயப்படுத்தப்பட்டுமுள்ளார்கள். அநேகமாக பத்து லட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் மனிதாபிமானத் தேவைகள் தொடர்பாகக் கவனம் செலுத்தவேண்டியுள்ள அதேநேரம், அமைதிச் செயற்பாடுகளை இந்த இயற்கை அனர்த்தம் பாதித்துவிடக்கூடாதென்று நாம் கருதுகின்றோம்.

இன்றைய நெருக்கடி மனிதாபிமானமுறையில் அணுகவேண்டிய ஒன்று என்பதை அரசும் புலிகளும் அங்கீகரித்துள்ள அதேநேரம், மீள் கட்டுமானம், மீள்குடியேற்றம் ஆகிய நடவடிக்கைகள் நீண்டகால அடிப்படையில் ஒருங்கிணைந்த முறையில் முன்னெடுக்கப்படவேண்டும் என்றும் கருதுகிறார்கள். இதற்கு இரு தரப்பிலும் நெகிழ்ச்சியும் ஆக்கச்செயற்பாடும் அவசியப்படுகின்றது. இது புதிய கலந்துரையாடலுக்கான ஒரு நடைமுறைக்கு வழிசெய்யவும்கூடும். இது மேலும் புரிந்துணர்வையும் பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்பவும் உதவக்கூடும்.

இந்த நிலைமையில், அரசையும் படைகளையும் மனித பாதுகாப்பு தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றைச் செய்து கொள்ளும்படி நாம் கோரிக்கை விடுக்கின்றோம. சுனாமி அனர்த்தத்திற்குப் பிறகான காலத்தில் புனர்நிர்மாணத்தை முன்னெடுக்கும் வேளையில் இது செயற்படுவதாய் இருக்கும். பாதிக்கப்பட்ட சகல சமூகங்களுக்கும் பாரபட்சமின்றி உதவிகள் சென்று கிடைக்க இது அனுசரணையாக இருக்கும். இரு தரப்பினரையும் ஆக்கபூர்வமான - ஒத்திசைவான - கலந்துரையாடலில் ஈடுபடும்படி நாம் கேட்டுக்கொள்கின்றோம். மீள் குடியமர்த்தப்படும் மக்களின் விருப்பத்துடனேயே அவர்கள் குடியமர்த்தப்படுவதை உறுதிசெய்து கொள்ளும்படியும் இரு தரப்பினரையும் கேட்டுக்கொள்கின்றோம். இது அவர்களின் உரிமைகளை உத்தரவாதம் செய்யும் சட்டத்தின் கட்டமைப்புக்குள் செய்யப்பட வேண்டும்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் சுனில் அபெயசேகர, சுனில் பஸ்தியான், சுனந்ததேசப்பிரிய ரோகான் எதிரிசிங்க, கேதீஸ்லோகநாதன், ஜெகான் பெரேரா, பாக்கிய சோதிசரவணமுத்து, ஜீவன் தியாகராஜா, ஜோவில்லியம், ஜாவித்யூசுப் ஆகியவர்கள் கையெழுத்திட்டுள்ளார்கள். (ப)

# நீதிபதியை அவதூறாக ஏசிய நால்வர் கைதாகி மறியலில்!

யாழ்ப்பாணம்,ஜன.7

மேல் நீதிமன்ற நீதிபதி ஒருவரைத் தகாத வார்த்தைகளால் பேசி அச்சுறுத்தியதாகக் கூறப்படும் நான்குபேரை யாழ். பொலீஸார் கைதுசெய்து யாழ். நீதிமன்றில் நேற்று ஆஜர் செய்தனர். இவர்களது மோட்டார் சைக்கிள்கள் இரண்டையும் பொலீஸார் பறிமுதல் செய்தனர். இவர்கள் நால்வரையும் எதிர்வரும் 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டார்.

மட்டக்களப்பு மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி சுப்பிரமணியம் பரமராஜ் யாழ்ப்பாணம் மூன்றாம் குறுக்குத்தெருவிலுள்ள தனது இல்லத்தைப் பார்வையிடுவதற்கு அண்மையில் வந்திருந்தார்.

இவர் தனது இல்லத்தில் இருந்தபோது நான்குபேர் அவரைத் தகாத வார்த்தைகளால் பேசி அச்சுறுத்தினர் என்றும் -

இது தொடர்பாக அவர் கடந்த முதலாம் திகதி யாழ். பொலீஸ் நிலையத்தின் சிறுகுற்றத்தடுப்புப் பிரிவில் முறைப்பாடு செய்திருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் சுண்டுக்குளியைச் சேர்ந்த யேசுதாசன் லெஸ்ரிலி, மரியநாயகம் அன்சிங், சபாநாயகராஜா பிரசன்னா, வில்வட் ஜோஜ் ஜோன்சன் ஆகிய நான்கு பேரையும் யாழ். பொலீஸ் நிலைய சிறுகுற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி சமரநாயக்க தலைமையில் சென்ற பொலீஸ் குழுவினர் நேற்றுக் கைதுசெய்தனர்.

இவர்கள் நான்குபேரும் யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

இவர்களை எதிர்வரும் 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (4-7)

# இந்தோனேஷியாவில் ஏற்பட்ட பேரழிவைப்போல் உலகில் வேறெந்தப் பகுதியிலும் பார்த்ததில்லை

## அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

இந்தோனேஷியாவில் முன்னர் எப்போதும் நிகழ்ந்திடாத அளவிற்கு இயற்கையின் சீற்றம் பேரழிவை ஏற்படுத்தியிருக்கிறது. இப்படி ஓர் அனர்த்தத்தைத்தான் முன்னெப்போதும் பார்க்க வில்லை என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் தெரிவித்தார்.

கொலின் பவல், இந்தோனேஷியாவில் சுனாமிப் பேரலைகள் மற்றும் பூகம்பத்தால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் அசே பிராந்தியத்தை நேரில் சென்று பார்வையிட்டார். இவரோடு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் சகோதரரும், புளோரிடா மாநில ஆளுநருமான ஜெவ் புஷ்ஷும் உடன்சென்றார்.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் தலைமையில் சென்றிருக்கும் குழுவினரை இந்தோனேஷிய சமூக சேவைகள் அமைச்சர் அல்லவி ஷிஹாப் அழைத்துச்சென்று, பாதிக்கப்பட்ட இடங்களைச் சுற்றிக்காட்டினர்.

அசே பிராந்தியத்தில் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் கொலின் பவல் கருத்துத் தெரிவிக்கையில் -

"இந்தோனேஷியாவின் அசெ பிராந்தியத்தில் நான் பார்த்த பேரழிவைப் போல ஓர் அழிவை வேறு எங்குமே பார்க்கவில்லை. எப்போதும் பார்த்ததும் கூடக் கிடையாது. இந்த பேரனர்த்தத்தில் சிக்குண்டு மக்கள் பட்ட சொல்லொணாத் துன்பங்களை, துயரங்களை என்னால் உணரமுடிகிறது - என்றார்.

இந்தோனேஷியாவில் பாதிக்கப்பட்ட இடங்களை மீளக்கட்டியெழுப்ப அமெரிக்கா தன்னாலான உதவிகளைச் செய்யுமென அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் தெரிவித்தார் என்று அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இந்தோனேஷியா உட்பட சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களை மீளக்கட்டியெழுப்ப அமெரிக்கா தன்னாலான உதவிகளைச் செய்யுமென அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் தெரிவித்தார் என்று அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன. இந்தோனேஷியா உட்பட சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு அமெரிக்கா வழங்கிவரும், வழங்கவுள்ள நிவாரண உதவிகளை அதிகரிக்கும் என்றும் கொலின் பவல் மேலும் சொன்னார். (க-8)

# நேபாளத்தில் சண்டை 32 பேர் உயிரிழப்பு!

காத்மண்டு,ஜன.7

நேபாளத்தில் இராணுவத்தினருக்கும், மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற இருவேறு மோதல் சம்பவங்களில் 30 மாவோ தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். மேலும் இரு பொலீஸார் உயிரிழந்தனர். இருவர் காயமடைந்தனர்.

இந்த மோதல் சம்பவங்கள் 4 மணிநேரம் நீடித்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அண்மைய காலமாக நேபாளத்தில் பாதுகாப்புப் படையினருக்கும், மவோ தீவிரவாதிகளுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நூறுகோடி டொலர்களை வழங்க சர்வதேச சமூகம் முன்வரவேண்டும்

## சுனாமி அனர்த்த மாநாட்டில் கோபி அனான் வேண்டுகோள்

ஜகர்த்தா,ஜன.7


சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளை மீளக் கட்டியெழுப்புவதற்கு நூறு கோடி அமெரிக்க டொலர்களை அவசர நிதியுதவியாக வழங்க முன்வரவேண்டும் என்று சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள் விடுத்தார் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபிஅனான்.

இந்தோனேஷியத் தலைநகர் ஜகர்த்தாவில் சுனாமி அனர்த்த மாநாடு நேற்று நடைபெற்றது. இந்த மாநாட்டில் கோபிஅனான் உரையாற்றும்போதே இந்த வேண்டுகோளை விடுத்தார்.

சர்வதேச சமூகம் மனிதாபிமானத்தோடு உதவிசெய்ய - நன்கொடை வழங்க - இந்த மாநாடு நல்லதொரு சந்தர்ப்பம் என்றும் அனான் தெரிவித்தார்.

300 கோடி அமெரிக்க டொலர்களை நிவாரண உதவியாக வழங்க சர்வதேச சமூகம் முன்வந்திருக்கிறது. ஆனாலும், கடந்த காலங்களில் இவ்வாறான வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை என்பதை செய்தியாளர்களும் ஆய்வாளர்களும் சுட்டிக்காட்டினர்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான், இந்தோனேஷிய ஜனாதிபதி சுசிலோ பாம்பாங் யுதோயோனோ, அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் உள்ளிட்ட பல முக்கிய தலைவர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.



மாநாட்டில் உரையாற்றும் கோபி அனான்

தற்போது வழங்கப்பட்டுவரும் நிவாரண உதவிகளுக்கு மேலதிகமாக, நீண்டகால உதவிகளை வழங்குதல் மற்றும் பாதிக்கப்பட்ட நாடுகளின் கடன் பழுவைக் குறைத்தல் போன்றவை தொடர்பாக இந்த மாநாட்டில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

சுனாமிப் பேரலைகள் தொடர்பாகப் பசுபிக் வலயநாடுகள் கையாளும் பாதுகாப்பு நடைமுறைகள் போன்றதொன்றை இந்து சமுத்திர வலய நாடுகளும் பின்பற்றவேண்டும் என்று இந்தோனேஷிய ஜனாதிபதி சுசிலோ பாம்பாங் யுதோயோனோ தனது ஆரம்ப உரையின்போது தெரிவித்தார்.

இவ்வாறான நிலையம் ஒன்று அமைக்கப்படுவதில் ஏற்படும் செலவினங்கள் பற்றி உலக நாடுகள் கவலைப்படக்கூடாது. இப்போது நடைபெறும் இந்த மாநாட்டிலேயே இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு, அதற்கான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படவேண்டும். அதற்காக அனைவரும் முன்வரவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (க-8)

உலக அரங்கில்

# தமிழக மீனவர்கள் மீண்டும் கடலுக்கு!

சென்னை,ஜன.7

கடற்கோளினால் - சுனாமி ஆழிப்பேரலைகளினால் - பாரிய தேசங்களைச் சந்தித்துள்ள தமிழகத்தில் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம் உள்ளிட்ட சில இடங்களில் மீனவர்கள் தைரியத்துடன் மீண்டும் மீன்பிடித்தொழிலில் நேற்றுமுன்தினம் முதல் இறங்கியுள்ளனர்.

அத்தோடு, பெரும் சேதத்தைச் சந்தித்திருக்கும் தமிழகத்தின் மற்றொரு மாவட்டமான கன்னியாக்குமரியில் அரச நிவாரணப் பணிகள் முதலில் தாமதத்துடன் நடைபெற்றாலும் தற்போது ஓரளவு விரைவு ஏற்பட்டிருக்கிறது என்று கோட்டாறு மறை மாவட்ட குருகுல முதல்வர் ஜோன் குழந்தை தெரிவித்தார்.

இருந்தபோதிலும், மீனவர்களுக்கான நீண்டகால புனரமைப்புத் திட்டங்கள் - மீள்கட்டுமானத் திட்டங்கள் - வகுக்கப்பட வேண்டும் என்றும் பாதிரியார் ஜோன் குழந்தை சுட்டிக் காட்டியிருக்கிறார்.


இதற்கிடையில், தமிழகத்தில் சுனாமி ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட கடற்கரைப் பகுதிகளில் ஓரிரு இடங்களில் சாதி வேறுபாடு - பாகுபாடு - நிலவுகிறது என்று பாண்டிச்சேரியைச் சேர்ந்த தலித் எழுத்தாளர் ரவிக்குமார் கூறினார்.

இது குறித்து ரவிக்குமார் மேலும் கூறுகையில் -

கடலூர் மாவட்டத்தில் நாங்கள் சுற்றிச் சென்று பார்வையிட்ட பகுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனி அகதி முகாம்கள் என்று இல்லை. ஆனால், பொறையாறு, தரங்கம் பாடிப்பகுதிகளில் இவ்வாறு தனியாக, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அகதிமுகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று செய்திகள் கிடைத்துள்ளன. ஒரு சில இடங்களில் மட்டுமே இவ்வாறு நடைபெறுகிறது என்றாலும் இவ்வாறான போக்குத் தவறானது.

சுனாமிப் பேரலைகளின் தாக்கங்களால் மீனவர்கள்தான் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உண்மைதான். இருந்தாலும், கடற்கரைப் பகுதியை ஒட்டி வாழும் ஏனைய சமூகத்தினரும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பாண்டிச்சேரி நிர்வாகம் உணரவேண்டும்.

மேலும், மனித உடல்களை அப்புறுப்படுத்தும் தொழிலாளர்களுக்கு கையுறைகள் போன்ற பாதுகாப்புச் சாதனங்கள் வழங்கப்படவில்லை. ஏன், இறந்த உடல்களுக்கும் தகுந்த மரியாதை கொடுக்கப்படவில்லை என்ற கேள்வியோடு கூறினார் ரவிக்குமார். (க-8)



சுனாமி அலையின் தாக்கத்தினால் இந்தியாவின் நாகபட்டினம் மாவட்டத்தின் கரையோர மீனவக் கிராமத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மணல் பிரதேசமொன்றில் முகாமிட்டிருப்பதைப் படத்தில் காணலாம். (8)

# சிரியா மீது பொருளாதாரத் தடை விதிக்க அமெரிக்கா பரிசீலனை!

நியூயோர்க்,ஜன.7

சிரியா மீது புதிதாகப் பொருளாதாரத் தடை விதிக்க அமெரிக்கா பரிசீலனை செய்து வருகிறது. இந்தப் பரபரப்புத் தகவலை அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு வெளிவரும் 'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகை வெளியிட்டுள்ளது.

இப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஈராக் தீவிரவாதிகளின் அமைப்புகள் சிரியாவில் செயற்பட்டுவருகின்றன. அமெரிக்கா வற்புறுத்திய பின்னரும் அவற்றுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்காமல் சிரியா புறக்கணித்து வருகிறது. இதுதொடர்பாகப் பலமுறை அமெரிக்காவால் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது. ஆனால், எவ்வித பலனும் ஏற்படவில்லை. எனவே, சிரியாவின் வங்கிகளைப் புறக்கணிப்பது உள்ளிட்ட பல பொருளாதாரத் தடைகளை அமெரிக்கா மேற்கொள்ளும். அத்தோடு சிரியாவில் இயங்கும் ஈராக் தீவிரவாதிகளின் அமைப்புக்களில் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைனின் அரசில் அங்கம் வகித்த அதிகாரிகளும் இணைந்து செயற்படுகின்றனர். இவ்வாறான அமைப்புக்களை தடைசெய்யாமல் சிரியா அவற்றுக்கு உதவி செய்துவருகிறது.

ஈராக்கில் உள்ள தீவிரவாதிகளுக்கு சிரியாவில் செயற்படும் இந்த அமைப்புக்ககள் - இயக்கங்கள் - நிதி திரட்டிக்கொண்டிருக்கின்றன. ஆயுதங்களை அனுப்புவது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

- இவ்வாறு அரச அதிகாரிகள் கூறியுள்ளனர் - என்று 'நியூயோர்க் டைம்ஸ்' தெரிவித்துள்ளது. (க-8)

# சுனாமி நிவாரண உதவியை பல நாடுகள் அதிகரிப்பு

லண்டன்,ஜன.7


சுனாமி பேரலை மற்றும் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உதவிய உலக நாடுகள், தமது நிவாரண உதவியை மேலும் அதிகரித்துள்ளது.

ஜேர்மன், பிரிட்டன், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் சுனாமிப் பேரழிவினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு வழங்கவிருக்கும் உதவித் தொகையை கணிசமான அளவு அதிகரித்துள்ளன. மிக மோசமாகப் பாதிப்பட்டிருக்கும் தென்னாசிய நாடுகளைக் மீள் கட்டியெழுப்பும் நோக்குடனேயே இந்த நிவாரண உதவிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

ஜேர்மன் 67 கோடியே 4 லட்சம் டொலர்களை நிவாரண உதவியாக வழங்குவதாக முன்னர் அறிவித்திருந்தது. ஆனால், இத்தொகையைவிட 25 மடங்கு அதிகமாக நிவாரண உதவிகளை வழங்கவுள்ளதாக இப்போது ஜேர்மன் அரசு அறிவித்திருக்கிறது.

எதிர்வரும் சில வாரங்களில் சுனாமிப் பேரழிவுக்கான உதவியாகப் பலகோடி டொலர்களை வழங்கவுள்ளதாகப் பிரிட்டன் தெரிவித்திருக்கிறது. அத்தோடு, ஆஸ்திரேலியா 75கோடி டொலர்களை நிவாரண உதவியாக வழங்கத் தயாராகவுள்ளதாகக் கூறியிருக்கின்றது.

- இவ்வாறு வழங்கப்படும் நிதிகள் சுனாமி மற்றும் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட நாடுகளின் உட்கட்டமைப்பைச் சீர்படுத்தி, மக்களை வழமை நிலைக்குக் கொண்டுவர உதவும். அத்தோடு, பாதிக்கப்பட்ட நாடுகளின் பொருளாதாரதை ஸ்திரப்படுத்திக்கொள்ளவும் இந்த நிவாரண உதவிகள் பயன்படுத்தப்படும். (க-8)

'சுனாமி' கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நல்லூர் சங்கிலியன் மன்ற சனசமூக நிலையத்தினரால் சேகரிக்கப்பட்ட அத்தியாவசிய உணவுப்பொருள்கள் மன்றத்தின் மாதர் சங்கத்தினரால் பொதிசெய்யப்படுவதையும், பின்னர் அவற்றை விடுதலைப் புலிகளின் நல்லூர் கோட்ட அரசியல்துறையினரிடம் மன்றப் போஷகர் சீ.வி.கே.சிவஞானம், தலைவர் ச.பிரேமதாஸன் ஆகியோர் கையளிப்பதனையும் படங்களில் காணலாம்.

## நிர்வாகசேவை பயிற்சி வகுப்புக்கள் மீண்டும் ஆரம்பம்

இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சைக்குத தோற்றுபவர்களுக்காக அரசசேவை கீழுழைப்பு பட்டதாரிகள் சங்கத்தினால் யாழ்.மத்திய கல்லூரியில் நடத்தப்பட்டு வந்த பயிற்சி வகுப்புக்கள் மீண்டும் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

நாளை சனிக்கிழமையும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணிக்கு மேற்படி பயிற்சி வகுப்பு நடைபெறும் என்றும்.

பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் சகலரும் இந்தப் பயிற்சி வகுப்பில் இணைந்து கொள்ளலாம் என்றும்.

அரசசேவை கீழுழைப்புப் பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளர் ஜி.பற்குணராசா அறிவித்துள்ளார். (எ)

## கட்டாக்காலிகளால் நெற்பயிர்கள் அழிவு

காரைநகர் பகுதியில் இரவு வேளையில் நெல் வயல்களுக்குள் கட்டாக்காலிகள் புகுந்து நெற்பயிர்களுக்குச் சேதம் விளைவித்து வருகின்றன.

காரைநகர் பலகாடு நாச்சிமார் கோயிலடியை அண்டியுள்ள வயல் நிலங்களுக்குள் இரவு வேளையில் புகும் கட்டாக்காலிகள் நெற்பயிர்களை அழித்து வருகின்றன என்றும் -

நெல்விளைந்து வரும் வேளையில் இவ்வாறு கட்டாக்காலிகளால் பயிர்கள் அழிக்கப்படுவது தமக்குப் பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் - விவசாயிகள் தரப்பில் கூறப்பட்டது. (எ-161)

## சேவைநலன் பாராட்டுவிழாவுக்கு ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம்,ஜன.7

வண்ணை. சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயத்தின் தர்மகர்த்தா சபைச் செயலாளரும், யாழ். சைவ பரிபாலன சபையின் தலைவருமான சைவப் புலவர் வ.கந்தசாமியின் சேவை நலன் பாராட்டு விழா விரைவில் நடைபெறவுள்ளது.

சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக்கழகம் இந்த விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

மேற்படி சேவை நலன்பாராட்டுவிழாவின் முன்னேற்பாடுகள் தொடர்பான கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது என சைவசமய அபிவிருத்திக்கழகச் செயலாளர் சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார். (எ)

## முன்பள்ளி கலைவிழா

கோண்டாவில் அம்பிகை முன்பள்ளி மாணவர்களின் கலைவிழா எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் ஆசிரியை திருமதி மு.விமலாம்பிகை தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கமலாசுப்பிரமணியம் கலந்து கொள்வர். சிறப்பு விருந்தினர்களாகக் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய அதிபர் எஸ்.சண்முககுமார், யாழ். மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் சு.ஜெயராஜ், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் செலவிமலர் சின்னையா, யாழ் மாவட்ட சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசன், கிராம சேவையாளர் வ.சந்திரசேகரம், நல்லூர்ப் பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் திருமதி வி.மாலதிதேவி ஆகியோர் கலந்துகொள்வர். (எ-49)

## சுயதொழிலை ஊக்குவிக்க நெடுந்தீவில் உபகரணங்கள்

இடம்பெயர்ந்தோரினதும், வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோரினதும் வாழ்வாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கான உதவிச் செயற்திட்டத்தின் கீழ் நெடுந்தீவுப் பிரதேசத்தில் சுயதொழிலில் ஈடுபடுவோருக்கு உபகரணப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உதவிப்பொருள்கள் யாழ்.மனித முன்னேற்றநடுநிலையத்தினாலும், யாழ். ஹரித்தாஸ் நிறுவனத்தினாலும் கடந்த செவ்வாய்க்கிழமை நெடுந்தீவுப் பங்குப் பணிமனையில் வைத்து பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. (எ-117)

THE ROYAL COLLEGE OF JAFFNA
வாரநாள்களில் பாலர் வகுப்பு நடைபெறுகின்றது.
காலை 9 ,10, 11 ஆங்கிலத்தில் கதைக்க எழுத, கூடிய கவனம் கொடுக்கப்படும்.
426(302) K.K.S.வீதி, யாழ்ப்பாணம்.

இன்று முத்துவிழாக் காணும்
எங்கள் மதிப்பிற்குரிய அன்னை
சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி
**தங்கம்மா அப்பாக்குட்டி [J.P.]**
அவர்களைப் பல்லாண்டு காலம் ஆரோக்கியத்துடன் வாழ்ந்து நலிவுற்ற மக்களுக்கு ஆற்றிவரும் மனிதாபிமான சேவையைத் தொடர இறைவன் அருள்புரிய வேண்டுமென்று பிரார்த்தித்து அவருக்கு எங்கள் நல்லாசியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.



"மருதமகால்",
மானிப்பாய்.
லயன் S.S.தங்கராஜா,
மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் சார்பில்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
உடற்கல்வி
டிப்ளோமா கற்கைநெறி - 2004/2005
அனுமதித் தேர்வு

30.12.2004 இல் நடைபெறவிருந்த மேற்படி உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கான அனுமதித்தேர்வு 20.01.2005 வியாழக்கிழமை நடைபெறும்.
பரீட்சை நிலையம்:
இராமநாதன் மண்டபம்,
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
நேரம்: 10.00 மு.ப. - 12.00 மதியம்
பரீட்சார்த்திகள் அனைவரும் ஏற்கனவே அவர்களுக்கு அனுப்பப்பட்டிருந்த பரீட்சை அனுமதி அட்டைகளைக் கொண்டுவருதல் வேண்டும்.
துணைவேந்தர்.
05.01.2005
(சி-40273)(24-45)

இன்று முத்துவிழா காணும்
அன்னையின் கருணையின் பெருமையே
பல்லாண்டு பல்லாண்டு இனிது
வாழ்கவே!
கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி
**தங்கம்மா அப்பாக்குட்டி (J.P.)**



எங்களுக்கு மாசியிலே நல்லாசிகள் வழங்கும் மாணிக்கமே, தெய்வீக ஒழுக்கத்தை தெய்வீக சிந்தனையை முறையாகப் பாய்ச்சுகின்ற முறைகளை எங்களுக்கு முறையாகப் புகட்டுகின்ற எங்கள் அன்னையை இன்றைய நன்நாளில் அவர் பாதம் பணிந்து நல்லாசிகள் பெற்று ஏற்றிப் போற்றி மென்மேலும் பல்லாண்டு காலம் இனிது வாழ்க வாழ்கவே என்று வாழ்த்துகின்றேன்.
329,பிரதானவீதி,
பருத்தித்துறை.
(சி.40262)(39-45)
வாழ்த்துவோர்
K.N.சச்சிதானந்தன்.

வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவைச் சங்கம் (தலைமையகம்)



அறிவித்தல்
வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்
வட.பி.மு.ச.மோ (ஓட்டோ) தலைமைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 09.01.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 (புதிய) மணிக்கு, தலைவர் திரு.த.றூபன் அவர்கள் தலைமையில் யாழ்.ப.நோ.கூ. சங்கக் கேட்போர் கூடத்தில் நடைபெறும். எனவே, ஓட்டோ உரிமையாளர், சாரதிகள் மற்றும் கிளைச்சங்க நிர்வாகிகள் மற்றும் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அறியத் தருகின்றோம்.
41, முனீஸ்வரன் வீதி,
யாழ்ப்பாணம்.
- நிர்வாகம்.
(சி-40268) (42)

வாழ்த்துகின்றோம்
இன்று 80 ஆவது அகவையைப் பூர்த்தி செய்யும்
அன்னை தர்க்கா தரந்தரி
சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்களை வாழ்த்தி வணங்குகின்றோம்.
இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம். (40520)(42-43-45)
அதிபர், ஆசிரியர்,
கல்விசாராஊழியர், மாணவர்கள்.

Jan. 15ஆம் திகதி
புதிய வகுப்பு ஆரம்பம்
நேரடி அறிவிப்பாளர் பயிற்சி
50% சிறப்புக் கழிவு
இதுவரை பதிவு செய்யாதவர்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம்.
M:M:C:C:
இல.328, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம் (ஆரியகுளம் சந்தி).
T.P.: 0776 910612
0776 193181.
(40527)

தையல் ஆசிரியர் தேவை
அனுபவமும் திறமையுமுள்ள தையல் பயிற்றுவிப்பாளர் உடன் தேவை.
அலுவலக நேரங்களில் நேரில் வரவும்.
தூரிகை
ம.ம.வி.வீதி, நெல்லியடி.
(சி-40272)

## நீதிமன்ற ஊழியர் உதவி

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருபவர்களில் 35 பேருக்கு யாழ்.மேல் நீதிமன்ற சமூகத்தினால் தலா 500ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் இடம் பெற்ற சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருபவர்களின் தேவைகளை உணர்ந்து யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி மற்றும் உத்தியோகத்தர்களிடமிருந்து ஒரு தொகை பணம் சேகரிக்கப்பட்டது என்றும்

இந்தப் பணமே நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்து மேல்நீதிமன்ற உத்தியோகத்தர்களால் சிகிச்சை பெறுவோருக்கு நேரடியாக வழங்கப்பட்டது என்றும் கூறப்பட்டது. (ஏ-5)

நோத்லங்கா தகவல் தொழில்நுட்ப நிறுவனம்
பிரதான வீதி, சங்கானை ☎ 021 - 4591647 e-mail: onrthlankaiit@yahoo.com
O/L மாணவர்களுக்கான விசேட கற்கை நெறி
DIP. IN INTRODUCTION TO COMPUTER STUDIES 3 மாதம்
10 பாடநெறிகள் ஒரே கற்கைநெறியில் மிகக்குறைந்த கட்டணத்தில்
Word, Excel, Access, Powerpoint, Internet & e-mail Visual Basic
Photoshop CorelDraw Page Maker Computer Hardware
Dip.in Hardware Engineering (One Month)
! உங்கள் கணனிகளை நீங்களே அமைத்துக் கொள்வதற்கான 100% செய்முறைப் பயிற்சி நெறி!
பயிற்சியின்போது ஒவ்வொரு மாணவனுக்கும் ஒவ்வொரு கணனி வழங்கப்படும்.
!! ஒரு பிரிவில் 10 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்
!! கணனி பற்றிய முன்னறிவு தேவையில்லை. எவரும் கற்கலாம்!
1st Day Introduction
2.Disassembling of the computer
2nd Day Casing and Power Supply
3rd Day Mother Board
4th Day RAM, ROM Speed, Band width system bus
5th Day Hard drive, Floppy drive, Floppy disk, CD-ROM
6th Day Processor
7th Day VGA Card, Sound Card, Network Card, Modem
8th Day Keyboard, Mouse, Speaker
9th Day Cables & connectors
10th Day Assembling Casing Power Unit, Motherboard, Processor
11th Day I/O card, Memory, Hard drive, Floppy drive, CD drive.
12th Day BIOS setting
13th Day Booting DOS
14th Day Partition
15th Day Operating system Installation
16th Day Configuration of VGA cards, Sound cards&Modems
17th Day About monitor & Printer
18th Day Trouble shooting
19th Day Safety Maintenance
20th Day Software, Virus , Networking
!! மேலதிகமாக CD Writting, Software Instllation, Repairing, Faulfinding
(40534)(26)

முதலாம் ஆண்டு நினைவு அழைப்பு



திருமதி தர்மலிங்கம் ஜெயகுமாரி
இன்று (07.01.2005) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
முத்துமாரி அம்மன் கோயிலடி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.
(40530)(24-45-16)
சி.தர்மலிங்கம்
(கண்டு).

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837.

# இராணுவம் தலையிட இடம் அளிக்காதீர்!

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிப்புற்ற மக்களுக்கான நிவாரணப் பணிகள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளியிட்டிருக்கும் திடீர் உத்தரவு தமிழ் மக்களைப் பெரும் விசனத்தில் ஆழ்த்தியிருக்கின்றது.

'மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்தது' போன்ற நிலைமைதான் தமிழருக்கு.

ஏற்கனவே இரண்டு தசாப்தகால யுத்தக் கோரத்தால் பாதிக்கப்பட்டு துவண்டிருந்த தமிழர் தாயகத்தை ஆழிப் பேரலை அனர்த்தம் ஒருகை பார்த்தது என்றால், அதனால் மோசமாகப் பாதிப்புற்று மறுவாழ்வு பெற ஏங்கித் தவிக்கும் தமிழர் தாயகம் மீது தமது உத்தரவு மூலம் சம்மட்டித் தாக்குதல் நடத்தியிருக்கிறார் ஜனாதிபதி.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் முற்றாகப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசம். அங்கு இலங்கை அரசினுடையதோ, ஜனாதிபதியினுடையதோ அதிகாரம் செல்லாது. அந்தப் பகுதிகளை விடுத்து ஏனைய தமிழர் தாயகப் பிரதேசங்கள் உட்பட ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்துப் பிரதேசங்களிலும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும் பொறுப்பை - அதிகாரத்தை - இராணுவத்தின் கட்டளையிடும் அதிகாரிகளிடம் ஒப்படைக்கும் வகையில் உத்தரவிட்டிருக்கின்றார் ஜனாதிபதி.

தமிழர் தாயகத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வெளியில் உள்ள - அரச படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள - பிரதேசங்களில் இந்த நிவாரணப் பணிகளை அந்தந்தப் பகுதி அரச அதிபர்களின் கீழ் சிவில் அதிகாரிகளே இதுவரை பொறுப்பேற்று மேற்கொண்டு வந்தனர். பெரும்பாலும் தமிழ்ப் பகுதிகளில் தமிழ் சிவில் அதிகாரிகளின் கீழ் இப்பணி முன்னெடுக்கப்பட்டது. அப்படி முன்னெடுக்கப்படுவதே நியாயமானது.

ஆனால், இப்பொறுப்பு இப்போது நூற்றுக்கு நூறு வீதம் சிங்களவர்களை மட்டுமே கொண்ட சிங்கள இராணுவத்தின் கட்டளை அதிகாரிகளின் கைகளுக்கு மாறியிருக்கின்றது.

பேரலை அனர்த்தத்தினால் பாதிப்புற்ற மக்கள் இடம் பெயர்ந்து தங்கியிருக்கும் நலன்புரி நிலையங்களுக்குள் இந்த இராணுவத்தினர் ஆயுதங்களுடன் நுழைந்து அதிகாரம் செலுத்துவது பற்றிய தகவல்கள் ஏற்கனவே வெளியாகத் தொடங்கிவிட்டன.

கடந்த தேர்தலில் தமிழ் மக்கள் தமது ஏகப்பிரதிநிதிகளாக - அதிகாரபூர்வப் பிரதிநிதிகளாக - விடுதலைப் புலிகளை உலகுக்கு முரசறைந்து அறிவித்துள்ளனர்.

எனவே, தங்களது கட்டுப்பாட்டுப் பிரதேசமோ அல்லது அதற்கு வெளியிலோ - எங்கென்றாலும் - தமிழர் தாயகம் எங்கும் பேரனர்த்த நிவாரணப் பணிகளை வழிநடத்தும் பொறுப்பும், கடமையும் அந்தத் தமிழர் தாயகத்தின் ஏகப்பிரதிநிதிகளுக்கு உண்டு. அந்தவகையில் தமது கடமையைப் புலிகள் தரப்பு உணர்ந்து நிறைவேற்றி வந்தது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மற்றும் பொது அமைப்புக்கள் இணைந்து சிவில் அதிகாரிகள் மற்றும் புலிகளின் உதவியோடு இப்பகுதியில் நிவாரணப்பணிகளைக் கவனித்து வந்தன.

அதற்கு வேட்டுவைக்கும் நடவடிக்கை ஜனாதிபதியின் தற்போதைய உத்தரவால் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது.

ஏற்கனவே படையினர் தரப்பின் செயற்பாடுகள் குறித்துத் தமிழர்களுக்கு நல்ல பட்டறிவு உண்டு. இரண்டு தசாப்தகால யுத்தத்தின்போது ஏற்பட்ட அனுபவங்கள் தமிழர்களைப் பொறுத்தவரை சுலபமாக மறந்துவிடக் கூடியவை அல்ல.

இந்நிலையில், நிவாரணப்பணிகளில் படைத்தரப்பின் தலையீடு, அத்துமீறல், குழப்பச் செயற்பாடுகள் போன்றவை குறித்து முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

தமிழர் தாயகத்தில் அனர்த்தம் நேர்ந்த கணத்திலிருந்து துரிதமாகவும், விரைவாகவும், சிறந்த முறையிலும் நிவாரணப்பணிகளை மேற்கொண்டது மாத்திரமல்லாமல் அந்தப் பணியில் பல்வேறு தரப்பினதும் பங்களிப்பை சிறந்த முறையில் ஒருங்கிணைத்தும் பலரது பாராட்டையும் பெற்றிருக்கிறது தமிழர் புனர்வாழ்வுக் கழகம்.

அதன் பணிப்பாளரே இது விடயத்தில் படைத்தரப்பின் அத்துமீறல் போக்கை செய்தியாளர் மாநாட்டில் வைத்து பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்.

'புனரமைப்பு, புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்குத் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. ஆனால், விசேட அதிரடிப்படையினர் எமது பணிகளைச் செய்யவிடாமல் பலவந்தமாகத் தடுக்கிறார்கள்' -என்று அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இத்தகைய குழப்பநிலை ஏற்படாமல் - பாதிக்கப்பட்ட மக்களின் அவசர, அத்தியாவசிய நிவாரண மற்றும் புனர்வார்வாழ்வுப் பணிகளும், மீள்கட்டுமான நடவடிக்கைகளும் பாதிப்பின்றி முன்னெடுக்கப்பட வேண்டுமானால் - தமிழர் தாயகப் பகுதியில் இவ்விடயத்தில் இராணுவத் தலையீட்டுக்கு இடமே அளிக்கக்கூடாது.

எனவே, சுமுக நிலையில் இப்பணி நடைபெறவேண்டும் என்ற அக்கறை ஜனாதிபதிக்கு இருக்குமானால், இது விடயத்தில் தாம் விடுத்த உத்தரவை தமிழர் தாயகப் பிரதேச விடயத்திலாவது அவர் விரைந்து வாபஸ் பெற்றுக் கொள்ளவேண்டும்.

---

### இயற்கை அனர்த்தத்தினால்

# தேசிய அடையாள அட்டைகள் சேதமானவர்கள் அவற்றைப் பெற ஆட்பதிவுத் திணைக்களம் ஏற்பாடு

யாழ்ப்பாணம்.ஜன.7

சுனாமி பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு தமது தேசிய அடையாள அட்டைகள் சேதமானவர்களுக்கும், தொலைத்தவர்களுக்கும் மற்றும் இதுவரை அடையாள அட்டைகளைப் பெறாதவர்களுக்கும் விரைவில் அதனைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் பி.பீ.அபேகோன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இயற்கை அனர்த்தத்தால் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஏற்பட்ட அனர்த்தத்தினால் பலவிதமான பாதிப்புகளுக்குட்பட்ட அனைவருக்கும் எமது திணைக்களம் அனுதாபங்களையும் கவலையையும் தெரிவித்துக்கொள்கின்றது.

இந்த அனர்த்தத்தால் அடையாள அட்டைகள் பெறுவதற்கான ஆவணங்களும் பழுதடைந்திருப்பதாகத் தகவல்கள் வருகின்றன. இவர்களுக்கு அடையாள அட்டைகளை விரைவில் வழங்கத் திணைக்களம் நடவடிக்கை எடுக்க இருக்கின்றது. இதுதொடர்பான விசேட திட்டம் விரைவில் அறிவிக்கப்படும்.

அடையாள அட்டைகளைத் தொலைத்தவர்கள், தொலைந்த அடையாள அட்டை தொடர்பான விவரங்கள் யாவற்றையும் முடிந்தளவில் சேகரித்துப் பொலிஸ் அதிகாரிகளிடமும், கிராம அலுவலர்களிடமும் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். அத்துடன் அடையாள அட்டை பெறுவதற்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கத் தேவையான தகவல்கள் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், திருமணச் சான்றிதழ் போன்ற சேதமடையாத ஆவணங்களில் இருந்து பெறமுடியும் - என்றுள்ளது. (8-202)

---

# 3 கோடி ரூபா செலவில் சாவகச்சேரியை அபிவிருத்தி செய்ய நகர சபை திட்டம்

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இவ்வருடம் 3கோடி 30 லட்சத்து 50ஆயிரம் ரூபா செலவில் புனருத்தாரண அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நகரசபையின் இவ்வருட உத்தேச வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி தொகை மதிப்பிடப்பட்டுள்ளது.

சபை நிதியிலிருந்து வீதி அபிவிருத்தி, கட்டட நிர்மாணம், வடிகாலமைப்பு, நூலக புத்தகக் கொள்வனவு, சந்தைக் கட்டட அமைப்பு ஆகியவற்றிக்குச் சபை வருமானத்தின் 48.42 வீதமான 46லட்சத்து 2ஆயிரம் ரூபாவும் மூலதனச் சொத்துக்கள் பராமரிப்புக்கென 14லட்சத்து 38 ஆயிரம் ரூபாவும் புனர்நிர்மாண, புனரமைப்பு பணிகளுக்காக அரசிடமிருந்தும், அரசசார்பற்ற நிறுவனங்களிடமிருந்தும் 2கோடி 70லட்சத்து 10ஆயிரம் ரூபாவினை எதிர்பார்த்தும் வரவு செலவுத் திட்டத்தில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

சபையின் மொத்த உத்தேச வருமானமாக 4கோடி 68லட்சத்து 45 ஆயி ரம் ரூபாவும் மொத்த உத்தேச செலவீனமாக 4கோடி 68 லட்சத்து 20ஆயிரம் ரூபாவும் மேலதிகமாக 25 ஆயிரம் ரூபாவும் என மதிப்பிடப்பட்டுள்ளது.(8-117)

---

# பாதிக்கப்பட்ட பகுதிகளில் விசிற 'லைசோல்' தொற்று நீக்கி இல்லை

## தெளி கருவிகளும் அவசரமாகத் தேவை

யாழ்ப்பாணம்.ஜன.7

சுனாமி இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி மற்றும் வடமராட்சி கிழக்குப் பிரதேச மக்கள் தமது வீடுகளுக்கு மீளத் திரும்பமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அவர்களது பிரதேசத்தில் தொற்று நோய்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கு விசிற வேண்டிய 'லைசோல்' என்ற கிருமி நாசினிக்கு இங்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், மக்கள் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பமுடியாதுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்து சுனாமி அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு கூட்டுச் செயலணி இணைப்பாளர் சி.வி.கே.சிவஞானம் தகவல் தருகையில்:-

இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களில் ஓரளவு சேதமடைந்த வீடுகளைத் திருத்தி அங்கு மீளக் குடியமர மக்கள் விரும்புகின்றனர். அவர்களை மீளக்குடியமர்த்துவதற்கு முன்னர் அந்தப் பிரதேசம் தொற்றுநோய்கள் பரவாத பிரதேசமாக்கப்படவேண்டியுள்ளது.

அதற்கு 'லைசோல்' என்றகிருமிநாசினி விசிறவேண்டும். உடனடியாக 14 ஆயிரம் லீற்றர் 'லைசோல்' என்றகிருமி நாசினி தேவையாக உள்ளது.

யாழ்ப்பாணத்தில் எந்த இடத்திலும் இந்தக் கிருமி நாசினியைப் பெறமுடியாதுள்ளது.

இந்தக்கிருமிநாசினியைக் கொழும்பில் இருந்து எடுத்துவர நடவடிக்கையை எடுத்துள்ளோம். அக்கிருமிநாசினி கிடைத்த பின் அதை விசிறிய பின்பே மக்களை மீளக்குடியமர அனுமதிக்க முடியும் என்றார் அவர்.

இதேவேளை, தற்சமயம் கையிருப்பில் உள்ள கிருமிநாசினியைத் தெளிப்பதற்குத் தெளிகருவிகளும், சேதமடைந்த கிணறுகளைத் துப்புரவு செய்ய நீர் இறைக்கும் இயந்திரங்களும் அவசரமாகத் தேவையாக உள்ளன என்றும் - தொண்டு அடிப்படையில் இந்தப் பணியில் ஈடுபடவிரும்புபவர்கள் உடன் தொடர்பு கொள்ளும்படியும் - சிவஞானம் கேட்டுள்ளார். (ஐ-3)

---

### வடக்கு-கிழக்குப் பகுதிகளில்

# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவ மக்கள் துயர்துடைப்பு நிதியம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்.ஜன.7

வடக்கு - கிழக்கில் கடல் பேரனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு யாழ். மாவட்ட வணிகர் ஒன்றியம் துயர்துடைப்பு நிதியம் ஒன்றை அமைத்துள்ளது.

கடந்த 4ஆம் திகதி கிளிநொச்சி வருவாய்ப் பகுதி செயலகத்தில் நடைபெற்ற யாழ்.மாவட்ட வணிகருக்கான ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தின் போது இந்தத் துயர்துடைப்புநிதியம் அமைக்கப்பட்டுள்ளது.

கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக இந்த நிதியைத் திரட்டுவது என்றும் மறுவாழ்வுப் பணிகளைத் திட்டமிடுவோருடன் இணைந்து இந்நிதியை பயன்படுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

துயர்துடைப்பு நிதியத்துக்காக அமைக்கப்பட்ட வணிகர் ஒன்றியத்தின் செயற்குழ உறுப்பினர்களாக 11 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வணிகர் ஒன்றியத்தின் தலைவராக சொ.வெற்றியரசன், செயலாளராக மு.சுந்தரலிங்கம், பொருளாளராக இ.ஜெயராஜா ஆகியோரும் மற்றும் எண்மரும் ஒன்றியத்தில் அங்கம் வகிக்கின்றனர்.

இதில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

★ இந்த நிதிதிரட்டலுக்குத் தனியான வரவுத்துண்டைப் பயன்படுத்துதல் வேண்டும். பெறப்படும் எல்லா நிதிகளுக்கும் வரவுத்துண்டு வழங்கப்படவேண்டும்.

★ நிதி முழுவதும் வங்கிகளில் இடப்பட வேண்டும்.

★ நன்கொடையாளிகளின் பெயர், விவரம் நாளேடுகள் மூலம் மக்களுக்கு அறிவித்தல்.

★ முழுமையான கணக்குகள் பேணப்படுவதுடன் கணக்காய்விற்குட்படுத்துதல் வேண்டும்.

★ இக்கணக்கறிக்கையை மக்களுக்கு வெளிப்படுத்துதல்.

★ துயர் துடைப்பு நிதியத்தின் ஊடாகத் தமது பங்களிப்பினைச் செலுத்துமாறு யாழ்.மாவட்ட வணிகர்களைக் கோருதல்.

யாழ். மாவட்ட வணிகர் ஒன்றியத்தின் பணிமனையாக யாழ்.வணிகர்கழகம் செயற்படும். நிதியுதவியினை வழங்க விரும்புவோர் நேரடியாக வந்து இந்த அலுவலகத்தில் ஒப்படைக்க முடியும் என்றும் அல்லது யாழ்.மாவட்ட வணிகர் ஒன்றியத்தின் தொலைபேசி 021 222 2367 என்ற இலக்கத்தினூடாகவும், கிளிநொச்சியிலுள்ள அதன் அலுவலகத்தில் தொலைபேசி 0712 349565 என்ற இலக்கத்தினூடாகவும் தொடர்பு கொண்டு துயர் துடைப்பு நிதியத்தில் இணைந்து கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-7)

---

### நாளை

*மார்கழி 24*
*சனிக்கிழமை*
*(08.01.2005)*
திதி : *திரயோதசி*
*முன்னிரவு 11.06 வரை*
நட்சத்திரம் : *கேட்டை*
*முன்னிரவு 10.11 வரை*
*சனிப்பிரதோஷ விரதம்*
சுபநேரம் : *03.32 - 05.02*
ராகுகாலம்: *09.32-11.32*
*(யாவும் பழைய நேரப்படி)*

---

# வலுக்குறைந்த மின்சாரத்தால் கைதடி தெற்கு மக்கள் அவதி

கைதடி.ஜன.7

கைதடிதெற்கு நூலக வீதிக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் வலுக்குறைந்த மின்சாரத்தினால் இப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதிக்குக் கடந்த வருடம் மின்னிணைப்பு வழங்கப்பட்டவேளை மின் விநியோகம் சீராக இருந்தது. ஆனால், கடந்த முதலாம் திகதி கைதடியில் சில பகுதிகளில் மின்சாரம் வழங்கப்பட்ட பின்பே இந்நிலை ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. இது சம்பந்தமாக இப்பகுதி மக்கள் சாவகச்சேரி மின்சாரசபையின் பொறுப்பதிகாரிக்கு முறையிடப்பட்டிருந்தபோதும் அவர்கள் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்காதிருப்பது இப்பகுதி மக்களுக்கு கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை - கைதடியின் சில பகுதிகளான கைதடி வடக்கு, நவபுரம், கைதடி மயான வீதி ஆகிய இடங்களுக்கு கடந்த முதலாம் திகதி தொடக்கம் 24 மணிநேரமும் மின் வழங்கப்பட்டுள்ளது. அதேநேரம் சட்டவிரோத மின் பாவனையாளர்களும் இப்பகுதியில் மின்சாரத்தைப் பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (8-74)

---

### உதயவாக்கு

மனிதன் அனுபவிக்க விரும்பும் பொருள்களில் இருந்து அவனை அப்புறப்படுத்துவது சுலபமான காரியம் அல்ல.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## காணிகள் விற்பனைக்கு

கிளிநொச்சி, வட்டக்கச்சி ஆறுமுகம் சந்திக்கு அருகில் வருவாய் நிறைந்த இரண்டு ஏக்கர் குடியிருப்புக்காணியும் நல்ல விளைச்சல் தரும் மூன்று ஏக்கர் காணியும் தனியாகவும் சேர்த்தும் விற்பனைக்குண்டு. தொடர்பு: இலங்கையில் 0112734895, வெளிநாட்டில் 00495971 9127754. (40493)

## தவறிவிட்டது

கனகரத்தினம் சத்தியசீலன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை முகமாலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. அடையாள இல.693052661V கண்டெடுத்தவர்கள நவாலி சீலன் வெதுப்பகத்தில் ஒப்படைக்கவும். (40497)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான நம்பர்-1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் 08-01-2005 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.: 021 - 222 3529, 222 2867. P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (40393)

## காணவில்லை

சின்னையா சண்முகராசா என்பவரது "ஹீரோ" சைக்கிள் 05-01-2005 அன்று யாழ்.சத்திரச் சந்தியில் காணாமற் போய்விட்டது. இது பற்றிய தகவல் தெரிந்தவர்கள் இல.4, குடியேற்றத் திடடம், திருநெல்வேலி அல்லது 84/3, தபாற்கந்தோர் வீதி, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். (40519)

## ஒப்படைத்துதவவும்

05-01-2005 அன்று ஸ்ரான்லி வீதி கடை வாசலில் சைக்கிள் மாறி எடுத்துச்செல்லப்பட்டு விடடது. மாறி எடுத்தவர்கள் அ.தீபன், 120, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் ஒப்படைத்து உரிய சைக்கிளைப் பெற்றுக்கொள்ளவும் (40514)

## ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

வலி.தெற்கு,ஜன.7

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு உதவுவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் சகல ஆசிரியர்களையும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குக் கல்லூரிக்கு வருகைதருமாறு அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் கேட்டுள்ளார். (8-152)

# மனம் ஒரு நிலைப்படாவிடில் வழிபாட்டில் அர்த்தமில்லை

எங்கும் நிறைந்திருக்கும் இறைவனுக்கு ஆலயம் அமைத்து அங்கு பெருமானை எழுந்தருளச் செய்து பூஜை வழிபாடு செய்து உய்தி பெறும் வாய்ப்புப் பெற்றவர்கள் நாம். ஆனால், அந்த வாய்ப்பை எந்தளவுக்குப் பயன்படுத்துகின்றோம் என்பதைச் சிந்திக்கவேண்டியது எமது தலையாய கடமையாகும்.

ஆலய அமைப்பு முறைகள், ஆலயக் கிரியை முறைகள், ஆலய வழிபாட்டு முறைகள் என்பவற்றையெல்லாம் இறையருள் பெற்ற ஞானிகள் ஆகமங்களாக வகுத்துத் தந்துள்ளார்கள்.

ஆ - ஆன்மா, லயம் - ஒன்றித்தல், ஆன்மா இறைவனுடன் ஒன்றிற்கும் இடமே ஆலயம் ஆகும். ஆகவே, ஆலயத்தில் நடைபெறும் எந்தக் கருமமும் மனம் இறைவனிடம் ஒன்றிப்பதற்கு, லயமாவதற்கு வாய்ப்பாகவே வகுக்கப்பட்டுள்ளன.

சூரிய ஒளியில் நெருப்பு உண்டு. குவிவு வில்லையை அளவான தூரத்தில் பிடித்தால், அதில் படும் சூரிய ஒளிக்கதிர்கள் குவிவடைந்து, அதன்கீழே வைக்கப்படும் பஞ்சு அல்லது அதற்கொப்பான பொருளில் நெருப்பு உண்டாகக் காணலாம். நேரே சூரிய ஒளியிலிருந்து நெருப்பு உண்டாவதில்லை, குவிவுவில்லையின் பயன்பாட்டைப் பொறுத்துத்தான் நெருப்பு உண்டாகும்.

அதுபோல் ஆலயம் அமைத்துவிட்டால், ஆலயத்துக்குப் போய்வந்தால் இறைவன் அருள் கிடைக்கும் என நினைப்பது பொருந்தாது. குவிவுவில்லையில் சூரிய ஒளி குவிவடைவது போல எமது மனம் இறைவனிடம் குவிவடைதல் வேண்டும். அதற்குக் காரணமாக பூஜைகளும், விழாக்களும், ஆசார அனுட்டானங்களும் அமைதல் வேண்டும்.

ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனிடம் எமது மனம் குவிவடைவதற்கு ஏற்ற வகையில்தான் எல்லாக் கருமங்களும் நடைபெற வேண்டும். எந்த ஒரு கருமமும் வழிபாட்டிற்கு இடையூறாக இருக்கக்கூடாது.




ஆலயத்துக்குப் போக நினைத்த நேரம் முதல், ஆடை அலம்பும்போதும், குளிக்கும் போதும், பத்திரபுஷ்பம் எடுக்கும்போதும், பூஜை, அர்ச்சனைத் திரவியங்கள் சேகரிக்கும் போதும், ஆலயத்துக்குப் போகும்போதும், வழிபடும் போதும் மனம் ஒரேநிலையில் இறைசிந்தனையில் ஈடுபட்டிருத்தல் வேண்டும். உடல் அதற்கு பகாரமாக செயற்படவேண்டும்.

தூய்மையான வில்லையில் சூரிய ஒளி குவிவடைந்து நெருப்பை உண்டாக்குவது போலத் தூய்மையான உடலும் உள்ளமும் கொண்டு வழிபடும் போதுதான் உண்மையான இறையருள் சித்திக்கும்.

இதற்கிடையூறாகவுள்ள அனைத்துச் செயற்பாடுகளும் தவிர்க்கப்படவேண்டும்.

உண்மையில் நம் மனதால் சிவசிந்தனையைச் சிதைக்கவல்ல பேச்சுக்கள், கதைகள், பாடல்கள், வேடிக்கைகள், திருவிழாக்களைத் தெரு விழாக்களாக்கிக் குளிக்கப் போய்ச் சேறு பூசிய நிலையை ஏற்படுத்திவிடும். வேடிகக்கை விழாக்களைப் புனிதமான வழிபாட்டுத் தலங்களில் நடத்தாது வேறிடங்களில் வைக்கலாமே.

ஆலய பூஜை, விழாக்களைக் குறிப்பிட்ட நியம நேரம் தவறாமல் பயபக்தியுடன், உள் ளன்போடு செய்வதும், பூஜை முடிவடைந்த பசுமையோடு பூசகர் வழிபடுவோர்க்கு அருளுரை வழங்குவதும், விழாக்காலங்களில் சமய தீட்சை வைத்து வழிபடுவோரை, ஆசார அனுட்டானங்களில் ஈடுபடுத்துவதும், ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் மூல மூர்த்திக்குரிய தோத்திரங்கள், பஞ்சபுராணம், நற்சிந்தனைகள், வழிபாட்டு முறைகளுக்கு முன்னுரிமை கொடுத்தலும் "ஆலயத்தில் அனைத்தும் சாதனைக்குரியனவே" என்னும் உண்மையான புனிதமான கொள்கையுடன் நாம் எந்த நேரங்களிலும் உள்ளன்போடு செயற்படுவதும் இன்றைய காலத்தின் முக்கிய தேவைகள் ஆகும்.

இச்செயற்பாடுகளை ஆலயக்குருமாரும், பரிபாலன சபையினரும், வழிபடுவோர்களும் உண்மையில் சிந்தித்துச் செயற்பட்டு நம் சைவசமய செந்நெறியைப் போற்றிப் பாதுகாப்போமாக.

"வாழ்க மக்கள் - வளர்க ஆலயபுனிதமான தொண்டும் சமயமும்". ☆

சமூகமணி சி.சி.வரதராசா

## ஆதரவற்ற சிறுவர்களைப் பராமரிக்க சிறுவர் இல்லம் முன்வருகை

யாழ்ப்பாணம்,ஜன.7

சுனாமி பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட ஆதரவற்ற குழந்தைகளைப் பராமரிப்பதற்குக் கோகுலம் சிறுவர் இல்லம் முன்வந்துள்ளது.

அண்மையில் இடம்பெற்ற இப்பேரனர்த்தத்தால் பல நூற்றுக் கணக்கான குழந்தைகள் ஆதரவற்றுள்ளன. இவர்களைப் பராமரிப்பதற்குக் கோகுலம் சிறுவர் இல்லம் முன்வந்துள்ளது.

இது தொடர்பாகத் தொடர்புகொள்ள விரும்புவோர் கோகுலம் சிறுவர் இல்லம், 607ஏ, நீர்கொழும்பு வீதி, மாபோல, வத்தளை, ஸ்ரீஸ்ரீராதா கிருஷ்ண ஆலயம், இல.188, புதுச்செட்டித் தெரு, கொழும்பு - 13 என்னும முகவரியுடனோ 2948398,2433325 என்னும் தொலைபேசி இலக்கங்களுடனோ தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (8-202)

## ஹன்சார்ட் ஆசிரியர் குடும்பமும் பலி!

கொழும்பு,ஜன.7

இலங்கை நாடாளுமன்ற ஹன்சார்ட் குறிப்பு ஏட்டின் ஆசிரியர் பி.எம்.அமித்தும் அவரது குடும்பமும் சுனாமி கொந்தளிப்பில் இறந்தவர்களில் அடங்குவர்.

அமித்தும் அவர் மனைவி காந்தி மற்றும் அவர்களின் புதல்விகள் இருவரும் கடல் கொந்தளிப்பில் மரணமாகினர்.

திருமதி அமித் முன்னர் நாடாளுமன்றத்தின் பிரதம மொழிபெயர்ப்பாளராக இருந்தவர். (ப)

## காணி செயலணிக்குழு நேர்முகப் பரீட்சைகள் பிற்போடப்பட்டன

யாழ்ப்பாணம்,ஜன.7

வடக்கு - கிழக்கு மாகாணக் காணி நிர்வாகத் திணைக்களத்தால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த காணி செயலணிக் குழுவிற்கான நேர்முகப் பரீட்சைகள் மறுஅறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளன எனத் திணைக்களத்தின் மேலதிகச் செயலாளர் க.பரமலிங்கம் தெரிவிததுள்ளார். இப்பரீட்சைகள் நடைபெறும் தினங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (8-202)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி ஞா.மரியநாயகம்
அவர்களின் அன்புத் தந்தையார்
**ஆபரணம் ஞானப்பிரகாசம்**
அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/நாவற்குழி மகாவித்தியாலயம், கைதடி. (40528)
அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்.

## நெஞ்சைவிட்டு நீங்காத முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 10 - 09 - 1930



உதிர்வு 20 - 11 - 2003

**அமரர் சாமுவேல் பால்த்துரை**

திதி:~ 07.01.2005 வெள்ளிக்கிழமை

அணைந்து விட்ட எங்கள் குலவிளக்கே
எங்கே சென்றீர்? எமைப் பிரிந்து ஓராண்டு ஆகிவிட்டதே அப்பா!
இவ்வையகத்தில் உலாவிய எம் மாசற்ற அப்பாவே!
எப்போ நாம் உமைக் காண்போம்? உங்கள்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குருநாகர்,
யாழ்ப்பாணம். (40521)(12-15-45-26) - குடும்பத்தினர்.

## பன்னிரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 27 - 07 - 1951



உதிர்வு 20 - 12 - 1992

**திருமதி பிறைசூடி இராசேஸ்வரி (பவா)**

திதி: 07-01-2005

எங்கள் அன்புத் தெய்வமே! நாங்கள்
உம்மைப் பிரிவோமென்று கனவுகூடக்கண்டதில்லை.
எம்மை அன்போடும் பாசத்தோடும் கனவுகளோடும்
வளர்த்த உம் நினைவுகள் என்றுமே
எம்மனவுலகில் நிலைத்திருக்கும்.

ஆறாத்துயருடன் ஆத்மசாந்திக்காக நல்லூரானைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*

62, செட்டித் தெரு,
நல்லூர்.
(40523)(26-15-45)

கணவர், பிள்ளைகள்,
சகோதரி, மருமகன்மார்,
பேர்த்தி, பேரன்.

## மரண அறிவித்தல்

### அருட்சகோதரி மேரி வேர்டினன்ட் குருஸ் திகு

வங்காலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்.திருக் குடும்ப சபையைச் சேர்ந்தவரும் தற்பொழுது பேசாலை, திருக் குடும்பக் கன்னியர் இல்லத்தில் வசித்து வந்தவருமான அருட் சகோதரி மேரி (F) வேர்டினன்ட் குருஸ் திகு நேற்று (06.01.2005) வியாழக்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரது பூதவுடல் இன்று (07.01.2005) வெள்ளிக்கிழமை மு.ப.10.30 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் ஆலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியின் பின்னர், மன்னார் சேமக்காலையில் நல்லடக்கஞ்செய்யப்படும்.

*தகவல்:*
அருட்சகோதரி அன்சில்லா ஜேம்ஸ்,
*மாகாணத் தலைவி,*
*121, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.*

(40522)(42-15-45-26)

## நியூ றோயல் அக்கடமி

*சங்கத்தானை*

**A/L 2007**
கலை, வர்த்தகப் பிரிவு
தவிர்க்கமுடியாத காரணத்தால்
08-01-2005 சனி
காலை 9.00 மணிக்கு நடைபெறும்.
(40487) - இயக்குநர்.

## CHEMISTRY

N.Vakeesan
துரித வினாத்தாள் ரீதியான
மீட்டல்
2004 - 1994
*இடம்:* சுதுமலை வடக்கு
மானிப்பாய்.
ஆரம்பம்: 07.01.2005
7.00p.m. (S.L.T.)
(40526)

SPECIAL OFFER **Softview Computer College**

50% Discount

(Authorised Councelling Centre for Queen's Park College, London. A joint Venture with Arom Menporulagam Ltd., India.)

43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.

T.P: 021 2225170, 0777846811


| COURSE | DURATION | FEES |
|---|---|---|
| Diploma in Microsoft Office | 5 Months | 875/= |
| Diploma in Desktop Publishing | 4 Months | 1375/= |
| Diploma in Computer Programming | 8 Months | 2800/= |
| Diploma in Hardware Engineering | 4-5 Months | 1800/= |
| Diploma in Network Engineering | 4 Months | 2850/= |
| Diploma in Visual Basic | 4 Months | 1375/= |
| Diploma in Computer Science | 4 Months | 1375/= |
| Diploma in AutoCAD | 4 Months | 1375/= |
| Diploma in C++ | 4 Months | 1375/= |
| Diploma in Internet E-Mail | 2 Months | 750/= |

புதிய பிரிவுகள் ஆரம்பம் 07,12.01.2005

உங்கள் பதிவுகளை இன்றே முன்பதிவு செய்து கொள்ளுங்கள்

## உதயனுக்கு ரணில் குழுவினர் விஜயம்...





வடமராட்சியில் சுனாமி இயற்கை அனர்த்தங்களினால் ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிடுவதற்காக நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த எதிர்கட்சித் தலைவரும், ஐ.தே.கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க மரியாதை நிமித்தமாக 'உதயன்' நிறுவனத்துக்கு விஜயம் செய்தார்.

ஆசிரியபீட உறுப்பினர்களுடன் ரணில் விக்கிரமசிங்க, அவரின் சர்வேதச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன், ஐ.தே.கட்சியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் டி.எம்.சுவாமிநாதன், ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனா ஆகியோர் முதலாவது படத்தில் காணப்படுகின்றனர்.

'உதயன்' நூலகத்தை ரணில் குழுவினர் பார்வையிடுவதை அடுத்துள்ள படத்தில் காணலாம்.

# நிவாரண, புனர்வாழ்வுப் பணிகளை இராணுவ மயமாக்க வேண்டாம்!

## ரணிலிடம் பொது அமைப்புகள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.7

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை இராணுவ மயமாக்குவதைத் தடுத்து நிறுத்தும்படி எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாணத்துக்கு நேற்றுமுன்தினம் வருகை தந்த அவர் பொது அமைப்புக்களின் பிரதி நிதிகளைச் சந்தித்த சமயமே அவரிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

'சுனாமி' அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வுக் கூட்டுச்செயலணி இணைப்பாளர் சி.வி.கே.சிவஞானம், மனிதநேய அமைப்புக்களின் இணையத் தலைவர் எஸ். பரமநாதன் ஆகியோர் இக்கோரிக்கையை விடுத்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

இராணுவ இணைப்பதிகாரிகள் புனர்வாழ்வுப பணிகளைக் கையாள்வதை மக்கள் விரும்ப மாட்டார்கள். விடுதலைப்புலிகளும் ஏற்கமாட்டார்கள்.

சிவில் சமூகமும், சிவில் நிர்வாக அதிகாரிகளும் தற்சமயம் மீட்புப்பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். அதேவகையில் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும்.

இந்தப் பணியை இராணுவ மயமாக்குவதால் ஏற்படும் குழப்பங்களைத் தவிர்க்கும் வகையில் இதைத் தடுத்து நிறுத்துங்கள் - என்று ரணிலிடம் கோரினர்.

(ஐ-3)

# பாதிக்கப்பட்டோருக்கு வழங்க 'ரின்-மீன்' அவசர தேவை

## அனர்த்தச் செயலணி தகவல்

யாழ்ப்பாணம்,ஜன.7

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி மக்களுக்கு உணவு வழங்குவதற்கு 'மீன் ரின்கள்' அவசரமாகத் தேவைப்படுகின்றன என்று அறிவிக்கப்படுகிறது.

தற்சமயம் கடற்றொழில் இடம்பெறாததால் மீன் பெறமுடியாதுள்ளது. பெருமளவு கருவாடும் அழிக்கப்பட்டு விட்டது. எனவே உணவு வழங்க மீன்ரின்கள் அவசரமாகத் தேவையாக உள்ளன என்று அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வுக் கூட்டுச் செயலணி தெரிவித்தது.

மனநிலை பாதிக்கப்பட்ட மக்களுக்கு போசாக்கான உணவு வழங்கும் நோக்குடன் இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று செயலணிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (ஐ-3)

## இரவு வேளைகளில் மணல் திருட்டு

தென்மராட்சி,ஜன.7

வரணி இடைக்குறிச்சி, கரம்பைக்குறிச்சி ஆகிய பிரிவுகளில் இரவு வேளைகளில் வாகனங்களில் மணல் எடுத்துச் செல்லப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அப்பகுதிகளில் உள்ள வயல் வெளிகளில் உள்ள மணல் மேடுகளில் மணல் அள்ளப்பட்டு இரவிரவாக வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மணல் வாகனங்களில் ஏற்றப்படுவது தொடர்பாக உரிய இடங்களுக்கு அறிவிக்கப்பட்டும் பயன் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(8-117)

## சிகை ஒப்பனையாளருக்கு அழைப்பு

சுனாமி பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்யும் முகமாக யாழ். சிகை ஒப்பனையாளர் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் இன்று வெள்ளிக்கிழமை காலை 7மணிக்குச் சங்கப் பணிமனைக்குச் சமுகம் தருமாறு சங்க நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர்.

இதேவேளை -

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கடைகள் திறப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் சங்க நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

(8-202)

# ஒப்பற்ற தலைமைத்துவப் பண்பே சிவத்தமிழ்ச் செல்வியின் பெருந்திறன்

## இன்று அவருக்கு அகவை எண்பது நிறைவு



உலகம் போற்றும் ஆன்மீக அன்னை சிவத்தமிழ்ச் செல்வி அம்மாவுக்கு இன்றுடன் எண்பது வயது பூர்த்தியாகின்றது. இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்று அன்னை பலநூறு உரைகளை ஆற்றிப் பாராட்டைப் பெற்றவர். அன்னை தொட்ட காரியம் அனைத்தும் வெற்றியாகும் என்பது உண்மையாகும். அவர் தொடக்கிய திருப்பணிகள் யாவும் பூரணமான வெற்றியைத தந்தன. எம்மைப் போன்றவர்களை ஆற்றுப்படுத்தி அறவழி காட்டியவர் அன்னையார் அவர்கள். அம்மையாரால் உருவாக்கப்பட்ட துர்க்காபுரம் மகளிர் இல்லம் வெள்ளிவிழா ஆண்டில் காலடி வைக்க உள்ளது. இவ்வில்லத்தில் கற்ற பிள்ளைகள் பலர் பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்று நல்ல நிலையில் பணி செய்து வருகின்றனர். அன்னையின் ஒப்பற்ற பணிக்குத் துர்க்காபுரம் மகளிர் இல்லம் உயர்ந்த சான்றாக விளங்குகின்றது.

அன்னை சிவத்தமிழ்ச் செல்வியின் பிறந்த நாள் வைபவம் குறித்து உருவாக்கப்பட்ட சிவத்தமிழ்ச் செல்வி பிறந்தநாள் அறநிதியச் சபை வருடாவருடம் அன்னையின் பிறந்தநாள் விழாவை அறக்கொடை விழாவாக நடத்திவருவது வழககம். அவ்வகையில் இவ்வாண்டும் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு ஒரு லட்சம் ரூபாவும், புற்றுநோயாளர் சிகிச்சைப் பிரிவுக்கு 1 லட்சம் ரூபாவும் பேரலையின் தாக்கத்தினால் துயருற்ற மக்களிற்கு ஒரு லட்சம் ரூபாவும் வழங்க இருப்பது குறிப்பிடத்தக்கது.

இயற்கை அனர்த்தங்களின் விளைவால் ஏற்பட்ட துன்பச் சூழல் காரணமாக அமைதியான முறையில் அறக்கொடை நிகழ்வுகள் நடைபெற உள்ளன. அன்னையின் முத்துவிழா குறித்து இவ்வாண்டு முழுவதும் பயன்தரு காரியங்களைச் செய்யத் திட்டமிடப்பட்டள்ளது.

"மருள் நீக்க வந்த எழில் ஞாயிறு" என்று நாம் போற்றும் அன்னையின் மகத்துவத்தை வாழ்த்தாதவர்கள் இல்லை. சூரிய உதயத்திற்கு முன் விழித்து உறங்கும் போதும் உலக நன்மைக்காக சிந்திக்கும் இப்பிறவியை உலகம் அம்மா என்று உரிமையோடு பாராட்டுகின்றது. நாவலர் பெருமானுக்கு பின் நாம் வணங்கும் நற்றமிழ்த் தெய்வம் சிவத்தமிழ்ச்செல்வி அன்னையே! என்று ஈழத்துச் சைவர்கள் மதிகின்ற மாண்புடையவர் இவர். கணீரென்ற குரலில் கருத்துமிக்க உரைகளை ஆற்றி பல

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஊர் உலகம் வாழ்த்தும் உவந்து

எண் பத்தோராம் வயசில் ஏறிக் கொலுவிருந்து
பெண் குலத்தின் பேறாம் பெருஞ்சுடரே - எண்ணரிய
தொண்டுகள் செய்துவக்கும் துர்க்கா துரந்தரியே
மண்டு புகழ் பொங்கவே வாழ்.

வாழவழியின்றி வாடித் தவிக்கின்ற
ஏழைகள் நோயாளர் ஏதிலிகள் - சூழலாற்
தாக்குற்றுத் தாழ்ந்தோர் தயை நாடி நிற்போரைக்
காக்கின்றார் அம்மா கனிந்து.

தேடிவருஞ் செல்வத்தைச் சேமமுறத் திட்டமிட்டு
ஈடில்லாச் சேவை இயற்றுகின்றாய் - கூடிவரும்
பேர் புகழில் உள்ளம் பேதலிக்காப் பெற்றியினால்
ஊர் உலகம் வாழ்த்தும் உவந்து.

- சிற்பி.

## பழைமை பூத்த புதுமையாள் வாழி!

புன்னகை மறந்த சின்னப்
பூக்களைக் காக்கும் தாயள்
கண்களில் ஈரம் பூத்துக்
கசிந்திடும் கருணைச் செல்வி
உண்மைக்கு ஒருத்தி; சேவை
உளத்துக்கு ஒருத்தி யென்று
அன்னையிங்கானாள்; நூறு
அகவையும் காண்பாள் வாழி!

முதுமையும் அழகென்றான
மூத்தவள்; ஞானச் செம்மைப்
பதுமையென் றான தேவி
பவித்திரம்; பழைமை பூத்த
புதுமையள் இனம்பல்லாண்டு
புலர்ந்திட வாழ்த்து மெந்தன்
எதுகைகள் வெல்ல; மோனை
ஏற்றிடச் செல்வி வாழ்வாள்!

ஆசையற்றிருக்கும் போதும்
அன்னைமண் நிமிர்ந்து வீர
மீசைகொண் டிலங்கி நாளை
மீண்டொரு அரசைக் காணும்
ஆசையுற்றிருக்கும் தேவ
அன்னையள் இனம்பல் லாண்டு
ஓசைகொண்டுலவி ஞான
உருவினில் வாழ்வாள் வாழி!

தாயன துலங்கும் நெஞ்சம்
துணையென வருடும் கைகள்
நாயண நறுக்குப் போல
நல்லன ஊதும் தேனி
காயன பழுக்கும் கண்கள்
கனிந்துமே பொலியும் மேனி
வாயெலாம் வாழ்த்துப் பாட
வாழ்ந்திடும் இனம் பல்லாண்டு!

- புதுவை இரத்தினதுரை.

# 31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்



## திருமதி தம்பன் அம்மா

*அன்புடனும் பண்புடனும் எமை வளர்த்து*
*ஆறுதலும் தேற்றுதலும் கூறிய எம் அன்புத் தெய்வமே– இன்று*
*ஆற்றுவோரோ தேற்றுவோரோ இன்றித் தவிக்கின்றோம் – நாம்.*

**அன்புடையீர்!**

கடந்த 09.12.2004 அன்று இறைபதம் எய்திய எமது அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை (08.01.2005) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற உள்ளதால் அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"தேவி இல்லம்"
கலைமகள் சனசமூக நிலைய வீதி,
நவிண்டில். (40416)(39-19-15-26)

என்றும் உங்கள்
நினைவுடன் வாழும்:
**குடும்பத்தினர்.**

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
19
-
08
-
1925



விண்ணில்
30
-
12
-
2002

## திருமதி மங்கையற்கரசி நவரத்தினம்

(கோப்பாய் மத்தி)

அன்புடனும் பண்புடனும்
ஆதரவாய் பேசியெம்மை
அகமகிழ வைத்தீர்கள்!
அமுதூட்டி ஆசைகாட்டி
மங்கையர் திலகமாய்
மாண்புடனே வாழ்ந்தீர்கள்!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவு மட்டும் என்றும்
எமை விட்டுப் பிரியாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய
தினமும் இறைவனை வேண்டுகின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!*

V.T.S. வீதி.
உரும்பிராய் தெற்கு.
உரும்பிராய்.
(40499)(26-19-15)

உங்கள் நினைவுடன் வாழும்:
**கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளை.**

# ஏழாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
16
-
08
-
1936



விண்ணில்
07
-
01
-
1998

அமரர்
## மாணிக்கம் பொன்னம்பலம்

(Drilling Foreman, Irrigation Dept, Colombo)

*அன்பின் இருப்பிடமாய்*
*குடும்பத்தின் ஒளிவிளக்காய்*
*சமூகத்தின் அறிவொளியாய்*
*பண்பின் சிகரமாய்*
*பல்லோரும் போற்றும் பண்பாளனாய்*
*இவ்வுலகில் வாழ்ந்து வழிகாட்டிய தெய்வமே! நீங்கள்*
*இறையடி சேர்ந்து ஏழாண்டுகள்*
*சென்றாலும் உங்கள் நினைவுகள்*
*எம்மைவிட்டு என்றும் அகலாது!*
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு.
(40502)(26-19-15)

- **மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## கல்வியியற் கல்லூரி திங்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.7

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான 2005ஆம் ஆண்டு முதலாம் தவணை எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்றும், முகிழ்நிலை ஆசிரியர்கள் முதல்நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை கல்லூரிக்குச் சமூகமளிக்க வேண்டும் எனவும் பீடாதிபதி கேட்டுள்ளார். (3)

## நெய்த்தீபம் ஏற்றி விசேட பிரார்த்தனை

குடத்தனை,ஜன.7

சுனாமி பேரலை இயற்கை அழிவினால் உயிரிழந்த ஆத்மாக்கள் சாந்தியடையவும் காயமுற்றவர்கள் குணமடையவும் வேண்டி வெற்றிலைக்கேணி, முள்ளியான் மண்டலாய் பிள்ளையார் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு நெய்த்தீபம் ஏற்றி விசேட பூசையும் பிரார்த்தனையும் நடைபெறவுள்ளன என மேற்படி ஆலய பிரதமகுரு இமண்டலேஸ்வரக் குருக்கள் தெரிவித்துள்ளார். (3-78)

## மட்டு., அம்பாறை தமிழீழ நீதிமன்று மீண்டும் இயங்குகிறது

மட்டக்களப்பு,ஜன.7

தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த மட்டு., அம்பாறை தமிழீழ நீதிமன்ற நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் தொடக்கம் வழமை போன்று நடைபெற்றன.

அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக நீதிமன்றப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

அதேவேளை, குறிப்பிட்ட காலத்தில் இடைநிறுத்தப்பட்டிருந்த நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகள் தொடர்பான தவணைகள் வழக்காளி, எதிராளிகளுக்கு அறிவிக்கப்படுமெனவும் மேலதிக விவரங்களுக்கு நீதிமன்றப் பதிவாளரைத் தொடர்புகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-3)

## தென்மராட்சியில் செயலணிக் குழு

சாவகச்சேரி,ஜன.7

இராட்சத அலைகளால் பாதிக்கப்பட்ட மக்களின் நடவடிக்கைகள் மற்றும் உதவிகளைக் கவனிக்கத் தென்மராட்சியில் 'செயலணிக் குழு' ஒன்று தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

தென்மராட்சியில் பொதுமக்களால் சேகரிக்கப்படும் உதவு தொகைகள், பொருள்கள் என்பனவற்றை இக்குழுவினூடாகப் பெற்றுச் செயற்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (4-31)

## தனியார் கல்வி நிலைய ஒன்றியத்தின் கூட்டம்

தென்மராட்சி,ஜன.7

தென்மராட்சி கோட்ட தனியார் கல்வி நிலையங்களின் ஒன்றிய செயற்பாடுகள் தொடர்பான பொதுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு தென்மராட்சி கோட்ட அரசியல்துறை செயலகத்தில் நடைபெறும்.

இதுவரை ஒன்றியத்தில் பதிவு செய்யாத கல்வி நிலையங்கள், பிரத்தியேக வகுப்புகள் அன்றைய தினம் பதிவு செய்யுமாறும் பதிவு செய்யப்படாத கல்வி நிலையங்கள் பிரத்தியேக வகுப்புகள் நடத்துவோர் மீது நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக ஆராயப்படுமென அறிவிக்கப்பட்டடுள்ளது. (8-117)

## காரைதீவில் செயலணிக்குழு

காரைதீவில் சுனாமி அனர்த்தம் காரணமாக அல்லற்படும் மக்களை மீட்டெடுப்பதற்காக "அகதிகள் நிவாரண நலன்புரி செயலணிக்குழு" ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

தலைவராக ஜே.கே.பிரான்சிஸ், உபதலைவராக எஸ்.நந்தேஸ்வரன், செயலாளராக கே.லோகநாதன், உபசெயலாளராக வ.ஸ்ரீதரன், பொருளாளராக கே.பத்மராஜா ஆகியோர் தெரிவானார்கள்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக மா.ஜெகநாதன், த.இராஜசேகர், க.லோகநாதன், ப.சந்திரமோகன், ச.அமிர்தானந்தன், வி.குலேந்திரன், இ.குணசிங்கம், ஜெ.ஜெயசங்கர், திருமதி பி.தம்பிராஜா, திருமதி எஸ்.செல்வநாயகி ஆகியோரும் தெரிவானார்கள்.

போஷகர்களாக எஸ்.இராமகிருஷ்ணன் (பிரதேச செயலர்), க.பத்மநாதன் (எம்.டி.), வி.தங்கவேல் (விமல்) ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

உள்நாட்டு/வெளிநாட்டு நண்பர்கள் மற்றும் பொது அமைப்புக்கள் காரைதீவு மக்கள் வங்கி கணக்கு இல. 0223-2-027012-8 என்ற கணக்கிற்கு தமது உதவிகளை வழங்கலாம். தொலைபேசி இல.067-222-3401/2220107 என்பனவாகும். பிரதான வீதியில் பணிமனை இயங்குகிறது. (3)

# இன்றைய பிறந்தநாளில் மனமுவந்து வாழ்த்துகின்றோம்



## சிவத்தமிழ் செல்வியே சிறப்புற்று வாழியவே!

தெல்லிநகர் பெற்றெடுத்த தெய்வத்தாய் தங்கம்மா
தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவிடவே
நல்லிதயங் கொண்டே நற்சேவை செய்யும்
சிவத்தமிழ்ச் செல்வியே!
இன்றைய பிறந்தநாளில் மனமுவந்து
வாழ்த்துகிறோம்
பல்லோருஞ் சேர்ந்தே எந்நாளும் தொண்டாற்றி
விரும்
எங்கள் துர்க்கா துரந்தரியே சிறப்புற்று
வாழியவே!
பல்லாண்டு காலம் பண்புடன் சேவையாற்றி பலபோற்ற வாழ்க வாழ்க என இந்நாளில் வாழ்த்துகின்றோம் இன்புற்று வாழியவே!

வாழ்த்துவோர்: உரிமையாளரும் பணியாளர்களும்
சிறிநந்தியா நகை மாடம்
இல.1,56,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
சாதுயா நகைமாடம்
1/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
சிறிரூபா நகைமாடம்
1/2,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

40491(42-19-15-26)

# நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்



எங்கள் சைவத்தமிழன்னை
*கலாநிதி*
*சிவத்தமிழ்ச் செல்வி*
**தங்கம்மா அப்பாக்குட்டி**
*அவர்களது எண்பதாவது அகவையன்று*
*அவரது தன்னலமற்ற இறைப*
*போற்றுவதுடன் தொடர்ந்தும் அவரதுப*
*சிறந்திடவும் ஆரோக்கியத்துடன் நீடூழி*
*வாழவும் வாழ்த்துகின்றோம்.*

கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள்,
உடுவில் கோட்டம்.

(சி.40247)(39-19-15-26)

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
12
-
05
-
1920



உதிர்வு
22
-
12
-
2000

## அமரர் சிதம்பரப்பிள்ளை பொன்னையா

திதி:07.01.2005

அன்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய் எம்மை வாழ வைத்த தந்தையே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


*நிரந்தர முகவரி:*
சிவன்கோயில் வீதி,
எழுதுமட்டுவாழ் தெற்கு.

*தற்காலிக முகவரி:*
டச்சு றோட்,
சாவகச்சேரி.
(40274)(39-19-15-26)

**மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும்

மண்ணில்
1926
–
09
–
19



விண்ணில்
2004
–
12
–
08

## திருமதி சோதி கிருஷ்ணர்

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் தெகிவளையை வதிவிடமாகவும் கொண்ட *திருமதி சோதி கிருஷ்ணா* அவர்களின் அந்தியேட்டிக்கிரியை இன்று (07.01.2005) வெள்ளிக்கிழமை No:07, FAIRLINE, ROAD, DEHIWALA இல் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் அதைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
திரு.கி.சிவப்பிரகாசம்,
(பிரதிக்கல்விப் பணிப்பாளரும்,
சமாதான நீதிவானும்). (40472)(39-19-15-26)

**மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.**

நிவாரண, புனரமைப்புப் பணிகள் குறித்து

# கிறிஸ்தவ மதத்தலைவர்களோடு ஜனாதிபதி விரிவாக ஆராய்வு

கொழும்பு,ஜன.7

'சுனாமி' அனர்த்தம் மற்றும் அதன் பின்னரான நிவாரண, புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வுப் பணிகள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கடந்த செவ்வாயன்று கிறிஸ்தவ மதத்தலைவர்களுடன் கலந்துரையாடலொன்றை நடத்தியிருக்கிறார்.

கத்தோலிக்க பேராயர் கலாநிதி ஒஸ்வர்ல்ட் கோமிஸ் மற்றும் வண.அருட்திரு. குமார இலங்கசிங்க அடிகளார் த்லைமையிலான இரண்டு குழுவினரைச் சந்தித்த ஜனாதிபதி, அனர்த்தத்தின் பாதிப்பைச் சீர்செய்வதற்காக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை விலாவாரியாக விளக்கினார்.

- இந்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களைப் பேணும் அரசின் முயற்சிக்குக் கத்தோலிக்க மதத்தலைவர்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டுமெனவும் ஜனாதிபதி இங்கு கேட்டுக்கொண்டார்.

'சுனாமி' அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும். அவர்களுக்கு வீடமைப்பு மற்றும் இதர வசதிகள் செய்துகொடுக்கப்படும். மீன்பிடித்துறைக்கு இப்போது குறைந்த பட்சம் ஒரு லட்சம் மீன்பிடிப்படகுகளாவது தேவை. மீன்பிடித்துறையைக் கட்டியெழுப்ப உதவுவதாகப் பல்வேறு நாடுகள் உறுதியளித்திருக்கின்றன - என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (க-3)

# சகல பாடசாலைகளையும் சமகாலத்தில் ஆரம்பித்து கல்வியில் சம வாய்ப்பை உறுதிப்படுத்துங்கள்!

## ஜனாதிபதியிடம் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

காரைதீவு,ஜன.7

'சுனாமி'யால் அழிக்கப்பட்ட அல்லது சேதமாக்கப்பட்ட பாடசாலைகளை மீளக்கட்டியெழுப்பும் வேலைகள் ஆரம்பிப்பதற்கு ஜனவரி 15ஆம் திகதிவரை காத்திருப்பது என்பது கல்வியில் சமவாய்ப்பை மறுக்கும் செயலாகும்.

எனவே, அழிக்கப்பட்ட பாடசாலைகளுக்குப் பதிலாகத் தற்காலிக கொட்டகைகளை அமைப்பதற்கான நிதியை வலயக் கல்விப் பணிப்பாளருக்கு வழங்கி அப்பாடசாலைகளையும் சமகாலத்தில் தொடங்க ஆவணசெய்ய வேண்டும்.

- இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் கேட்டுள்ளார்.

இதுதொடர்பாக அவர் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது:-

அகதிமுகாம்களாகவுள்ள பாடசாலைகள் விடுவிக்கப்பட வேண்டுமானால் அங்குள்ள அகதிகளுக்கு வெளிநாடுகளிலிருந்து வரும் தற்காலிக கூடாரங்களை வழங்கவேண்டும்.

இதே நடைமுறை வடக்கு - கிழக்குக்கு மட்டுமல்ல தெற்கு, மேற்குப் பிரதேசங்களுக்கும் பொருந்தும்.

2 தசாப்த காலமாக வடக்கில் கையாண்ட அனுபவத்தின் அடிப்படையில் இவ்வாலோசனை முன்வைக்கப்படுகின்றது - இவ்வாறுள்ளது. (3)

# வைகுந்தவாசனின் மறைவு தமிழ்மக்களுக்குப் பேரிழப்பு

## ஈழவேந்தன் அனுதாபம் தெரிவிப்பு

யாழ்பாணம்,ஜன.7

தமிழீழத்தை ஐக்கிய நாடுகள் சபையில் பிரகடனப்படுத்துமாறு கோரிய ஈழத்தமிழரான எஸ்.கே.வைகுந்தவாசனின் மறைவு ஈழத்தமிழரைப் பொறுத்தவரை பேரிழப்பு என்பதை நாம் ஒவ்வொருவரும் ஏற்றே ஆகவேண்டும்.

லண்டனில் இயற்கை மரணமாகிய வைகுந்தவாசனின் மறைவு குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் விடுத்துள்ள அனுதாபச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரி வித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வைகுந்தவாசன் அகவை முதிர்ந்து நோய் வாய்ப்பட்ட நிலையில் அரசியலில் இருந்து ஒதுங்கியிருந்ததை நாம் நன்கு அறிவோம்.

ஆனால், அவர் ஒரு காலத்தில் அதாவது, 1970களின் பிற்பகுதியில் தமிழீழத்தை அங்கீகரிக்க வேண்டும் என்று ஐ.நா.மன்றத்தில் 3 நிமிடங்கள் நிகழ்த்திய உரை வரலாற்று நிகழ்ச்சியாகும்.

1980களில் நியூயோர்க்கில் இடம்பெற்ற தமிழீழ மாநாட்டில் கலந்துகொண்ட இவர், ஐ.நா. மனறத்திற்கு என்னை அழைத்துச்சென்று தான் எவ்விதம் ஐ.நா.மன்றத்தில் பலருக்குத் தெரியாதவகையில் புகுந்த வரலாற்றினையும் தான் உரை நிகழ்த்திய இடத்தையும் பெருமித உணர்வோடு காட்டிய இனிய நிகழ்ச்சிகள் என்றும் எம் நினைவலைகளில் மோதுகின்றன.

சாவும் பொருளுடைய சாவாக அமையவேணடும் என்பதற்காக ஈழத்தமிழர்கள் உயிரைத் துச்சமென மதித்து ஏன் போராடுகிறார்கள் என்று அன்று வைகுந்தவாசன் கொடுத்த விளககம் காலத்தின் தேவையை நிறைவுசெய்யும் பணியாக அமைந்தது.

உலகின் கவனத்தை எம்பால் ஈர்க்கும் முறையில் அவர் ஆற்றிய பணியை நாம் என்றும் நனறியுணர்வுடன் நினைவு கொள்வோமாக - என்று உள்ளது. (3-13)




யாழ்நகர் மைய றோட்டரக்ட் கழகத்தின் 12ஆவது பதவி ஏற்பு வைபவத்தின்போது எடுக்கப்பட்ட படம். புதிதாகப் பதவியேற்ற நிர்வாகிகள் படத்தில் காணப்படுகின்றார்கள்.

# புதிய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன

தென்மராட்சி,ஜன.7

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஓய்வூதியம் பெறுவோருக்குப் புதிய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ஓய்வூதியக் கொடுப்பனவு ஜனவரி மாத ஓய்வூதிய வவுச்சருடன் வழங்கப்படவுள்ளது.

பிரதேச் செயலக ஓய்வூதியப் பிரிவினர் பொதுநிர்வாகச் சுற்றறிக்கை 14/2004இன் பிரகாரம் புதிய ஓய்வூதியக் கணிப்பீடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பிரதேச செயலகத்தில் ஓய்வூதியம் பெறும் அனைவருக்கும் புதிய ஓய்வூதிய அளவுத் திட்டப் பிரகாரம் ஓய்வூதியம் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

5 ஆயிரம் ரூபாவுக்குக் குறைந்த ஓய்வூதியம் பெறுவோருக்கு 750 ரூபாவும், 10 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட ஓய்வூதியம் பெறுவோருக்கு ஆயிரத்த 500 ரூபாவும் 5 ஆயிரம் ரூபாவுக்கும் 10 ஆயிரம் ரூபாவுக்கும் இடைப்பட்ட ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியத் தொகையின் 15 வீதமும் வழங்கப்படவுள்ளன.

ஓய்வுபெற்று பத்து வருடங்கள் பூர்த்தியாகாத ஓய்வூதியர்களுக்குப் பத்து வருடங்களின் பின்னர் கிடைக்கக்கூடிய ஓய்வூதியக் கொடுப்பனவின் 15 வீதம் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை, வலிகாமம் தெற்குப் பிரதேச செயலகத்தின் ஊடாக ஓய்வூதியம் பெறும் சகல ஓய்வூதியர்களுக்கும் வரவு - செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறான அதிகரித்த ஓய்வூதியக் கொடுப்பனவுகள் இம்மாத ஓய்வூதியத்துடன் சேர்த்து வழங்கப்பட உள்ளதாகப் பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் அறிவித்துள்ளார்.

ஜனவரி மாத ஓய்வூதியம் இம்மாதம் 12 ஆம் திகதி புதன்கிழமை வழங்கப்படவுள்ளது. (8-117-152)

# அமைச்சர் ஜெயராஜ் காரைதீவுக்கு விஜயம்

வர்த்தக நுகர்வோர் பாவனையாளர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே நேற்றுமுன்தினம் மாலை மட்டக்களப்பு, காரைதீவுக்கு விஜயஞ்செய்தார்.

முதலில் காரைதீவு பிரதேச செயல்கத்தில் விளக்கக் கூட்டம் நடைபெற்றது. அம்பாறை மாவட்ட எம்.பி. க.பத்மநாதன் பிரதேச செயலாளர் எஸ்.இராமகிருஷ்ணன் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

காரைதீவின் பாதிப்புப் பற்றி அமைச்சர் விரிவான விளக்கத்தை அறிக்கைவடிவில் பெற்றுக்கொண்டார்.

ஐயாயிரம் குடும்பங்களுக்கான நிவாரணப் பொருள்களை அமைச்சர் கொண்டு வந்தார். காரைதீவுக்கு இரண்டாயிரத்து 500 குடும்பங்களுக்கான பொருள்களை வழங்கினார்.

அரிக்கன்லாம்பு, மண்ணெண்ணெய் அடுப்பு, பாய், சட்டி, பானை, கரண்டி என்பன அதில் அடங்கியிருந்தன.

அதேவேளை, குருநாகல், கல்கமுவ பிரதேசத்திலிருந்து 14 லொறிகளுடன் ஒரு பௌதத மதகுரு வருகைதந்து சில பொருள்களை வழங்கினார்.

'சக்தி' நிறுவனப் பணிப்பாளர் ஜே.ஸ்ரீரங்கா அத்தருணம் சமுகமளித்திருந்தார்.

பின்னர் காரைதீவுக்குள் சென்று பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டு முகாம்களுக்கும் சென்றார். விடுதலைப் புலிகளின் பிரமுகர் றோமியோவும் கலந்துகொண்டார். (3)

# ஆள்கொணர்வு வழக்குகளில் ராஜபக்ஷ பதில்மனு தாக்கல்

யாழ்ப்பாணம்,ஜன.7

வடபகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணமற்போனவர்கள் தொடர்பாக ஆள்கொணர்வு வழக்குகளில் எதிர்மனுதாரரான லான்ஸ் கோப்ரல ராஜபக்ஷ பதில் மனுக்களை நேற்றுமுன்தினம் யாழ். மேல் நீதிமன்றில் சமர்ப்பித்தார்.

1996 - 1997ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணமற்போனவர்களான புத்தூர் கிழக்கைச் சேர்ந்த செல்லத்துரை நந்தகுமாரன், பூதத்தம்பி யதீஸ்குமார், யாழ். கொய்யந்தோட்டத்தைச் சேர்ந்த பரமு சந்திரசேகரன், அரியாலையைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுதாகரன், நாகமுத்து செல்வரத்தினம், லோகேஸ்வரன் சேரன் ஆகிய ஆறு பேர் தொடர்பான ஆள்கொணர்வு வழக்குகள் யாழ். மேல் நீதிமன்றில் நீதிபதி கே.பி.எஸ். வரதராசா முன்னிலையில் எடுக்கப்பட்டன.

இதன்போது எதிர்மனுதாரர்களில் ஒருவராகக் குறிப்பிடப்பட்டிருந்தவரும் குறித்த காலத்தில் அரியாலை இராணுவ முகாமில் கடமையாற்றியவருமான லான்ஸ் கோப்ரல் ராஜபக்ஷ தனக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகத் தனது பதில் மனுக்களை மன்றில் சமர்ப்பித்தார்.

அதனைத் தொடர்ந்து குறித்த வழக்குகள் தொடர்பான ஆரம்ப விசாரணைகளை நடத்துவதற்காக எதிர்வரும் 17ஆம் திகதிவரை வழக்கை நீதிபதி ஒத்திவைத்தார். (3-5)

# மீன் உண்பதற்கு மக்கள் அஞ்சவே தேவையில்லை!

## விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு,ஜன.7

மக்கள் மீன் உண்பதற்கு அச்சம் கொள்ளத் தேவையில்லை. கடல் உணவுகளில் விஷம் கலந்திருக்கிறது என்று கூறப்படும் கதைகளை நம்பவேண்டாம் என விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அவர் இது பற்றித் தொடர்ந்து கூறியதாவது:-

'சுனாமி' பேரலை அனர்த்தத்தையடுத்து இலஙகையர் மீன் உண்பதைத் தவிர்த்து வருகின்றனர். கடல் உணவுகளில் நஞ்சுப்பொருள் கலந்துள்ளது என வதந்திகள் பரப்பப்பட்டு வருகின்றன. இது முற்றிலும் தவறான செய்தியாகும். மக்கள் எவ்வித அச்சமும் இன்றி மீன்களை உண்ணலாம்.

'சுனாமி' பேரலையால் கடலில் நச்சுப் பொருளகள் கலப்பதற்கு வாய்ப்புகள் இல்லை. அப்படிக் கலந்திருந்தால் முதலில் மீன்களே பாதிக்கப்படும். எனவே, அச்சமின்றி மீன்களை உண்ணலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-க)

# புலிகள் அனுமதித்தால் வன்னியிலும் நெடுஞ்சாலைகள் புனரமைப்பு

## பிரதி அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு,ஜன.7

விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் சம்மதம் கிடைத்தால் 'சுனாமி' அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வன்னிப் பகுதியிலும் நெடுஞ்சாலைப் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள முடியுமென்று நெடுஞ்சாலைகள் பிரதியமைச்சர் ரி.பீ.ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை செத்சிறிபாயவிலுள்ள நெடுஞ்சாலைகள் அமைச்சில் செய்தியாளர் மாநாடொன்றை நடத்தியபோதே பிரதியமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

'சுனாமி' அனர்த்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நெடுஞ்சாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக ஆயிரத்து 35 மில்லியன் ரூபா தேவைப்படுகிறது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஏற்கனவே நெடுஞ்சாலைகளைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பகுதிகளில் - குறிப்பாக வன்னிப் பகுதியில் நெடுஞ்சாலை புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள நாம் ஆர்வமாக உள்ளோம். விடுதலைப் புலிகள் அனுமதி வழங்கினால் அங்கு பணிகளை மேற்கொள்ளமுடியும் - என்றார். (எ-க)

# டொலரின் பெறுமதிக்கு எதிரான ரூபாவின் மதிப்பு உயர்வு

கொழும்பு,ஜன.7

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் நாட்டின் பொருளாதார நிலைமை மோசமாகப் பாதிக்கபட்டிருக்கின்றது. ஆனால், இலங்கை ரூபாவின் பெறுமதியோ எதிர்பாராதவிதத்தில் அதிகரித்து வருகின்றது.

ஆழிப்பேரலை அனர்த்தத்துக்கு முன்னர் ஓர் அமெரிக்க டொலருக்கு இலங்கை ரூபாவின் பெறுமதி 103 ரூபாவாக இருந்தது. ஆனால், புதனன்று டொலரின் பெறுமதி 99 ரூபாவாக வீழ்ச்சி கண்டது; ரூபாவின் பெறுமதி உயர்ந்தது.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணத்துக்காக உலகின் பல நாடுகளிலிருந்தும் இலங்கைக்கு உதவுதொகை பெருமளவில் கிடைத்து வருகிறது. அந்த உதவுதொகைகள் மத்திய வங்கிக்கு வந்துசேர்வதை அடுத்து அந்நிய செலாவணி அதிகரித்து வருகிறது. இதன் காரணமாகவே ரூபாவின் பெறுமதி அதிகரிக்கின்றது என்றும் -

அடுத்துவரும் நாள்களில் ரூபாவின் பெறுமதி மேலும் அதிகரிக்க, ரூபாவிற்கு எதிரான டொலரின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடையும் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-க)

# எமது பாதிப்புகள் இன்னமும் முழுதாக மதிப்பிடப்படவில்லை

## கடற்றொழிலாளர் சமாசம் ரணிலுக்கு மகஜர்

யாழ்ப்பாணம்,ஜன.7

அமைதிப் பேச்சுகளை நீங்கள் ஆரம்பித்ததின் பின்னர் நாங்கள் எமது கடற்றொழில்களை மெதுவாக ஆரம்பித்திருந்தோம். எமக்கு மீன்பிடிக்கான பொருள்கள் யாவும் வழங்கப்பட்டிருந்தன. ஆனால், அவை யாவும் இப்போதைய கடற்கொந்தளிப்பினால் அழிக்கப்பட்டுவிட்டன அல்லது காணாமற்போய்விட்டன. இதுவரைக்கும் எமக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு முழுமையாக மதிப்பீடு செய்யப்படவில்லை.

- இவ்வாறு வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வடபகுதிக்கு விஜயம் செய்த எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குச் ச்மர்ப்பித்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடல், உள ரீதியாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள எமது மக்களுக்கு அரச உதவிகள் இன்னமும் வந்துசேரவில்லை. எனவே, எதிர்க்கட்சித் தலைவரான தங்கள் வளங்களைப் பயன்படுத்தியும் எமது புனர்வாழ்வுக்கான திட்டங்களை முன்னெடுத்தும் உதவும்படி கேட்டுக்கொள்கின்றோம் - என அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-5)

## கடற்கொந்தளிப்பால் வீதிகளும் சேதமாகின

வடமராட்சிகிழக்கு,ஜன.7

கடற்கொந்தளிப்பினால் வடமராட்சி கிழக்கில் உள்ள கரையோர வீதிகள் பாவிக்க முடியாதவாறு அழிந்துபோயுள்ளன.

கடல் அலை அள்ளி வந்த மணல்களால் வீதிகள் மூடப்பட்டு இருந்த இடம் தெரியாமலேயே போயுள்ளன. வீதிகள் அமைந்திருந்த இடங்களில் கட்டட இடிபாடுகளும், முறிந்து வீழ்ந்த மரங்களுமே காணப்படுகின்றன.

(8-182)

# இசைமேதை எம். எஸ். நடித்த படங்களை வெளியிட வேண்டும்

## இசைவேளாளர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.7

உலக இசை அரங்கில் நட்சத்திரமாகத் திகழ்ந்து, அண்மையில் இறைவன் அடிசேர்ந்த பாரதரத்னம் எம்.எஸ்.சுப்புலட்சுமிக்கு இலங்கை இசைவேளாளர் சங்கத்தின் நாதஸ்வர, தவில் கலைஞர்கள் அனுதாபம் தெரிவித்துள்ளனர்.

ஈழத்துக் கலைஞர்களுடன் நீண்டகாலத் தொடர்புகளைக் கொண்டிருந்த எம்.எஸ். சுப்புலட்சுமியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து கடிதம் ஒன்றை சங்கம் அவரது குடும்பத்துக்கு அனுப்பியுள்ளது.

அதேவேளை -

எம்.எஸ்.சுப்புலட்சுமியின் உணர்ச்சியான நடிப்பையும், கானாமிர்தமான பாடல்களையும் தொலைக்காட்சி மற்றும் திரையரங்குகள் மூலம் காண்பிதது, இன்றைய இளம் கலைஞர்களுககு அவரது பெருமையைப் புரியவைக்கவும் கண்டுகளிக்கவும் உதவும்படி சம்பந்தப்பட்டவர்களைச் சங்கம் கோரியுள்ளது. (ப)

## சமுர்த்தி அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு

தென்மராட்சி,ஜன.7

தெனமராட்சி பிரதேச சமுர்த்தி அபிவிருததி அலுவலர்களுக்கு சமுகநலன் திட்டத்தின் கீழ் பயிற்சி வகுப்பு இன்று வெள்ளிக்கிழமை 9.00மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறுகின்றது.

இப்பயிற்சி வகுப்பில் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த அனைத்து சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களையும் கலந்துகொள்ளுமாறு பிரதேசசெயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (8-117)

## சிறுகடன்கள் பற்றிய விவரம் தென்மராட்சியில் திரட்டல்

தென்மராட்சி,ஜன.7

தென்மராட்சிப் பிரதேச கிராமிய மட்ட நிறுவனங்கள் ஊடாக கிராம மக்களுக்கு வழங்கப்பட்ட சிறு கடன்கள் பற்றிய விவரங்கள் பிரதேச செயலகத்தினால் திரட்டப்படுகின்றன.

சம்பந்தப்பட்ட கிராமிய நிறுவனங்கள் உடனடியாகப் பிரதேச செயலக கிராமிய அபிவிருத்தி அலுவலருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (8-117)

## அதிபரிடம் பணம் அபகரிப்பு

மோட்டார் சைக்கிளில் சென்ற பாடசாலை அதிபர் ஒருவரை வழிமறித்து சோதனையிட்ட இருவர் அவரிடமிருந்து பணத்தினை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் அணமையில் வேம்பிராய் மயானத்திற்கு அருகில் இடம்பெற்றது.

அதிபரின் மோட்டார் சைக்கிளை முந்திச் சென்று அவரை வழிமறித்த இருவர் அடையாள அட்டை, மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் ஆகியவற்றைப் பார்வையிட்ட பின்னர் அவரிடமிருந்த ஆயிரத்து 200 ரூபாவினை பறிதுக் கொண்டு சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது. மட்டுவில் வடக்கு அ.த.க.பாடசாலை அதிபருக்கே இந்த அனுபவம் ஏற்பட்டது. (8-117)


முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



சாவகச்சேரி, கல்வயலைச் சேர்ந்த
திருச்செல்வம் - இந்திராணி தம்பதிகளின
செல்வப்புதல்வி
செல்வி தி.கருஸ்ணவி

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (07.01.2005) வெள்ளிக்கிழமை கல்வயலில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். செல்வி கருஸ்ணவியை அன்புடன் டோகாவில் வசிக்கும் அப்பா, அம்மா, அன்புச் சகோதரர்களான பிரகலாதன், துவாரகன் ஆகியோரும் அம்மம்மா, யுகேந்திரன் மாமா குடும்பம் (முள்ளியவளை), ரவீந்திரன் மாமா குடும்பம் (நுணாவில்), மனோகரன் பெரியப்பா குடும்பம் (பிரான்ஸ்), தெய்வேந்திரராஜா சித்தப்பா குடும்பம் (கனடா), இந்திராதேவி சித்தி மற்றும் அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பாமார், சித்தப்பா (ஆசிரியர் மட்டக்களப்பு), மாமாமார், மாமிமார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் புலுட்டையன் பிள்ளையார் அருளோடு சீரோடும் சிறப்போடும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

கருஸ்ணவி
07.01.2004

அன்புடன்
திருச்செல்வம் (டோகா),
இந்திராணி (கல்வயல்).
(C/40237)(42-19-16)



FOR RENT OR LEASE

A house down 873, Hospital Road, close to Kachcheri with five rooms three bath rooms (two attached and one outside) and a garage is available for rent or lease. Please contact 021 222 6927 for particulars.

Presently' the house is being used as an office by a N.G.O.

(40515)(42-19-16)



6ஆம் மாத நினைவஞ்சலி

தோற்றம்
29 - 02 - 1949



மறைவு
07 - 07 - 2004

அமரர் ஆறுமுகம் சிவராஜா
(உரிமையாளர், மல்லிகா மிக்ஷர் மாளிகை)
திதி: 07-01-2005

உண்மை, அன்பு, பண்பு, ஒழுக்கம், நேர்மை எல்லா உயர்குணங்கட்கும் இலக்கணமானவரே! நீவீர் எப்பொழுதும் சிவன் பாதத்தில் இன்புற்று இருக்க இறைஞ்சுகிறோம் - உருகி எந்நாளும்.

நீங்காத நினைவில் நிலைத்திருக்கும்:
- குடும்பத்தினர்.

மானிப்பாய்.
(40516)(26-19-16-42)



மாபெரும் மலிவு விற்பனை

யாழ். நகரின் எந்தமூலை முடுக்கிலும் எமது விலைகளில் கிடைப்பதில்லை.

| | | |
|---|---|---|
| கலிட்டர் - 120/- | சண்பிளவர் கிட் - 355/- | எம்போஸ் பிறின்ட், பேர்ள் பிறின்ட், குளொஸ் பிறின்ட், |
| திரட் நூல - 175/- | டெய்சி கிட் - 245/- | பொயில் பேப்பர், லெமினேசன் குலூ, தூரிகைகள், |
| பப்ரிக் குலூ - 60/- | லிலக் கிட் - 145/- | கோல்ட் சில்வர் டஸ்ட், வோட்டர் கலர், அக்ரலிக் கலர், |
| களாஸ் பெயின்ட் - 265/- | ரெக்ஸ் மீடியம் - 55/- | ஒயில் கலர் வகைகள், கன்வஸ் இன்னும் பல.... |

கே.கே.எஸ். வீதி, இணுவில் (40475)(24-16-19-42)

இமேஜ் ஆட் சென்றம்



IIS
COMPUTER COURSES

New Batches Start on :
Batch 1 [ Week Day ] : 5. 01. 2005
Batch 2 [ Weekend ] : 8. 01. 2005
Batch 3 [ Weekend ] : 23. 01. 2005
at 10.00 A.M.

| | | |
|---|---|---|
| Diploma in MS Office | Diploma in Information Technology | Diploma in Internet Technology |
| Diploma in Computer Programming | Diploma in Eng. Drawing & AutoCAD | Diploma in Desk Top Publishing |
| Diploma in Hardware Technology | Certificate in Java Programming | Certificate in Visual C Programming |
| Certificate in Visual Basic Programming | Certificate in Oracle 9i | Certificate in C# Programming |

IIS ன் மேற்படி Diploma கற்கைநெறி ஒன்றினை பூர்த்தி செய்யும் நீங்கள் சர்வதேச TATA நிறுவனத்தின் சான்றிதழ் ஒன்றையும் பெற தகுதியுடையவர்களாகிறீர்கள்



கணனிக்கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்

IIS
INSTITUTE OF INFORMATICS STUDIES
"An *Edexcel* approved training Centre"
# 100, Clock Tower Road, Jaffna. TP No. : 021-222 2831/ 021-222 6933



புதிய பிரிவுகள் ஆரம்பம்
External Degree
2005, 2006 பிரிவுகளுக்கானது
(Jaffna University)
G.A.Q. | 1st in Com. | B.A. | B.Com.
Minimum Requirement - G.C.E.A/L 3 Passes
ஆரம்பம்: 08.01.2005

CIMA
Foundation level & Intermediate level
Medium: English Exam: May & November
Minimum Requirement - G.C.E.O/L (3C) Passes
ஆரம்பம்: 08.01.2005

aat (Srilanka)
Stage I, Stage II & StageIII
Medium: Tamil & English Exam: June & December
Minimum Requirement - G.C.E.O/L 5 Passes Or G.C.E.A/L 2 Passes
ஆரம்பம்: 08.01.2005 Medium : English & Tamil

முக்கிய குறிப்பு: வழமையான கற்றல் செயற்பாடுகள் அனைத்தும் 08.01.2005 வழமைபோல் இடம்பெறும்.

Further Details
Director
JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPT.
464, Hospital Road,
(Near Commercial Bank)
Jaffna.
(C/40263)(42-19-16)

# பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வைக் கட்டியெழுப்ப சர்வதேச சமூகம்தான் உதவிபுரியவேண்டும்

## கடற்புலிகளின் சிறப்புத்தளபதி சூசை தெரிவிப்பு

வடமராட்சி கிழக்கு,ஜன.7

"நீண்டகாலப் போரில் சிக்கித் தமது பொருளாதாரத்தை இழந்திருந்த எமது மக்களின் வாழ்க்கையினை 'சுனாமி' கடற்கொந்தளிப்பு முழுமையாக அழித்துவிட்டது. எங்கள் மக்களின் வாழ்வைக் கட்டியெழுப்ப சர்வதேசம் தான் உதவவேண்டும். இல்லையேல் நிலைமை மிக மோசமடையும்".

கடந்த 4ஆம் திகதி வடமராட்சி கிழக்கு, மருதங்கேணியில் கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கை மீளக்கட்டியெழுப்புவது தொடர்பாக இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'சுனாமி' கடற்கொந்தளிப்பு முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்குக் கரையோரக் கிராமங்களை முழுமையாக அழித்துவிட்டது. இதில் பல ஆயிரம் பேர் உயிரிழந்திருக்கின்றார்கள். இந்தப் பகுதியைச் சேர்ந்த ஒவ்வொருவரும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதனை எவராலும் ஈடுசெய்யமுடியாது. மக்களின் துன்பத்தையும், வேதனையையும் யாரும் தீர்த்துவிட முடியாது.

இன்றுவரை அரசு எமது பகுதிகளுக்கு எதனையும் செய்யவில்லை. ஆனால், பெருஞ்சேதத்திற்கு உள்ளான முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்குப் பகுதிகளுக்கு நாங்கள் எமது வளங்களைப் பயன்படுத்தி எமது மனதுக்கு திருப்திதரக் கூடியவகையில் மீட்புப் பணியினை நிறைவு செய்து இருக்கின்றோம்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட பகுதிகளைக் கட்டியெழுப்புவதற்குச் சர்வதேச சமூகம் பாரிய உதவிகளை வழங்க முன்வரவேண்டும். அதன் மூலம்தான் எமது மக்களுக்கு நல்ல ஒரு வாழ்க்கையைப் பெற்றுக்கொடுக்கமுடியும் - என்றார்.

வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களை, வடமராட்சி கிழக்கின் மேட்டு நிலப்பிரதேசங்களிலும், பாடசாலைகளிலும், பாதுகாப்பான இடங்களிலுள்ள வீடுகளிலும் தற்காலிகமாகக் குடியமர்த்துவது பற்றியும் இதில் ஆராயப்பட்டது.

இக்கூட்டத்தில் கடற்புலித் தளபதிகளான மங்களேஸ், காதர், கிளிநொச்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவாணன், மாவீரர் போராளி குடும்பநலன் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன், ஊரக வளர்ச்சிப் பணிப்பொறுப்பாளர் கந்தம்மான், கிராம சேவை அலுவலர்கள், மருதங்கேணி உதவி அரச அதிபர், பளைப் பிரதேச செயலர் ஆகியோர் கலந்துகொண்டனர். (8-182)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்,ஜன.7

காரைநகர் மணிவாசகர் சபையின் ஏற்பாட்டில் திருவாசக முற்றோதல் நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஈழத்துச் சிதம்பர வசந்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (8-202)

# தெற்கிலிருந்து வந்த பொருள்களை இராணுவம் கையேற்று பகிர்ந்தளித்தது

யாழ்ப்பாணம்,ஜன.7

'சுனாமி' பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தெற்கிலிருந்து அனுப்பப்பட்ட நிவாரணப் பொருள்களை இராணுவத்தினர் கையேற்றுப் பகிர்ந்தளித்துள்ளதாக யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்துள்ள மக்களுக்குக் கொடுப்பதற்கென 'ஸ்பாக்லின் ட்ரெவல்ஸ்' தனியார் நிறுவனம் இராணுவத்திடம் வழங்கிய உணவுப் பொருள்களும், பிரதமரின் ஆலோசனைக்கமைய விமானம் மற்றும் கப்பல் தொடர்பான அமைச்சின் பிரதி அமைச்சர் டிலான் பெரேராவினால் பெற்றுக்கொடுக்கப்பட்ட 50 கூடாரங்களும் 55ஆவது சேனையகத்தின்கீழ் இயங்கும் 551 ஆவது படையணிக்குட்பட்ட குடத்தனை மடுமாதா தேவாலயத்தில் தங்கியுள்ள மக்களிடம் கையளிக்கப்பட்டன.

இந்த நிவாரணப் பொருள்களைக் கையளிக்கும் நிகழ்வு கடந்த 4ஆம் திகதி இடம்பெற்றது. 55 ஆவது பிரிகேடியர் வீ.ஆர்.சில்வாவினால் ஜே/421 கிராம உத்தியோகத்தர் தோமஸ் ஜீட்டிடம் இந்த நிவாரணப் பொருள்கள் கையளிக்கப்பட்டன - என்றுள்ளது.(8-202)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜன.7

யாழ். மறைமாவட்ட பொது நிலையினர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் விவிலிய டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு காலவரையறையின்றிப் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். மறைமாவட்டப் பொதுநிலையினர் சபை அறிவித்துள்ளது. (8-202)

## வலிகாமம் தெற்கில் 150 வீடுகள்

வலி.தெற்கு,ஜன.7

உலக வங்கித் திட்டத்தின்கீழ் வலிகாமம் தெற்குப் பிரதேசத்தில் வறுமைக்கோட்டின் கீழ்வாழும் 150 குடும்பங்களுக்கு 150 வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவுள்ளன.

இப்பிரதேசத்திலுள்ள சகல கிராம சேவையாளர் பிரிவுகளிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு இவ்வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் எனப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.(8-152)

## வெளிவாரிப்பட்ட பதிவுகள் அலகின் பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,ஜன.7

யாழ். பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் அலகின் பொதுக் கலைமாணித் தேர்வுப் பகுதி - II செய்முறைப் பரீட்சை எதிர்வரும் 24 ஆம் திகதி தொடக்கம் கலைப்பீட நுண்கலைத்துறையில் நடைபெறும் என்று யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் சு.மோகனதாஸ் அறிவித்துள்ளார்.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளை வெளிவாரிப் பட்டப்படிப்புப் பிரிவில் தொடர்புகொண்டு அறிந்துகொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார். (8-202)

# பாதிக்கப்பட்ட மக்கள் துயர்துடைப்பு நிதிக்கு சம்பள உயர்வை வழங்க அதிபர்கள் முடிவு

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர்துடைப்பு நிதிக்காக வலிகாமம் கல்வி வலயத்தின் உடுவில், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய நான்கு கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள் தங்களுக்கு டிசெம்பர் மாதம் முதல் கிடைக்கவுள்ள சம்பள உயர்வுப் பணத்தினை முழுமையாக வழங்குவது எனத் தீர்மானித்துள்ளனர்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் தலைமையில் கூடிய மேற்படி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள் துயர்துடைப்பு நிதிக்கு மேற்படி பணத்தினை வழங்குவது என ஏகமனதாகத் தீர்மானித்துள்ளனர்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கச் சிரேஷ்ட பொதுச் செயலாளர் எஸ்.பஞ்சலிங்கம், தமிழீழக் கல்விக் கழகத்தின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் ஆர்வலன், வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் உட்பட உடுவில், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானைக் கல்விக் கோட்டப் பணிப்பாளர்கள் ஆகியோரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

துயர்துடைப்பு நிதி சேகரிப்புத் தொடர்பாக மேற்படி நான்கு கோட்டங்களையும் சேர்ந்த பாடசாலை ஆசிரியர்களின் முடிவினை எடுப்பதற்கான கலந்துரையாடல்கள் தனித்தனியாக ஒவ்வொரு கோட்டத்திலும் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளன.

'சுனாமி' இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர்துடைப்பு நிதிக்கு கோப்பாய் மற்றும் சாவகச்சேரிக் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களும் தமக்கு வழங்கப்படவுள்ள மேலதிக சம்பள உயர்வுத் தொகையினை முழுமையாக வழங்க ஏற்கனவே தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-152)

# பேரனர்த்தத்தின் பின் முல்லைத்தீவுப் பதிவுகள்....



'சுனாமி' அலையின் தாக்கத்தால் சுண்டிக்குளம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் கிளிநொச்சி தருமபுரம் மகா வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கான உணவைத் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வழங்குகின்றது.



முல்லைத்தீவில் அனர்த்தத்தினால் இடிந்துபோயுள்ள கட்டடங்களில் ஒன்று.



பாதிக்கப்பட்ட சிறுவர்களை உள ஆற்றுப்படுத்தலில் ஈடுபட்டிருக்கும் முல்லைத்தீவு அரங்கச் செயற்பாட்டுக் குழுவினர்.



பாதிக்கப்பட்ட இடங்களில் கட்டட இடிபாடுகளை அகற்றும் பணியில் 'ஹலோட்ரஸ்ட்' நிறுவனத்தின் கனரக வாகனம்.

படங்கள்: பரந்தன் செய்தியாளர்.

# பருத்தித்துறை நகர, கிராம அலுவலரின் இடமாற்றத்தை எதிர்த்து மறியற்போர்!



பருத்தித்துறை நகர, கிராம அலுவலரின் இடமாற்றத்தை ரத்துச் செய்யக் கோரி நேற்று பருத்தித்துறை பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு மறியல் செய்த பொதுமக்களைப் படங்களில் காணலாம். (படங்கள்: வடமராட்சிச் செய்தியாளர்).

வடமராட்சி,ஜன.7

பருத்தித்துறை நகர, கிராம சேவையாளர் த.நந்தகுமாரின் இடமாற்றத்தை உடன் நிறுத்தக் கோரி, 'சுனாமி' கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட நகர மக்களான நூற்றுக்கணக்கான ஆண்கள், பெண்கள் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தைத் திறக்கவிடாமல் நேற்று அதற்கு முன்பாக சுலோக அட்டைகள் சகிதம் மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்த கிராம சேவகரே திடீரென இடமாற்றப்பட்டிருக்கின்றார்.

புதியவர் ஒருவர் நியமிக்கப்படுவதால் நகர மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டி வரும் என மறியற் போராட்டத்தில் ஈடுபட்டோர் அதிகாரிகளிடம் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து பருத்தித்துறை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.விக்னேஸ்வரமூர்த்தி அரச அதிபருடன் தொடர்புகொண்டு பேசியதையடுத்து குறித்த கிராம சேவையாளரின் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டு, அச்செய்தி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டோருக்கு அறிவிக்கப்பட்டது.

அதிகாரிகளின் இந்தத் தீர்மானம் தமக்குத் திருப்தி அளிக்காததால் அதனை எழுத்து மூலம் அறியத்தருமாறு மறியற்போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் அடம்பிடித்தனர். அதுவரை செயலகத்தைத் திறக்கவிடமாட்டோம் எனக் கூறினார்கள்.

பின்னர் மறியற்போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களின் அனுமதியுடன் நிர்வாக உத்தியோகத்தர் உள்ளே சென்று இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதை எழுத்து மூலம் வழங்கினார். எழுத்துமூலக் கடிதத்தைப் பெற்றுக்கொண்ட மறியற் போராட்டக்காரர்கள் கலைந்துசென்றனர். பேராட்டத்தால் சிலமணி நேரம் தடைப்பட்ட பிரதேச செயலகப் பணிகள் வழமைக்குத் திரும்பின. (ஐ-173)

# இடைநிறுத்தப்பட்ட பரீட்சைகள் 17ஆம் திகதியன்று

யாழ்ப்பாணம்,ஜன.7

யாழ்.பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தில் இடைநிறுத்தப்பட்டிருந்த அனைத்துப் பரீட்சைகளும் எதிர்வரும் 17ஆம் திகதி முதல் ஆரம்பமாகின்றன என்று விவசாய பீடாதிபதி எஸ்.இராசதுரை அறிவித்துள்ளார்.

இதேவேளை-

விவசாய பீடத்தின் முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் வருட மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டு விரிவுரைகள் பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி ஆரம்பமாகின்றன. அன்றைய தினம் காலை 9 மணிக்கு புதிய மாணவர்களுக்கான அறிமுக வைபவமும் நடைபெறும்.

புதிய அனுமதி பெறும் மணவர்களின் பெயர்ப்பட்டியலை விவசாயபீட விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் என்றும் விவசாய பீடாதிபதி அறிவித்துள்ளார்.

(8-202)

# வர்த்தக சங்கங்களிற்கான அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்.ஜன.7

யாழ்.மாவட்டத்திலுள்ள வர்த்தக சங்கங்களின் பிரதிநிதிகளுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு யாழ்.வணிகர் கழகத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்திலுள்ள சகல வர்த்தக சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள்.பொருளாளர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு வணிகர் கழகத் தலைவர் கேட்டுள்ளார்.

(8-

# திருடப்பட்ட 7 சைக்கிள்கள் யாழ். பொலீஸாரால் மீட்பு

யாழ்ப்பாணம்,ஜன.7

யாழ். பொலீஸ் நிலையப் பொலீஸார் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையின்போது யாழ். நகரில் திருடப்பட்ட ஏழு சைக்கிள்கள் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டன.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள சைக்கிள் தரிப்பிடம் ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 7 சைக்கிளகளும் திருடப்பட்டன என்று சம்பந்தப்பட்டவர்களால் யாழ். பொலீஸ் நிலையத்தின் குற்றத் தடுப்புப் பிரிவில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதனையடுத்து, யாழ். பொலீஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி விதானகே தலைமையிலான பொலீஸார் மேற்கொண்ட நடவடிக்கையில் ஏழு சைக்கிளகளும் நெல்லியடி மற்றும் நகரப் பகுதியில் வைத்து மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்துடன், தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் ஒருவரும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருடப்பட்ட ஏழு சைக்கிள்களில் மூன்று சைக்கிள்களை உரியவர்கள் அடையாளம் காட்டிப் பெற்றுக்கொண்டனர் என்றும் -

ஏனையவற்றை உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி யாழ். பொலீஸ் நிலையத்தில் பெறுக் கொள்ளமுடியும் என்றும் - பொறுப்பதிகாரி தெரிவித்தார். (8-7)

# கனடா நாடாளுமன்றப் பிரதிநிதி 12ஆம் திகதி யாழ்.வருகிறார்

யாழ்ப்பாணம்,ஜன.7

சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடுவதற்காகக் கனடா நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜிம் ஆரியானேஸ் எதிர்வரும் 12ஆம் திகதி யாழ்.வருகை தரவுள்ளார்.

கனடாவில் வாழுகின்ற புலம் பெயர் தமிழர்களின் வேண்டுகோளுக்கமைவாக இங்கு வருகை தரும் அவர் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் சுனாமியால் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் சென்று பார்வையிடுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கும் இவா விஜயம் செய்வார்.

இங்குள்ள நிலைமைகளை நேரில் பார்வையிட்டதன் பின்னர் அது தொடர்பாக அறிக்கை ஒன்றை அவர் கனடா அரசுக்குச் சமர்ப்பிப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(8-13)

# வலி.வடக்கு பிரதேச செயலக விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜன.7

வலி.வடக்கு பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான 2005ஆம் ஆண்டிற்கான போட்டிகள் நாளை சனிக்கிழமை மல்லாகம் சிறி. பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகின்றன.

போட்டிகள் இடம்பெறும் திகதிகள் வருமாறு:-

- எல்லே - ஆண்கள்: நாளையும் நாளை மறுதினமும் காலை 8.30 மணிமுதல்
- எல்லே - பெண்கள்: 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிமுதல்
- துடுப்பாட்டம் - ஆண்கள்: 15ஆம் 16ஆம் திகதி சனி, ஞாயிறு காலை 8.30 மணிமுதல்
- துடுப்பாட்டம் - பெண்கள்: 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிமுதல்
- வலைப்பந்து: 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிமுதல்
- கரபந்தாட்டம் - ஆண்கள்: 22ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல்
- கரபந்தாட்டம் - பெண்கள்: 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல்
- கபடி - ஆண்கள்: 24ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிமுதல்
- கபடி - பெண்கள்: 24ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3.30 மணிமுதல்
- உதைபந்தாட்டம்: 10ஆம் திகதிமுதல் 18ஆம் திகதி வரை மாலை 4 மணிக்கு.

(3-190-49)

# சித்த மருத்துவப் பிரிவின் செயற்பாடுகள் 10ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.7

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகின் கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மீள ஆரம்பமாகும் என்று யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் சு.மோகனதாஸ் அறிவித்துள்ளார்.

(8-202)

# ஒப்பற்ற தலைமை...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

லாயிரக்கணக்கான மக்களை கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நெறிப்படுத்திய இவரது சேவையை எழுதி முடிக்க இயலாது. மனவுறுதி, வாக்கினில் இனிமை, நினைவு முழுவதும் நன்நெறி என்று தனது வாழ்வைப் புனிதப் பணிக்கு அர்ப்பணித்தார்.

எத்தனை எத்தனை ஆலயங்களின் வாயிலில் அன்னையின் தெய்வீகப் பிரசங்கம் கேட்டவர்கள் நல்வழிப்பட்டனர். வேள்வியும், களியாட்டமும், சின்னமேளமும் நடைபெற்ற கோவில்கள் சிவத்தமிழ்ச்செல்வியின் உரையினால் சீர்பெற்றன. ஐம்பது ஆண்டுகளுக்கு முன் பெண்கள் மேடையில் தோன்றி உரையாற்றுவது என்பது சாதாரண விடயமல்ல. எவருக்கும் அஞ்சாத மனத்தைரியம் அம்மாவிடம் நிறையவே இருந்தது. அவரது துணிவும் நிதானமும் அவரது வார்த்தையும் மக்களைக் கட்டுப்படுத்தியது.

அம்மாவின் ஆளுமைச் சிறப்பை அவரிடம் காணப்படும் ஒப்பற்ற தலைமைத்துவப்பண்பை எத்தனை அறிஞர்கள் இன்று தமது நூல்களில் உதாரணம் காட்டுகின்றார்கள். இலக்கிய இலக்கணம், புராண இதிகாசங்கள், திருமுறைச்செல்வங்கள் அத்தனையும் மிக ஆழமாகக்கற்று அவற்றின் உட்பொருளை விளக்கும் உயர்திறன் அம்மாவிடம் உண்டு. உயர்வரியமெய்ஞானம் உணர்ந்த நிலையில் உலகியல் பாராட்டுகளுக்கு அப்பால் வாழும் பேறு பெற்றவராக அம்மா விளங்குகின்றார். அகவை என்பது நிறைவுறும் நாளை பெருமளவில் விழா எடுத்துக்கொண்டாட வேண்டும் என்று அன்பர்கள் பலரும் ஆவலுற்ற போதிலும் அம்மா ஆடம்பரம் எதுவும் வேண்டாம் என்று அன்புக் கட்டளையிட்டார். "அறக்கொடை விழாவே பிறந்த நாள் விழா" அதன் அர்த்தம் பேணுங்கள் எனச சுருங்கக் கூறி எம்மை ஆற்றுப்படுத்தினார். தர்ம காரியங்களைச் செய்து இத்தரணியை நெறிப்படுத்தும் தயாவாணியின் பண்பை தாள் பணிந்து வணங்குகிறோம். உலகம் முழுவதிலும் ஜனவரி 7ஆம் திகதி அன்னையின் முத்து விழாக் குறித்து சிறப்பு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. "அன்னையின் முத்து விழா" சிறக்க வாழ்ததுவதோடு அன்னை பல்லாண்டு பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல துர்க்கை அம்பாளைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.

- ஆறு.திருமுருகன்.

# இந்து மாமன்றத்தின் பங்களிப்புடன் பால்நிலை அபிவிருத்தி அமைப்பு நிவாரணப்பணி



நிறைமாத கர்ப்பவதிக்குக் பொருள்கள் வழங்கப்படும் காட்சி

யாழ்ப்பாணம்,ஜன.7

இலங்கையின் இந்துமத அமைப்புக்களினதும் ஆலய நம்பிக்கைப் பொறுப்புக்களினதும் கூட்டமைப்பான அகில இலங்கை இந்து மாமன்றம் சுனாமி கடல் கொந்தளிப்பு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட யாழ். மக்களுக்கான அவசர மனிதாபிமானப் பணியினை மூளாய சிறுவர் கல்விக்கும் பால் நிலை அபிவிருத்திக்குமான நிறுவனத்தின் பங்காளித்துவத்துடன் செய்துவருகின்றது.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் பெண்கள் பாடசாலை, உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் ஆண்கள் பாடசாலை, கம்பர்மலை வித்தியாசாலை ஆகியவற்றில் தஞ்சம் புகுந்து நிர்க்கதியாயிருக்கும் மக்களுக்கு நிவாரண விநியோகப்பணிகளை மேற்கொண்டு வருகின்றது. தொடர்ந்தும் அப்பணியினை மேற்கொள்ளவுள்ளது. இதுவரை காலமும் தீப்பெட்டி, படுக்கை விரிப்பு, பாய், நுளம்புத்திரி, மெழுகுதிரி, குழந்தைகளுக்கான பொருள்கள் ஆகியவற்றை வழங்கியுள்ளது.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் பெண்கள் பாடசாலையில் 29 குடும்பங்களுக்கும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் ஆண்கள் பாடசாலையில் 172 குடும்பங்களுக்கும், கம்பர்மலை வித்தியாசாலையில் 95 குடும்பங்களுக்கும் இப்பொருள்கள் வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு பிர சவத்தை எதிர்கொள்ளவுள்ள நிறைமாதக் கர்ப்பிணிக்கு தலையணை, குழந்தைக்கான ஆடை, தொப்பி, காலுறை, துவாய், சவர்க் காரம், கிரேப் வோட்டர், கிரேப் மிக்சர், நுளம்பு வலை ஆகியன வழங்கப்பட்டுள்ளன.

அத்தோடு, உடுப்பிட்டி அமெரிக்கன்மிசன் பெண்கள் பாடசாலையிலும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் ஆண்கள் பாடசாலையிலும் 1 வயதிற்குட்பட்ட குழந்தைகளைக் கொண்ட 17 குடும்பங்களுக்கும் 89 குடும்பங்களுக்கும் கிரேப் வோட்டர், கிரேப் மிக்சர், நுளம்புத்திரி, மெழுகுதிரி, தீப்பெட்டி ஆகியன வழங்கப்பட்டுள்ளன. அகில இலங்கை இந்து மாமன்றத்தினரால் வழங்கப்பட்ட மந்திகை ஆதார வைத்தியசாலைக்குரிய 12 மருந்து, மருத்துவ உபகரணம் அடங்கிய பொதிகள் மாவட்ட மருத்துவ அதிகாரியிடம் கையளிக்கப்பட்டன. மேற்படி செயற்பாடுகளை (INS-GD) தொண்டர்கள் மிகவும் உன்னிப்பாக இரவு பகலாக செய்து வருகின்றார்கள். இப்பணிகள் மேலும் தொடரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

# திறந்த வெளி அகதி முகாமாக அம்பாறை கரையோரப் பிரதேசம்

- சுனாமியில் 13,128 பேர் பலி
- காணாமற் போனோர் 2,643 பேர்
- 92 அகதிமுகாம்களில் 84,921
- உறவினர், நண்பர் வீடுகளில் 65,636 குடும்பங்கள்
- பாதிக்கப்பட்ட வீடுகள் 24,909

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசம் இன்று திறந்த வெளி அகதி முகாமாகக் காட்சியளிக்கிறது. சுனாமி சூறையாடிய மக்கள் தொகை 13,128 ஆகும். இவர்களில் குழந்தைகள், பெண்கள், வயோதிபர்கள் அதிகம்.

கூடுதலாகக் கல்முனை முஸ்லிம் பிரிவில் 3,500 பேர் பலியாகியுள்ளனர். குறிப்பாக மருதமுனைக் கிராமத்தின் கடலோரப் பகுதிகள் முற்றாக நிர்மூலமாக்கப்பட்டுள்ளன. சாய்ந்தமருது பிரிவில் 2,800 பேர் சுனாமியால் காவுகொள்ளப்பட்டிருக்கின்றனர். அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான இயந்திரப் படகுகள் அடித்து நொறுக்கப்பட்டு ஊர்மனைக்குள் வீசப்பட்டு காணப்பட்டன.

தனியொரு கிராமம் மிகக்கூடுதல் பாதிப்புக்குட்பட்டதென்றால் அது சாய்ந்தமருது என்று சுட்டிக்காட்டலாம். இவர்களது 90% சடலங்கள் சம்மாந்துறை மலையடிக் கிராம மையவாடியில அடக்கஞ்செய்யப்பட்டன.

காரைதீவுப் பிரதேசம் 2,200 பேரை இழந்துள்ளது. கூடவே 03 பாடசாலைகள், 05 ஆலயங்கள், ஒரு வைத்தியசாலை மற்றும் 3000 வடுகளையும் இழந்துள்ளது. 05 அகதி முகாம்கள் இயங்கி வருகின்றன.

கல்முனை (தமிழ்) பிரிவில் பெரியநீலாவணை, கல்முனை, பாண்டிருப்பு கிராமங்களில் 2,000 பேர் இறந்திருக்கலாமென புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. பாண்டிருப்பில் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் 42 பேருடன் 5 ஆசிரியர்களும் கடலில் அடித்துச் செல்லப்பட்டமை குறிபபிடத்தக்கது.

அடுத்து திருக்கோவில், பொத்துவில், ஆலையடி வேம்பு, நிந்தவூர் பிரதேசங்கள் கூடுதலான அழிவுகளை சந்தித்தன.

### தற்போது

தற்போது கரையோரப் பிரதேசங்கள் பூராக அகதி முகாம்கள் 107 இயங்கி வருகின்றன. இவற்றில் 90 முகாம்கள் பாடசாலைகளாக உள்ளன. பாடசாலைகளை 10 ஆம் திகதி ஆரம்பிக்க வேண்டுமென்று கூறப்படுகின்றன. இவ்வேளையில் முடியுமானவரை பாடசாலைகளிலுள்ள அகதிமுகாம்களை நீக்கிப் பொது இடங்களில் கூடாரமிட்டுத் தங்க வைக்கவேண்டும் என்ற அவசியம் உணரப்பட்டுள்ளது.

அகதிமுகாம்களைப் பொறுத்தவரை கிராம சேவகர்கள், பொதுநபர்கள் என்று நிர்வகித்து வருகின்றனர். அரச நிவாரணப் பொருள்கள் விநியோகத்தில் ஆரம்பத்தில் பாரபட்சம் இடம் பெற்றதாக மக்கள் சீற்றமடைந்தனர். அவற்றுக்கும் மத்தியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்கள் சீலர், கேசவன் ஆகியோரின் வழிகாட்டலில் சீராகச் செயற்பட்டு மக்கள் பட்டினிச் சாவிலிருந்து மீட்டனர் என்று கூறலாம்.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் 5 நாள்களில் ஒரு கோடியே 50 லட்சம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருள்களை மக்களுக்கு வழங்கியதாக மன்னார் மாவட்ட பணிப்பாளரும் அம்பாறை மாவட்டத்திற்கென விஷேடமாக அவசர நிவாரணப் பணிக்கு நியமிக்கப்பட்டவருமான கேசவன் தெரிவித்தார்.

அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் அம்பாறை மாவட்டத்திற்கு வந்தால் இங்குள்ள முஸ்லிம் அரசியல்வாதிகள் அவர்களது பிரதேசங்களுக்குக் கூட்டிக்கொண்டு சென்று காட்டுவதில் அதிக ஈடுபாடுகாட்டினர்.

ஒரேயொரு தமிழ் எம்.பி. க.பத்மநாதன் கூட சுனாமியால் பாதிக்கப்பட்டதன் காரணமாக அவரால் நிவாரணப்பணியில் பூரணமாக ஈடுபட முடியாமல் போயிற்று. ஆனால், ஆரம்பத்தில் அம்பாறை மாவட்டத்திற்கு 22 பேரும் குரல் கொடுப்போம், உதவுவோம் என்றவர்கள் வாய்மூடி மௌனியாகவிருந்ததை மக்கள் விசனத்துடன் பார்த்தனர்.

ஊடகங்களில் ஒருவாரம் வரை காரைதீவு காட்சிப்படுத்தப்படவில்லையென்பதும் குறை.

இவ்வேளையில் தமிழீழ சுகாதாரசேவைப் பிரிவினர், பொறுப்பாளர் ரி.வாமன் தலைமையில் களமிறங்கினர். அவர்களது கண்காணிப்பிலேயே வைத்திய சுகாதார வசதிகள் சீர்பெற ஆரம்பித்தன.

சுமார் 50 பேர் கொண்ட குழுவில் டாக்டர்கள், யாழ். வைத்தியசாலை மருத்துவப் பீட மாணவர்கள் அடங்கியிருந்தனர். பரவலாக முகாம்களில் பணியாற்றிவருகின்றனர்.

காரைதீவில் பிறந்து கண்டியில் கடமையாற்றும் வைத்திய அதிகாரி டாக்டர். சினேந்திரன் பாஸ்கரநாதன் கண்டியிலிருந்து சிங்கள டாக்டர்களுடன் வந்திறங்கி உயிர்காப்புப் பணியை ஆரம்பத்தில் மேற்கொண்டிருந்தார். அதற்கான மருந்துப் பொருள்களையும் கொண்டு வந்தார். காரைதீவு விபுலானந்த மணிமண்டபத்தில் அவர்களது வைத்தியசேவை சிறப்பாக நடைபெற்றது.

காலம் கருதிய சேவை செய்தவர்களை மக்கள் நன்றியோடு பார்க்கின்றனர். லட்சக் கணக்கான ரூபா பெறுமதியான மருந்துப்பொருள்கள் எமது நிருபர் சகாவின் கட்டுப்பாட்டில் வைககப்பட்டு பரிமாற்றப்பட்டன.

வரையிலான முகாம்களுக்கு விஜயம் செய்து மருத்துவ உதவிசெய்தார்.

வைத்திய அதிகாரி டாக்டர்.எஸ்றஜிமுதீன் புதனன்று திருக்கோவில் பகுதிக்கு விஜயம் செய்து சுகாதார நடவடிக்கைகளைப் பார்வையிட்டுள்ளார்.

இந்நிலையில் கிளிநொச்சி, முல்லைத்தீவுப பகுதியிலிருந்து தமிழீழ கல்வித்துறையின் 50 ஆசிரியர்கள் வந்து அவசர பணிகளில் ஈடுபட்டனர். வன்னிப்பொறுப்பாளர் ஞானம் தலைமையிலான குழுவினர் முகாம் சுத்தம், சடலங்களை அடக்குதல், நீர்ச் சுததமாக்கல் போன்ற பல விடயங்களில் ஈடுபட்டிருந்தனர்.



காரைதீவில் சிதையுண்ட பாடசாலை... இறந்தோரின் சடலங்கள்...

தமிழ் மக்கள் அகதிமுகாம்களிலும் ஏனைய இடங்களிலும் அலைந்து நிர்க்கதியாக இருந்தனரென்றே கூறலாம். கவனிப்பாரற்ற நிலையில் பயபீதியுடன் காலத்தைக் கடத்தினர். திருக்கோயில், கோமாரி, விநாயகபுரம், தம்பட்டை போன்ற பிரதேச அகதிகள் சாகாமம், அக்கரைப பற்று பகுதிகளில் தஞ்சமடைந்தனர்.

காரைதீவின் கடற்பரப்புகளுக்கு அருகில் இருந்த நூற்றுக்கணக்கான மீனவர் குடும்பங்கள் பலத்த அழிவைச் சந்தித்திருக்கின்றன. சில குடும்பங்களில் கடலுக்குச்சென்ற மீனவர் மட்டும் தப்பிய சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

அநேகமான குடும்பங்கள் குறைந்தது இருவரையாவது இழந்திருக்கின்றன. ஆனால் அனைவரும் வீடு, வாகனங்கள், உடைமைகள் அனைத்தையும் இழந்திருக்கின்றனர்.

தற்போது நிவாரண லொறிகளின் வரிசைகள் குறைந்து வருகின்றன. எனவே அடுத்த கட்டம் என்ன? என்று சிந்திப்பது பொருத்தம். அரசு பாதிக்கப்பட்ட அனைவருக்கும் 06 மாதும் உலருணவு வழங்குமென உலக உணவு ஸ்தாபனத்தின் நம்பிக்கையில் கூறியுள்ளது.அடுத்த கட்டம் என்ன? என்று கேட்பதற்குக் கூட சமகால சம்பவங்கள் வழி வைப்பதாயில்லை. இன்று கூட திருக்கோவில் பிரதேசம் துண்டிக்கப்பட்டுள்ளது. வடக்கே முகத்துவாரமும் தெற்கே கோமாரிப்பாலமும் சுனாமியாலும், வெள்ளத்தாலும் தகர்க்கப்பட்டுள்ளதால் அப்பிரதேசம் பிரதான பாதையால் செல்ல முடியாதவாறு துண்டிக்கப்பட்டுள்ளது.

ஆக அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, சாகாமம் ஊடாக மாத்திரமே நிவாரணப பொருள்களை பலத்த சிரமத்தின் மத்தியில் கொண்டு செல்ல முடியும்.

திருக்கோயிலுக்கு இன்றுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. அங்கு 13முகாங்களில் 27 ஆயிரம் மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

அங்குள்ள முன்னாள் எம்.பி.அ.சந்திரநேரு, க.பத்மநாதன் எம்.பி. ஆகியோரின் முயற்சியில் நிவாரணப்பொருள்கள் வந்து சேர்ந்ததாயினும் அவை சகல முகாங்களுக்கும் பூரணமாக விநியோகிக்கப் போதுமானதாக இருக்கவில்லை.

## அனைத்தையும் இழந்தவர்களின் அடுத்த கட்டம் என்ன...?

சில பிள்ளைகள் தற்போதும் கடல்வருகிறது ஓடுங்கள் என்று கூறிப் பிதற்றித்திரிவதைக காணலாம். உளவளத் துணையாளர்களின் சேவை தேவைப்படுகிறது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம், தமிழீழ கல்விப் பேரவை, தமிழீழ சுகாதாரப்பிரிவு என்பன முற்றாகக் களத்தில் இறங்கியுள்ளன. இடிபாடுகளுக்கு மத்தியிலிருந்த பல சடலங்களை அவர்கள் மீட்டதுடன் நிவாரணப்பணியையும் செய்தனர்.

காரைதீவின் தென்பகுதியில் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக பரம்பரையாக வாழ்ந்து வந்த யாழ்ப்பாணம் கோப்பாயைச் சேர்ந்த சண்முகரெத்தினம் குருக்களின் குடும்பத்தில் ஏழு பேர் கடலோடு சங்கமமாகியுள்ளனர். எஞ்சிய பிரகதீஸ்வரசர்மா கூறிய பல தகவல்கள் திகிலடைய வைக்கின்றன.

### ஊடகங்கள் புறக்கணிப்பு

ஊடகங்கள் ஆரம்பத்தில் காரைதீவை வெளியுலகிற்குக் காட்டவில்லையென மக்கள் விசனமடைந்தனர் இலத்திரனியல் (தொலைக்காட்சி)

சுனாமியால் அள்ளுண்ட பலர் மரத்திலும் இடிபாடுகளிலும் அடிபட்டு பலத்த காயத்துக்குள்ளாகினர். மதில் வீழ்ந்து காயமுற்றார்கள். கல்முனை வலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி கலைவாணி தம்பிராஜாவும் தலையில் மதில் வீழ்ந்து பாரிய சுகயீனமுற்றிருக்கிறார். காரைதீவு வைத்தியசாலை, சாய்ந்தமருது, நிந்தவூர் வைத்தியசாலைகள் பாதிக்கப்பட்டன.

காரைதீவு வைத்தியசாலை தற்காலிகமாக காரைதீவு கமநல கேந்திர நிலையத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது. அங்கு பணியாற்றிய டாக்டர் பகீரதி தமிழ்வண்ணன் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளார். ஆரம்பத்தில் சுகாதார அதிகாரிகள் அதனை ஏறெடுத்துப் பார்க்கவில்லை. சில நாள்களின் பின்பு வைத்திய அத்தியட்சகர் டாக்டர் கே.முருகானந்தம மேற்கொண்ட முயற்சியால் மருந்து பொருள்கள் வழங்கப்பட்டன.

வைத்திய அத்தியட்சகர் டாக்டர் கே.முருகானந்தம் பெரியநீலாவணை முதல் அட்டப்பளம்

அம்பாறையிலிருந்து...
வி.ரி.எஸ்.ராஜா

வருகின்ற அமைச்சர்கள் முஸ்லிம் தேசங்களுக்கு மட்டுமே சென்றுவிட்டுப் போகிறார்கள். இங்குள்ளவர்களும் அவர்களை இப்படியான பிரதேசங்களுக்கு கூட்டிவருகிறார்களில்லை எனத் திருக்கோவில் வாசி உதயகுமார் கூறினார்.

அங்கும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் காலடி எடுத்து வைத்தபிற்பாடு ஓரளவு கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளதாகத் தம்பிலுவில் மத்தியகல்லூரி அதிபர் வி.ஜெயந்தன் கூறினார்.

அடுத்து வரும் தினங்களில் அகதி முகாம்களின் எண்ணிக்கை குறையலாம். வெளியேறும் அகதிகள் நண்பர்கள், உறவினர்களின் வீடுகளில் வாழ்ப்போகிறார்கள். இருப்பினும் அனைவருக்கும் 6 மாதகாலம் உலருணவு வழங்கப்படுமென்று அரச அதிபர் கூறியுள்ளார்.

இவர்களுக்கு அடிப்படையில் கூடாரம் (Teut) சமையலுபகரணங்கள் (kitchen uta ensils) வழங்கப்படவேண்டுமென அகதிகள் வேண்டுகின்றனர். பொதுவான இடங்களில் அவற்றைக் (கூடாரங்களை) அமைக்க வேண்டும். கடலிலிருந்து 500 மீற்றருக்குக் குடிமனைகளை அமைக்கமுடியாதென அரச அதிபர் கூறுகிறார். கடலோரப் பாதுகாப்புச் சட்டத்தின்படி 300 மீற்றருக்குள் குடிமனைகளை அமைக்க முடியாது என்றுங் கூறப்படுகிறது. யார் எதைக் கூறினாலும் மக்கள் நலன் கருதிக் கூறுகிறார்கள் என்பதை அறியலாம். ஆனால் வீடுகளையிழந்த 35,459 குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணிக்க நிலத்திற்கு எங்கு போவது? இது பாரிய பிரச்சினை, அகதி முகாம்களுக்கு நிவாரணப்பொருள்கள் வழங்கும் அம்பாறை கச்சேரி பாரபட்சமாக நடக்கக் கூடாதென புலிகளின் மட்டு.அம்பாறைப் பொறுப்பாளர் கௌசல்யன், மாவட்டப் பொறுப்பாளர் குயிலின்பன், ஊழியர் சங்கத்தலைவர் எஸ்.லோகநாதன் போன்றோர் வேண்டுகோள் விடுக்கின்றனர். இயல்பு வாழ்க்கை திரும்பும்வரை அகதிகளிலும் பாரபட்சம் காட்டாமல் நிருவாகத்தை நடத்துவது காலத்தின் அவசியமாகும். ✪


சுனாமியின் பேரலையின் தாக்கத்தினால் அம்பாறை திருக்கோவில் கிராமத்தின் சிதைந்த தோற்றம்...

**இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம்**

# மே மாதத்துக்கான கோதுமை மா யாழ்.கூட்டுறவுச் சங்கத்தில் விநியோகம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணப் பொருள்களுக்குரிய கோதுமை மாவை யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் விநியோகித்து வருகின்றது.

கடந்த ஆண்டு மே மாதத்திற்குரிய 113 ஆவது 'ஏ','பி' முத்திரைப் புள்ளிகளுக்கு வழங்கப்படவேண்டிய கோதுமை மாவினை விநியோகிக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகச் சங்கத்தின் தலைவர் சூ.சிறில் தெரிவித்தார்.

மே மாதத்திற்கு வழங்கப்படவேண்டிய மாவினை, போதியளவு மா சங்கங்களிற்கு வந்துசேராததினால் சங்கத்தின் கிளைகள் ஊடாக மட்டுப்படுத்தப்பட்ட அளவிலும் கட்டம் கட்டமாகவுமே விநியோகிக்க வேண்டியிருப்பதாகச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

27,31,32,35,28,22, ஆகிய சங்கக்கிளைகளுக்கு முதற்கட்டமாகக் கோதுமை மா சங்கத்தினால் நேற்று அனுப்பி வைக்கப்பட்டிருந்ததாகவும் இடம்பெயர்ந்த மக்கள் கடந்த மே மாதத்திற்கான கோதுமை மாவை இக்கிளைகளில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)


**வாழ்த்துகின்றோம்**



இன்றைய தினம் அகவை 80ஐ நிறைவாக்கும் அன்னை
**சிவத்தமிழ்ச் செல்வி**
**தங்கம்மா அப்பாக்குட்டி J.P.**
அவர்கள் நீடூழிகாலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வலி. வடக்கு பிரதேசசபை, உப அலுவலகம், தெல்லிப்பழை.
(40535) (43-14)

நூலகப் பொறுப்பதிகாரி, உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.



**LONDON ENGLISH COLLEGE**
No. 105, Arasady Road, Jaffna.

ஆங்கிலத்தில் அடிப்படை அறிவே இல்லாதவர்கள் கூட ஆங்கிலத்தில் பேச்சாற்றலுடன் மிகச்சிறந்த அறிவு பெற...

நிருபிக்கப்பட்ட உலகத்தரம் வாய்ந்த பயிற்றுவித்தல் நுட்பங்களுடன் இலகுமுறைப் பயிற்சி நெறிகள்

உங்கள் கல்வித்தகுதி மற்றும் தேவைக்கேற்ப பின்வரும் மூன்று மட்டங்களில் விரும்பியவற்றை நீங்களே தேர்வு செய்யுங்கள்!

**Level 1** ஆங்கிலம் எழுத, உச்சரிக்க, வாசிக்க..

**Level 2** ஆங்கில வாக்கிய அமைப்பு முறைகள்.

**Level 3** ஆங்கில பேச்சு, எழுத்தாற்றல், புரிந்து கொள்ளல், குழுநிலை உரையாடல் முதலிய பயிற்சிகள்

இவற்றுடன், A/L General English Literature Classes for Grade 10 & 11

ஆரம்பம் 10,12-1-2005

U.K. இல் High-Tech நிறுவன ஏற்பாட்டில் BA, BBA, BSc, MA, MBA, MSc போன்ற பட்டபடிப்பகளுக்கும் Holiday Working Permit இற்குமான ஆங்கில தகமையூட்டல் வகுப்புக்களுக்கும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு 021-222-5889, 0777-252180, 077-6910072



**சமையலுக்கு ஆள் தேவை**

★ சமையல்காரர்
★ சமையல் உதவியாளர்
★ ரீ மேக்கர்
★ ரொட்டி மேக்கர்
★ சப்ளையாள்கள்

உடன்தொடர்புகளுக்கு:
**திறீ ஸ்ரார் ஹோட்டல்**
இல.162,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.7125

சி-40275)



**G.A.Q. பேராதனை 2006**

★ இதற்குரிய பல்கலைக்கழக விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது.
★ பதிவுகளைத் தொடர்ந்தும் எமது நிறுவனத்தில் மேற்கொள்ளலாம் என அறியத்தருகிறோம்.
★ இதற்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகியுள்ளன.
★ விண்ணப்பப்படிவங்களையும் விவரங்களையும் நேரில் பெற்றுக்கொள்ளவும்.

குறிப்பு : யாழ். பல்கலைக்கழகத்திற்குரிய 1[St] in com., G.A.Q. விரிவுரைகளும் ஆரம்பமாகியுள்ளன.

விவரங்களுக்கு :
**S.அருள்நங்கை**
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்.
(40536)



**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 2141014 இலிருந்து 2157846 வரை

சீட்டிழுப்பு இல. 1570
திகதி 05.01.2005

வெற்றி எண்கள்
**13 37 40 44 49**

போனஸ் எண் **33**

ஜக்பொட் பரிசு ரூபா.**33,54,800/-** வெல்லப்பட்டுள்ளது

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்த பரிசுத்தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 33,54,800/- | 33,54,800/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 1,00,000/- | 2,00,000/- |
| 4 | 104 | 10,000/- | 10,40,000/- |
| 3 | 5,159 | 500/- | 25,79,500/- |
| 2 | 85,667 | 20/- | 17,13,340/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த இலக்கம் 13 (போனஸ் எண் தவிர்ந்து) | 1,05,395 | 10/- | 10,53,950/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ.1,04,41,590/-

இந்த சனிக்கிழமை ஜக்பொட்
**Rs. 15,00,000/-**

தொடர் இல. 3075193 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுக்கள் 2005 ஜனவரி 08 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

சனிக்கிழமை அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் சைக்கிளை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2146113-5-09
2142562-6-22
2149016-7-27
2156448-6-94
2143020-4-58

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.



**IDM**
The Nation's ICT Academy

**IDM (PVT) LTD.**
**Authorized ICT Education**
**JAFFNA Centre**

GIT
Be brave and try new things
Global Info

**மாபெரும் இலவசக் கணனிக் கருத்தரங்கு**

சர்வதேச தரம் வாய்ந்த எமது நிறுவனம் யாழ்மண்ணில் கால்பதித்து 3 மாத காலப்பகுதியினுள் பல்வேறுபட்ட கற்கை நெறிகளை யாழ் மாணவர்களுக்காக அறிமுகப்படுத்தி அதில் மாபெரும் வெற்றியை கண்டுள்ளது
இரண்டாம் கட்டமாக மீண்டும் பல்வேறு வகையான சர்வதேச தரக்கற்கை நெறிகள் உங்களுக்காக அறிமுகப்படுத்துகின்றது.

- 2004 ம் ஆண்டு O/L பரீட்சை தோற்றிய மாணவர்களுக்கான விசேட கற்கை நெறி தொடர்பான விளக்க உரை
- Metro politan University - UK பல்கலைக்கழகத்தின் NCC பட்டப்படிப்பினை யாழ்மண்ணில் கற்பது தொடர்பான விளக்க உரை
- Microsoft நிறுவனத்தின் MCP, MCSE கற்கை நெறி தொடர்பான விளக்க உரை.
- எமது நிறுவனத்தின் பல்வேறு தரப்பட்ட சர்வதேச கற்கை நெறி தொடர்பான விளக்க உரை.

*காலம்: 08-01-2005 காலை 11.00*
*இடம்: நெல்லை முருகன் திருமண மண்டபம் நெல்லியடி,*

*காலம்: 09-01-2005 காலை 10.00*
*இடம்: நாவலர் கலாச்சார மண்டபம், யாழ்ப்பாணம்.*

**எமது நிறுவனத்தினால் உங்களுக்கு கிடைக்கும் பயன்கள்**

- சர்வதேச தரத்திலான Diploma, Degree கற்கை நெறிக்கான சான்றிதழ்கான, பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு
- எமது நிறுவனத்தினூடாக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வேலைவாய்பினை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு
- வெளிநாடுகளில் மேற்படிப்பினை தொடரும் வாய்ப்பு

இது ஒரு இலவசக்கருத்தரங்கு ஆகையால் அனைத்து தரப்பினரும் வருகை தந்து உங்களுடைய எதிர்காலை வாழ்க்கையின் சிறந்த அடித்தளத்தை எமது நிறுவனத்தின் ஊடாக அமைக்கின்ற வழியினை இலகுபடுத்திக் கொள்ளுங்கள்.

**EXAM FOR DICS**

DICS bach(I,II,III,IV,V) மாணவர்களுக்கு உரிய Semister I இற்குரிய பரீட்சைகள் அனைத்தும் 08/01/2005 அன்று காலை 09.00 மணிக்கு யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறும்.
அனைத்து DICS மாணவர்களையும் தவறாது சமூகமளிக்குவும்

451,K.K.S Road, Jaffna Tel: 0214591398

## D.C.M.

வணிக, முகாமைத்துவப் பட்டப்படிப்புக் கல்லூரி

பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(ஆனைப்பந்தி - இந்து குருகுலம் முன்பாக)

## A/L - 2007

கலை வர்த்தகம்

ஆரம்பம்:

09 ஜனவரி 2005 - ஞாயிறு காலை 8.00 மணி

பொருளியல் - வரதராஜன்
கணக்கீடு - பாலவாசன்
வணிகக்கல்வி - உமாகாந்த்
தமிழ் - தமிழ்ந்திரன்
இந்துநாகரீகம் - ஸ்ரீஸ்
அளவையியல் - சுதன்
புவியியல் - குமரன்
ஆங்கிலம் - நிஷாந்தன்

இயக்குனர்
S. வரதராஜன்



## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHO THERAPY)

இப்பொழுது யாழ்ப்பாணத்தில் 08.01.2005 - 12.01.2005 வரை
முன்கூட்டியே பதிவு செய்யவும்

இளைஞர்களே!

★ சக்தி குறைவு ★ ஞாபக மறதி ★ பயம் ★ நடுக்கம்
★ நித்திரைக் குறைவு ★ ஆண்மைக்குறைவு ★ நீரிழிவுநோய்

என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்! ஆண்மைச் சக்திக குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றிபெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்றுப் பு,ரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

குறிப்பு: இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்.

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப்பெற்ற
பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P.ஆறுமுகம் S.M.P.
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205
T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)

(சி-402077)


## வணங்குகின்றோம்



இன்றையதினம் அகவை எண்பதை
நிறைவுறும் அன்னை
சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி
**தங்கம்மா அப்பாக்குட்டி**
அவர்களை வாழ்த்தி
வணங்குகின்றோம்.

பழைய வீதி,
கோப்பாய். (சி-40279)

ஸ்ரீ சுப்பிரமணிய கோட்டம்
சிறுவர் இல்லம்.

## முத்தான தாயின் முத்துவிழா



பஞ்சமும் பசியும் போக்கி
பரிவுடன் சேவை செய்து
தஞ்சம் என்று வந்தோர் தம்மை
தயை புரிந்து அருள்பாலித்து
நெஞ்சினில் ஈரம் தேக்கி
நிகரிலாப் பணி புரிந்து
கொஞ்சியே குழந்தை மற்று
குவலயத்தோர்கள் போற்ற
வெஞ்சமர் புயல் காத்தோடு
வேகமாய் அலை அடித்து மோத
கொஞ்சமோ துயரில் மாண்டோம்
கொதிக்குது மனது நொந்து
நெஞ்சினில் சோகம் முட்டி
நிறைந்திட்டபோதும் தாயே
புதிய நல் நதியா உம்மை
போற்றிட மறக்கிலோம் யாம்.

- ஆக்கம் : விகடகவி.


புதிய
நதியா
நகை மாடம்

இல. 103, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
☎: 021-3281


## நலன்புரி நிலைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச ஆயுதப்படையினர் திருகோணமலையில் உள்ள நலன்புரி முகாம்களினுள், அவற்றைப் பொறுப்பேற்குமுகமாக ஆயுதங்களுடன் பிரவேசித்தனர் என எனக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

அவ்வாறு ஆயுதப்படையினர் பிரவேசிப்பதை அந்த முகாம்களில் தங்கியுள்ள மக்கள் எதிர்க்கின்றனர். இதனால், சில நிலையங்களில் பதற்றநிலை காணப்படுவதாவும் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நலன்புரி முகாம்கள் இதுவரை, தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளினால் மாவட்ட நிலையில் அரச அதிகாரிகள் மற்றும் விடுதலைப் புலிகள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளன.

திருமலை மாவட்டச் செயலணி தனது கடைசிக் கூட்டத்தில் ஒவ்வொரு நலன்புரி முகாமுக்கும் முகாமை நிர்வகிக்கும் குழு ஒன்றை நியமித்திருந்தது.

வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ்பேசும் மக்கள் தங்கியுள்ள நலன்புரி முகாம்கள் எல்லாம், பாதிப்புற்றவர்கள் குறித்து அனுதாபம் கொண்டுள்ள சிவில் சமூகத்தின் முகாமைத்துவத்தின் கீழ்தான் இருக்கவேண்டும்.

இலங்கை ஆயுதப்படைகள் 100 சதவீதம் சிங்களவர்களைக் கொண்டுள்ளது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன். கடந்த இரண்டு தசாப்த கால யுத்தத்தில் அரச ஆயுதப்படையினரால் லட்சக்கணக்கான தமிழ்ப் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நினைவுகளை மறந்துவிடக்கூடிய நிலை இன்னும் ஏற்படவில்லை.

வடக்கு - கிழக்கில் நலன்புரி முகாம்களின் நிர்வாகத்தை ஆயுதப்படையினர் பொறுப்பேற்பது, எதிரிடையான பலனைத் தருவதுடன், வடக்கு - கிழக்கில் பேரழிவினால் ஏற்பட்டுள்ள விளைவுகள் தொடர்பாக மாவட்ட நிலையில் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள ஒழுங்குகளைப் பலவீனமடையச் செய்வதாகவும் அது அமையும். எனவே, வடக்கு - கிழக்கில், தங்கள் உத்தரவை ரத்துச்செய்யும்படி கேட்டுக்கொள்கின்றேன். - இவ்வாறு சம்பந்தன் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (எ-க-4-12)


### விற்பனைக்கு

HONDA ACCORD CAR - JAPAN
உடன் விற்பனைக்குண்டு. (பெற்றோல்)
தொடர்புகளுக்கு:
கீர்த்தனா களஞ்சியம்
29, இராமலிங்கம் வீதி, (40542)
திருநெல்வேலி. T.P: 071 2522847



### நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

குளிரூட்டப்பட்டது
குதூகல ஆரம்பம்
கா.நேரம்: 10.30, 2.30, 6.30.,9.30 (பு.நே.)
இலங்கை மண் தாவடியின் மைந்தன்
ஜெய் ஆகாஷ், ஸ்ரீதேவிகா, வாணி நடித்த




ராமகிருஷ்ணா

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின
அதிரடி வெளியீடு

### நிரஞ்சனாஸ் சங்கானை

விக்ரம், த்ரிஷா நடித்த
சாமி (நிலம்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.) AIR FORCE -1

### ராஜா யாழ்ப்பாணம்

இன்றுமுதல் ❑ விஜய் ❑ ஸ்நேகா
வடிவேல் நடித்த
வசீகரா
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

### நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின
வெளியீடாக
❑ அர்ஜுன் (இருவேடம்)
❑ சாயாசிங் ❑ லைலா
❑ வடிவேல் நடித்த
ஜெய் சூர்யா
தினசரி 3.00. 7.00. 10.00 (பு.நே.)
(C/39654)



## பொருளியற் கல்லூரி

நாவலர்றோட், யாழ்ப்பாணம். (இரு இடத்திலும்) கே.கே.எஸ்.றோட், இணுவில்.

A/L 2007

மீண்டும் ஒரு புதிய பிரிவு
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம் : 08.01.2005 சனி

| A/L 2007 | யாழ். நகரில் | இணுவிலில் |
|---|---|---|
| பொருளியல் | வரதராஜன் | வரதராஜன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக்கல்வி | முரளி | முரளி |
| தமிழ் | மீரா | பாலா |
| இந்துநாகரீகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| அளவையியல் | R.P.சர்மா | R.P.சர்மா |
| புவியியல் | குமரன் | குமரன் |
| இந்துசமயம் | தரன் | தரன் |
| நாடக - அரங். | சுகந்தன் | சுதன் |
| கிறிஸ்தவம் | வசந்தன் | வசந்தன் |
| அரசியல் | றஜீவன் | றஜீவன் |
| வரலாறு | பத்மன் | பத்மன் |
| ஆங்கிலம் | நிஷாந்தன் | நிஷாந்தன் |

இப்பிரிவுக்கு உங்கள் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளவும்.
(40469)


# மரண அறிவித்தல்கள்

## வல்லிபுரம் தாமோதரம்பிள்ளை

(ஓய்வுபெற்ற ஊழியர், யாழ்.போதனா வைத்தியசாலை)



மாசார்பளையைப் பிறப்பிடமாகவும் கைதடி - நுணாவிலை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது சுன்னாகம் தெற்கில் வசித்து வந்தவருமான வல்லிபுரம் தாமோதரம்பிள்ளை நேற்று (06.01.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் -சுந்தாலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சரவணமுத்து - சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சிவபாக்கியத்தின் அருமைக் கணவரும் காலஞ்சென்ற நேசம்மா மற்றும் நல்லம்மா ஆகியோரின் நேசமிகு சகோதரனும் கதிர்காமநாதன் (யாழ்போதனா வைத்தியசாலை), கமலநாதன் (ஜேர்மனி), கணேசநாதன் (டென்மார்க்), கருணைநாதன் (ஜேர்மனி), சிவரஞ்சினி, கமலரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சரோஜினிதேவி, றமணி (ஜேர்மனி), சர்மிலா (டென்மார்க்), சுதா (ஜேர்மனி), ஸ்ரீகுமரன் (ஆசிரியர், பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரியங்கன், அகிலங்கன், பிரியங்கா, மயூரிக்கா, றம்மியா, கார்த்திக், றஷ்மியா, றமீனா, றொஷான், ஸ்ரீபிரியன், சிவ இனியன், சிவசங்கவி, காந்தரூபன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தா.கதிர்காமநாதன் (மகன்),
சு.ஸ்ரீகுமரன் (மருமகன்).

*முருகேச பண்டிதர் வீதி,*
*சுன்னாகம் தெற்கு.*
(40545)(29-14-17)

## கந்தையா நாகரத்தினம்

(சின்னதங்கச்சி)

பாண்டியந்தாழ்வைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நாகரத்தினம் நேற்று (06.01.2005) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் கமலா (ஜேர்மனி), சிவராசா (கனடா), இந்திரன், ரவி (ஜேர்மனி), றஞ்சி (கனடா), விமலேந்திரன் (ஜேர்மனி), ஞானேந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் விஜயலக்ஷிமி (கனடா), மதுரநாயகம் (ஜேர்மனி), பிறேமளா காலஞ்சென்ற குமரேசன் (கனடா) மற்றும் வசந்தா (ஜேர்மனி), கோமளா (ஜேர்மனி), வினோதினி (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற பூரணம் மற்றும் இராசமணி, ஞானமணி, மனோன்மணி, செல்லத்துரை (ஐயர்கடை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2005) வெள்ளிக்கிழமை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3 மணியளவில் துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன் : ரவி (ஜேர்மனி),
இந்திரன்,
செல்லத்துரை (மாமா- ஐயர்கடை).

*60, சுவாமியார் வீதி,*
*கொழும்புத்துறை,*
*யாழ்ப்பாணம்.* (40543)(29-14-17)

## சபாரட்ணம் அருளம்பலம்

(ஓய்வுபெற்ற பல் டாக்டர்)

அரியாலையைச் சேர்ந்த சபாரட்ணம் அருளம்பலம் அவர்கள் நேற்று (06.01.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சம்பந்தர் சபாரட்ணம் - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் இராசகாரியர் - மனோன்மணி தம்பதிகளின் மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (பொறியியலாளர்), காலஞ்சென்ற மகேஸ்வரி விஸ்வநாதன், டாக்டர் முத்துக்குமாரசாமி (புத்தூர்), காலஞ்சென்ற மகாதேவா (ரெலிக்கொம்), பரமேஸ்வரி ரகுநாதன் (லண்டன்), காலஞ்சென்ற கமலாம்பிகை, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.01.2005) வியாழக்கிழமை பி.ப. 5 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் அரியாலை சித்துப்பாத்தி மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சரஸ்வதி (மனைவி).

(40544)(29-14-17)

## வடமராட்சி கிழக்கில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் மற்றும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கடல் பெருக்கினால் இடம்பெயர்ந்தோர் மீண்டும் சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்து இயல்பு வாழ்வை ஆரம்பிக்க வேண்டும். இதற்கு வசதியாக இடம்பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் தற்காலிகமாகவேனும் குடியமர்ந்த ஏற்பாடு செய்யவேண்டும் எனக் கூட்டத்தில் கலந்துகொண்டோர் தெரிவித்தனர்.

இதனையடுத்து, மேற்படி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களில் சேதமடையாமல் உள்ள வீடுகளில் ஒரு தொகுதி குடும்பங்களையும் -

தலா நூறு பேர் தங்கக்கூடியதாக தற்காலிக நலன்புரி நிலையங்களில் ஏனையோரையும் - குடியமர்த்துவது என்றும் - தீர்மானிக்கப்பட்டது. இந்த நலன்புரி நிலையங்கள் சகல வசதிகளையும் கொண்டதாக அமையும் என்றும் - கூறப்பட்டது.

இதற்கிடையில் - வடமராட்சி கிழக்கு மக்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கையின் முதற்கட்டமாக, பளை மத்திய கல்லூரியில் தங்கியிருந்த ஒரு தொகுதி குடும்பங்கள் நேற்று அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. (எ-352)

## இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்துள்ளன.

குறிப்பாக, அமெரிக்க இராணுவத்தினர் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளனர். அமெரிக்கப் படையினரின் வருகை சந்தேகக் கண்கொண்டே அவதானிக்கப்படுகின்றது. இந்தநிலையில், அமெரிக்கத் துருப்புகள் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுமா என செய்தியாளர் மாநாட்டில் கேள்வி எழுப்பப்பட்டது.

இதில் சந்தேகப்படுவதற்கு எதுவுமே இல்லை. சுனாமி அனர்த்தம் இந்தியாவையும் கடுமையாகத் தாக்கியது. ஆனாலும், இந்திய அரசு அன்றைய (ஞாயிறு 26) தினம் மாலையிலேயே இந்திய இராணுவத்தை நிவாரணப் பொருள்களுடன் இங்கு அனுப்பிவைத்தது. இது எந்த வித எதிர்பார்ப்பும் இன்றி வழங்கப்பட்ட மனிதாபிமானதும் உணர்வுபூர்வமானதுமான உதவி. நிவாரணப் பணிகளில் ஆகக் கூடுதலான பங்கை இந்தியா வழங்கியுள்ளது; தொடர்ந்தும் வழங்கிவருகின்றது. இந்தியாவுக்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.

அதேபோன்று, வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளும் இலங்கை, இந்திய இராணுவங்களுடன் இணைந்து மீட்புப் பணிகளில் செயற்படுகின்றனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் மீட்புப் பணிகள் சிறப்பாகவே இருக்கின்றன - என இராணு வப் பேச்சாளர் பிரிகேடியர் தயாரத்னாயக்க தெரிவித்தார். (க-4)

## ஐ.நா. செயலர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சு.ப.தமிழ்ச்செல்வன் நேரில் சென்று அவரை வரவேற்பார். இந்த விஜயத்தின்போது அவர் புலிகளின் தலைமையையும் சந்தித்துப் பேசுவார் என்று தெரிவிக்கப்பட்டது. (4-7-12)

## உயிரிழந்தோருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கான நிதியினை புனர்வாழ்வு அமைச்சிடமிருந்தே பெறப்பட வேண்டும் என்றும் அந்தச் சுற்று நிருபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (4-7)

## நிவாரணப் பொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உதவிப் பொருள்களை அனுப்பவிரும்பும் நிறுவனங்களிடமிருந்து ஒருதடவை - ஒரு தொகுதியில் - 10 ஆயிரம் கிலோவுக்கு மேற்படாத எடையுள்ள பொருள்கள் மட்டுமே பொறுப்பேற்கப்படும். சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் தமது நிவாரணப் பொருள்களின் எடையை சரிவரக் கணிப்பிட்டு உத்தரவாதப்படுத்தி விமான நிலையத்தில் அவற்றைக் கையளிக்கமுடியும்.

விமான நிலையத்தில் பொருள்களைப் பொறுப்பேற்று, அவற்றை விமானத்தில் ஏற்றுதல் மற்றும் கொண்டுசென்று இறக்குதல் வரையான சேவைகளை மட்டுமே எக்ஸ்போ நிறுவனம் கட்டணமின்றி மேற்கொள்ளும்.

இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து அம்பாறைக்கு காலை 6 மணிக்கும் பிற்பகல் 4.15 மணிக்குமாக இரண்டு சேவைகளும் -

வீரவலவிற்கு காலை 8.30 மணிக்கு ஒரு சேவையும் -

மட்டக்களப்பிற்கு முற்பகல் 11 மணிக்கு ஒரு சேவையும் -

யாழ்ப்பாணத்திற்குப் பிற்பகல் 1.30 மணிக்கு ஒரு சேவையும் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

பொருள்களை அனுப்பும் நிறுவனங்களைச் சார்ந்த பிரதிநிதிகள் கூட அழைத்துச் செல்லப்படுவர்.

இதுதொடர்பான மேலதிக தகவல்கள் தேவைப்படுவோர் 0777 186519 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஜெராட் ஜான்ஸ் என்பவருடனும் 0772 228821 என்ற இலக்கத்தில் ஷிராஜ் முஹமட் என்பவருடனும் தொடர்புகொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

'எக்ஸ்போ' விமான சேவை நிறுவன அலுவலகங்களிலும் விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். (ஐ)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்தியட்சகரும் கலந்துகொண்டனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் சார்பில் ஹென்லைபேட், கெலின் பேர்க் ஆகியோர் பங்குபற்றினர்.

நலன்புரி நிலையங்களை நடைமுறைப்படுத்துவதில் வழமையான நடமுறைக்கு மேலதிகமாக இராணுவத்தின் தரப்பில் ஒரு பிரதிநிதியும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் தரப்பில் ஒரு பிரதிநிதியும் கிராமசேவையாளர், சமுர்த்தி அலுவலர் ஆகியோருடன் முகாமில் தங்கியுள்ள மக்கள் பிரதிநிதிகளில் மூவர் ஆகியோர் இணைந்து நலன்புரி நிலையங்களை நிர்வகிப்பர் என்றும் - இச்சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டது.

பின்னர் இராணுவ உயர் அதிகாரிகளும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் இணைந்து நலன்புரிநிலையங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களின் குறைகளைக் கேட்டறிந்தனர். (4-12)

## யுத்த முனைப்பு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளுடன் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் காரணமாக சகஜநிலை உருவானது.

நாட்டை மீளக் கட்டியெழுப்ப நாம் தலைப்பட்டபோது, இயற்கை எமது நாட்டைப் பாரிய அழிவுக்கு உட்படுத்திவிட்டது.

இனி இந்த நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு நாம் அனைத்துத் தரப்பினரும் அர்ப்பணிப்புடன் இணையவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

கடந்த ஐம்பது வருடகாலமாக ஒருவர் மீது ஒருவர் சேறு பூசிக்கொண்டு இந்த நாட்டை அழித்தோம். எமக்குள் இருந்த பேதங்கள் காரணமாக எம்மால் கரைசேரமுடியாமல் இருந்தது.

இன்று நாம் அனைவரும் புதிய யுகம் நோக்கிப் பயணிக்க வேண்டிய காலகட்டத்தில் இருக்கிறோம்.

எமது பேதங்கள் காரணமாக அழிவுற்ற நாட்டை இயற்கையும் அழிக்கத் தீர்மானித்தது. இந்த அழிவைக் கருத்திற்கொண்டு புதிய ஒரு பரிமாணத்தை நோக்கி நாம் பயணிக்க வேண்டும். அதற்கு உரிய காலம் எம்மை அண்மித்துவிட்டது. இந்தச் சந்தர்ப்பத்தை தவறவிட்டால், எம்மால் இனி கரைசேரமுடியாது. மீண்டும் படுகுழியில் விழுவதைத் தவிர வேறொன்றும் நடக்காது.

படுமோசமான அரசியல் சாக்கடைக்குள் மூண்டியடித்த நாம், அவற்றைத் துறந்து சரியான பாதையில் பயணிக்க வேண்டும். வேறுபாடுகளைக் களைந்து அபிவிருத்திக்கு என 15 வருடங்களை இலக்காகக் கொண்டு, சரியான பாதையைத் தெரிவுசெய்து, அதற்குரிய சிறந்த அரசியல் வட்டத்தை உருவாக்கிச் செயற்படுவோம். இதுவே நாட்டைத் துரித கதியில் கட்டியெழுப்புவதற்குச் சிறந்த வழியாக அமையும் என நான் நம்புகிறேன்.

ஏழ்மையையும், பொருளாதார வீழ்ச்சியையும் இல்லாதொழிக்க இதுவே சிறந்த வழியாக அமையும். இதை விடுத்து, இந்தச் சூழ்நிலையைத் தமது அரசியல் சுயலாபங்களுக்குப் பயன்படுத்த நாம் எத்தனித்தால் மோசமான விளைவுகளுக்கு முகங்கொடுக்க நேரும்.

சுனாமி அனர்த்தத்தால் தமது உயிர்களை அர்ப்பணித்த எமது உறவுகள் புதிய இலங்கையைக் கட்டியெழுப்ப எமக்குக் கட்டளையிட்டுள்ளார்கள். அதைச் செய்யவேண்டிய தலையாய கடமை எமக்கு உள்ளது.

வடக்கு - கிழக்கு - தெற்கு என்றோ, தமிழர், சிங்களவர், முஸ்லிம் என்றோ பேதமின்றி சகலரையும் அழிவுக்கு உட்படுத்தியுள்ள சுனாமி அலைகளில்கோரம் அனைத்து மக்களையும் சிந்திக்க வைத்துள்ளது.

இது போன்ற மட்டுமன்றி பல்வேறு அழிவுகளால் பாதிக்கப்பட்ட போதும் பல நாடுகள் மீண்டும் எழுந்துநின்ற வரலாறுகள் உண்டு.

எமது அழிவுகளைக் கண்ணுற்றதால் சர்வதேச சமூகம் பாகுபாடின்றி எமக்கு உதவ முன்வந்துள்ளன. இதைச் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொண்டு எமது பயணத்தைத் நாம் தொடரவேண்டும் - என்றார் அவர். (எ-க-3)

## புலிகளின் கட்டுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளது.

அரசியல் சார்பின்றி மக்களுக்குத் தேவையான மனிதாபிமான நிவாரண உதவிகளை அமெரிக்கா வழங்கும் - என்றும் தெரிவித்தார் எர்லி.

சுனாமியால் பாதிக்கப்பட்ட இலங்கையின் கரையோரப் பகுதிகளில் மனிதாபிமானப் பணிகளிலும் மீள்கட்டுமானப் பணிகளிலும் ஈடுபடுவதற்கென ஏற்கனவே ஒருதொகுதி அமெரிக்கத் துருப்பினர் இலங்கை சென்றடைந்துள்ளனர். இன்னும் ஒருதொகுதியினர் விரைவில் அங்கு செல்லவுள்ளனர். 1500 அமெரிக்கப் படையினர் இருவிமானந்தாங்கிக் கப்பலுடன் இலங்கையில் பணியில் ஈடுபடுவர் என அதிபர் புஷ் அறிவித்திருந்தார்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அமெரிக்கப் படையினர் ஏற்கனவே தமது பணிகளை ஆரம்பித்துள்ளனர். ஆனால், அவர்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட இடங்களில் பணியாற்றமாட்டார்கள் என்ற எதிர்பார்ப்பே நிலவிவந்தது. விடுதலைப் புலிகள் அமைப்பை அமெரிக்கா இன்னமும் பயங்கரவாத அமைப்புகள் பட்டியலில் வைத்துள்ளமை இதற்குக் காரணமாகும்.

இந்தநிலையிலேயே, அரசியல் வேறுபாடின்றி புலிகளின் பகுதிகளிலும் அமெரிக்கப் படையினர் சேவையாற்றுவர் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் தொடர்பான அமெரிக்க நிலைப்பாட்டில் இதுவும் முக்கிய நகர்வு என்று அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (க-4)


BRIGHTMAN
நாவலர் வீதி, யாழ். நகர்.
A/L 2007 கணித, உயிரியல்
PHY: திரு.ஜெயசீலன்
CHE: திரு.டயஸ்
C.Maths: திரு. துரையப்பா
BIO: திரு.ஞானேந்திரன்
(40517) ஆரம்பம்: 08.01.2005 Sat 5.00p.m.

CATWAS.COM
புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு -1 : 10.01.2005
பிரிவு -2: 15.01.2005
Diploma Courses
MS OFFICE 1750 /=
HardWare 1500/=
Video Mixing 2500 /=
DTP 2000/=
Webpage 3000/=
Certificate Courses
★ O/L பரீட்சை எடுத்த மாணவர்களுக்கு!
உங்கள் பெறுபேறுகள் வரும் காலப்பகுதிக்கு முன்னர் உங்கள் கற்கைநெறிகளைப் பூர்த்திசெய்ய முடியும்.
★ MS OFFICE பாடநெறியில் இணைவோருக்கு மட்டும் அனுமதிக் கட்டணம் இல்லை.
★ MS OFFICE பாடநெறியில் கற்கும் மாணவர்களுக்கு Internet & E-mail இலவசம்.
2004 ஆம் ஆண்டு நடைபெற்ற சான்றிதழ் வழங்கும் வைபவத்திற்குச் சமுகமளிக்காத மாணவர்கள் அனைவரும் தமது சான்றிதழ்களை 30.01.2005 இற்கு முன்னர் பெற்றுச்செல்லும்படி கேட்டுக்கொள்கின்றோம்.
No. 26, Somasundram Avenue, Chundikuli, Jaffna.
(40252) T.P.: 021 222 3805

A/L 2007 LOGIC
பிரிவு I - Sat. - 9 a.m. 08.07.05
பிரிவு II - Sat. - 11 a.m.
By: P.கமல்
(40541) விசேட ஆசிரியர்
BRIGHTMAN நாவலர் வீதி.

இன்று பிரத்தியேக வகுப்பு
A/L 2007
பொருளியல் S. வரதராஜன்
07 ஜனவரி 2005 - மாலை 4.00 மணி
D.C.M.
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
(ஆனைப்பந்தி - இந்து குருகுலம் முன்பாக)

SKY COMPUTERS (PVT) LTD.
Affiliated with Irish International University (U.K)
No, 89, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel: 021 - 4590325 : Fax: 021 - 4590325
DIPLOMA COURSES DURATION 3 MONTHS
MS OFFICE XP
DESK TOP PUBLISHING
COMPUTERISED ACCOUNTING
AUTOCAD 2004
HARDWARE TECHNOLOGY
DIPLOMA COURSES DURATION 6 MONTHS
INFORMATION TECHNOLOGY
WINDOWS INTERNET E-MAIL HARD WARE அறிமுகம்
MS-Office 2000/=
CERTIFICATE COURSES DURATION 1 MONTHS
MS-WORD
MS-EXCEL
MS-ACCESS
MS-POWER POINT
PHOTOSHOP 11
PAGEMAKER 7.0
CORELDRAW 11
INTERNET TECHNOLOGY
QUICK BOOKS
MYOB
FINANCIAL PLANNING
DATA BASE MANAGEMENT
WINDOWS XP
CERTIFICATE COURSES DURATION 3 MONTHS
VISUAL BASIC 6.0
நிறுவனத்தில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் இலவசம்
O/L பரீட்சையை முடித்து பெறுபேறுகளை காத்துக் கொண்டிருக்கும் மாணவர்களே!
உங்கள் நலன் கருதி அனைத்து பாடத்திட்டத்திற்குமான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கவுள்ளது.
குறுகியகாலத்திற்குள் நீங்கள் விரும்பிய பாடநெறியை கற்றுத் தேற உடன் விரையுங்கள்
மற்றைய நிறுவனங்களை விட முற்றிலும் வேறுபட்ட பயிற்சி முறை
E - mail : skycom@WOW.lk
(கச்சேரிக்கு அருகில்)
இலகுவான கட்டணமுறை, தரமான ஆசிரியர்கள்
Today you learn Tomorrow you lead

தொழிற் பயிற்சிகள்
வெளிநாடுகளில் இலகுவான முறையில் வேலைவாய்ப்பைப் பெறக்கூடியவாறு பயிற்சி அளிக்கப்பட்டு பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
✧ RADIO, T.V., VIDEO DECK REPAIRING சகல இன றேடியோ, ரீவி, டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள், Computer Monitor UPS, Printer, Scanner என்பன திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சி அளிக்கப்படும். (காலம் 10 மாதங்கள்)
✧ MOTOR REWINDING AND ELECTRICAL WIRING சகல இனமோட்டார், (F) பான், ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு SINGLE PHASE, THREE PHASE இணைப்புமுறை என்பன பயிற்சி அளிக்கப்படும். (காலம் 7மாதங்கள்)
✧ AIR CONDITIONING and REFRIGERATION சகல இன குளிர்சாதனப் பெட்டி மற்றும் எயர் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 7 மாதங்கள்)
✧ MOTOR CYCLE, WATER PUMP MECHANISAM சகல இன மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை என்பன ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 6 மாதங்கள்)
DIPLOMA IN ELECTRICAL & ELECTRONIC TECHNOLOGY (காலம் 12 மாதங்கள்)
புதிய பயிற்சிகள் ஆரம்பம்
10-01-2005 (கிழமை நாள்களில்), 09-01-2005 (சனி, ஞாயிறு நாள்களில்)
மேலதிக விவரங்களுக்கு: Jaffna Technical Institute
இலக்கம் 07, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3335, 077 3086716
(26-14-15) (39906)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
O/L பரீட்சைக்கு தோற்றியோர், ஏனையோருக்கானது
Diploma Courses
Diploma in MS Office 2003
Diploma in Desk Top Publishing
Diploma in Computer Programming
Diploma in Hardware Engineering
Diploma in Video Mixing
Internet & E-Mail
Children Programme
Certificate Courses
Ms Access, Ms Word
PhotoShop, Ms Excel
Visual Basic, Java
CorelDRAW, C++
PageMaker
Quick Books
அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
ஆரம்பம் 03/01/2005 காலை 9.00 மணி, 08/01/2005 காலை 9.00 மணி
குறைந்த கட்டணம், நிறைவான சேவை.
மேலதிக விபரங்களுக்கு
JAFFNA TECHNICAL INSTITUTE
No. 07, Palaly Road, Jaffna.
T.P: 222 3335, 0773086716


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.01.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.